ஸஞ்சிகை 17.

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.
REGISTERED
30 MAR 1907

பராபவஸு

ஆவணிமீ

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1906.

Copyright Registered.

Ready for Sale.

No. 3. Sri Vani Vilas Sanskrit Series.

Priyadarsika,

with a commentary and Bhûmikâ

BY

Pandit R. V. KRISHNAMACHARIAR.

Price As. 8. ***Postage extra.***

Action Songs, Songs on Object Lessons

AND

Kindergarden Stories.

(IN TAMIL)

BY

C. K. NARAYANASWAMI AIYAR, *Head Master' Government Girls, School, Madura.*

SECOND EDITION REVISED AND ENLARGED.

Price Annas 6 Postage Exclusive.

Apply to THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS, ***Srirangam.***

ஸ்ரீ

பகவத்கீதை வெண்பா.

வாதிகேஸரி

ஸ்ரீ அழகியமணவாள ஜீயர்

அருளிச் செய்தது.

இது சுமார் 700 வருஷங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட மிகவும் அருமையான நூல். கீதையிலுள்ள ச்லோகங்களுக்கு ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தை யனுசரித்து நேராக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மிக்க இனிமையான நடையில் அமைந்துள்ளது. பாராயணத்துக்கு யோக்யமானது. தமிழபிமானிகளும் மதாபிமானிகளும் ஒவ்வொருவரும் தவறாமல் வாங்கி வாசிக்கத் தகுந்தது.

சிறந்த தமிழ் வித்வான்களால் நன்றாகப் பரிசோதித்துக் குறிப்புரையுடன் மிகவும் நேர்த்தியாக வெண்மையான கடிதத்தில் டெமி 16 பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை மிகவும் ஸ்வல்பமாகவே எற்படுத்தப் பெற்றது.

முதலாவது ஷட்கமாகிய முதல் ஆறு அத்யாயம் இப்பொழுது வெளியாயிருக்கிறது. இரண்டாவது மூன்றாவது முறையே கூடிய சீக்கிரத்தில் வெளியாகும்.

முதல் ஷட்கம் பிரதி 1-க்கு விலை அணா 6
கித்தான் பைண்டு விலை அணா 8
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரே ஸமயத்தில் 50 பிரதிக்குக் குறையாமல் வாங்குபவர்களுக்கு 10-க்கு ஒன்று வீதம் பிரதிகள் இனாமாய்க் கொடுக்கப்படும்.

இதே புத்தகத்தை மிகவும் விலையுயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு, வெகு நேர்த்தியாக பைண்டு செய்து, கிலிட்டு அக்ஷரங்கள் போட்டு லைப்ரரி எடிஷனாக ஐம்பதே பிரதிகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

விலை பிரதி ஒன்று ரூ. 1

வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாஸத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்
புத்தகசாலை
ஸ்ரீவாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.

Opinions on the

Bhagavad Gita Venba.

The Hindu :—

This is a very rare and ancient Tamil work by the famous Sri Vaishnava Acharya Vadikesari Sri Alakia Manavala Jeer who is said to have lived soon after Sriman Vedanta Desika, if not his actual contemporary. The book before us is a very faithful and close rendering of the Gita, in accordance with the Bhashya of Sri Ramanujacharya, written in the simplest possible style without at the same time impairing the richness of the original. The sacred Venba metre is rightly chosen for the purpose and we find the author has almost succeeded in bringing out the force of the original. From a literary point of view as well, the poem is unrivalled and there is no doubt that the author has equalled, if not excelled, the renowned Pugalenthi in the ease of diction, flow of style and harmony of language. The first *shatkam* consisting of the first six chapters is now published and the second and third are promised at an early date. Very useful notes are given in the end for the first six chapters. The *Sri Vani Vilas Press*, Srírangam, is really to be congratulated for having unearthed this precious work from among the crumbling Palm-leaf Manuscripts and in having brought it out as the first of the Pocket Tamil Classics. Nothing more need be said about its get-up when it is mentioned that it is the *Sri Vani Vilas Press* publication. Considering the intrinsic merits of the work, the price *viz.*, **6 as.** per copy is very moderate.

The Madras Mail :—

We have received from the Sri Vani Vilas Press, Srirangam, a dainty little book entitled "Bhagavad Gita Venba," which is a very faithful and close rendering of the Gita in Tamil *Venba* metre. This instructive work, written by the famous Vadikesari

Alagia Manavala Jeer, a contemporary of Vedanta Desikar consists of 723 Stanzas divided into three parts, of which the first is now published. Great credit is due to the Proprietor of the Sri Vani Vilas Press for having brought to light this percious work; which has been lying hidden till now among a vast heap of crumbling palm-leaf manuscripts.

The Mysore Review :—

The publisher of the *Sri Vani Vilasini* has brought out in print a rare Tamil classic imbedded till now in palm-leaf manuscript. The very existence of the MSS. was unsuspected by the world of Tamil scholars, and so all the greater is the value of the precious find. The work is a masterly metrical rendering of the unique Bhagavad Gita, and its author is one *Sri* Manavala Jiyer who flourished about 400 years ago. Considering the difficulties inherent in a translation, and that too a metrical translation, of highly abtruse philosophical scriptures, it is a wonder to find the bare technique of the performance a *tour de fors* in literature. The Tamil *Venba* metre in which the author has chosen to clothe the translation, is a difficult one to succeed in, what with its structural difficulties, and general elusiveness. But those obstacles have only made the art of the master shine brighter, who besides has stuck to the sense of the original very closely and spiritedly throughout. The slim, tastefully-got-up volume is but the first of three separate parts to be published at intervals. Copious annotations by two noted Tamil Scholars of the day are a pleasing feature of the book.

Considering the nature and excellence of the work, we are sure it will find its way into the hands of all lovers of Tamil Literature in our country.

K. Sundararaman Esq., M.A., Professor, College, Kumbakonam :—

You are daily adding to your services in the cause of Tamil literature. The publication of this Bhagavad Gita Venba is a fresh effort in the same sacred cause. The author's Tamil

verse is inexpressibly smooth, flowing, and charmingly simple. The rendering is often also very close to the original.

P. Narayana Aiyar Esq., B.A., B.L., High Court Vakil, Madura:—

I thank you for the Tamil Venba—Bhagavad Gita. I went through it. It is simply beautiful. It will be a good book in the hands of our ladies.

விவேகபாநு:—

ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸினீ பத்திராதிபர் இப்பெயர் புனைந்த அரிய நூலை நம் பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்களுக்கு மிக்க நன்றி பாராட்டுகின்றோம். மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் அச்சிடப்பட்டிருக்கிற இந்நூல் மிகப்பழமையானதென்பதும் சற்றேறக்குறைய 750 வருஷங்களுக்கு முன்னிருந்த வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் என்ற ஓர் வைணவ ஆசாரியார் அவர்கள் இயற்றியதென்பதும் இதன் ஆங்கில முகவுரையால் விளங்குகின்றது. நூலின் கம்பீரத்துக்குத் தக்க வண்ணம் இம்முகவுரையும் கம்பீரமான அழகிய நடையில் எழுதப்பட்டு இந்நூலைக்குறித்த ஸகல விவரங்களையும் தெளிவாய்த் தெரிவிக்கின்றது.

இவ் வெண்பாக்கள் படிக்கப்படிக்க மிகவும் இனிமையாயிருக்கின்றன. கீதையின் மூலத்தை வைத்துக்கொண்டு ஆங்காங்கு சுலோகம் சுலோகமாய் ஒப்பிட்டுப் பார்த்ததில் இரண்டிற்கும் சிறிதும் வித்தியாசம் காணப்படவில்லை. சிலவகையெழுத்திற் பல பொருள் விளங்கும் வண்ணம் இவ்வாசிரியர் மூலக்கருத்தனைத்தையும் நேரிசை வெண்பாவில் நேர்த்தியாக அமைத்திருப்பது பெருவியப்பே. சிற்சில இடங்களில் இரண்டு சுலோகங்களை ஒரே வெண்பாவில் அமைப்பர். உய்ந்துணரின் இஃது ஓர் முதனூலாகத் தோற்றுகிறதே யொழிய வழிநூலாகத் தோற்றவில்லை.

நெடுநாளாக மறைந்து கிடந்த இந் நூலைத் தேடிக் கண்டுபிடித்து உதவிய அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியார் அவர்களுக்கும் தக்க பண்டிதர்களைக் கொண்டு நன்கு பரிசோதிப்பித்தும் குறிப்புரை எழுதுவித்தும் லோகோபகாரமாகும்படி சீரும் சிறப்புமாக எவரும் வியக்கும் வண்ணம் வெளியிட்ட ஸ்ரீ வாணீ விலாஸினீ பத்திராதிபருக்கும் நம் தமிழ் நாட்டார் அனைவரும் மிகவும் கடமைப்பட்டவராவார்கள்.

மூன்று ஷட்கங்களடங்கிய இந் நூலின் முதல் ஷட்கம் (6 அத்தியாயங்கள்) மட்டுமே இச்சமயம் வெளிவந்துள்ளது. எஞ்சிய இரண்டு ஷட்கங்களும் காலக்கிரமத்தில் வெளிவருமென்று நம்புகிறோம். 112-பக்கங்கள் கொண்டதும் பாராயணத்துக்கு யோக்கியமானதுமான இந் நுட்ப நூலுக்கு அணா ஆறே விலை ஏற்பட்டிருப்பது மிகவும் சுலபமே.

தமிழபிமானிகளாகிய அனைவரும் இந் நூலை வாங்கிப்படித்து அதன் ரசத்தை அனுபவித்து இன்புறுவார்களென்று நம்புகின்றோம்.

விஷயங்கள்.

1.	ஸ்ரீ ராமாநுஜசரிதம்.	
	ஸ்ரீ ச்யாமதேசிக திருமலைதாதாசாரியர்.	417
2.	நாற்பதுலக்ஷம் ரூபாய்.	433
3.	விபீஷணசரணாகதி. பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.	452
4.	கிறிஸ்துபோன்ற ஒழுக்கமுறை நூல். ஆத்மநாதன்.	457
5.	இந்தியாவும் நெசவுத்தொழிலும்.	463
6.	பெண்மணி. தி. வெங்கடராமையங்கார்.	471
7.	ஆனந்த மோகன போஸ்.	489
8.	வேலவன் வெண்பா.	497
9.	சுப்பிரமணிய பஞ்சரத்னம்.	499
10.	ஓர் குழந்தையும் ஓர் டஹாறும்.	500
11.	புத்தக வரவு.	503
12.	சென்ற மாதம்.	505
13.	சிறுவர்க்கான பக்கங்கள்.	509

The Next issue

WILL BE

The Grand . .
Saraswati Pooja
Double Number.

Surpassing the last year's issue in every respect.

THE MADRAS LAW TIMES.

A Cheap, ILLUSTRATED "Multum in Parvo" Legal Periodical.

Published **Fortnightly** in Four Separate Parts.

"Well conducted" and "Ably Edited" with the co-operation of eminent Editorial and regular Reporting Committees.

Warmly welcomed by the PROFESSION.
Proudly patronized by the PUBLIC.
Eminently extolled by the PRESS.

Main Features:—

(1) Biographical sketches of the Bench and the Bar.
(2) Beautiful Portraits of Judges and Lawyers.
(3) Contributions by eminent Lawyers and Jurists.
(4) Cream of Contemporary Legal Literature.
(5) Notes and Discussions on Current Legal topics.
(6) Verbatim Reports of all Privy Council cases.
(7) Prompt publication of important decisions of all the Indian High Courts.
(8) "Well arranged" Digest of every one of the cases reported and noted in all the Indian Law Reports and Journals, official and private.
(9) Summary of all interesting English and American Cases, and notes of Privy Council Cases.
(10) Free supply of all Acts, Regulations, Rules and Circulars passed and issued by the Government of India, the Local Governments and the Indian High Courts, and Boards of Revenue.
(11) A consolidated Digest and a periodical abridgment and Current Index.
(12) High-class printing and neat get-up.

Annual Subscription:— Rupees Twelve. (*Post Free*).

A good Advertising Medium.

Address all orders and communications to,

"THE MADRAS LAW TIMES OFFICE,"
HIGH COURT BUILDINGS,
MADRAS.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய:

ஸ்ரீவாணீ விலாஸினீ

வா. 3. பராபவஞு ஆவணிமீ ந. 17.

ஸ்ரீ ராமாநுஜ சரிதம்.

வெகு ஸாவதானமாகப் பார்த்து ஓர் நல்ல நாள் குறிப்பிடப் பட்டது. காலம் கொஞ்சமும் வழுவாது எல்லோரும் பிரயாணப் பட்டார்கள். ஒவ்வொரு நாளும் வஸதிக்குச் சுகமான இடங்களில் தங்கித் தங்கி யாத்திரை செய்கிறார்கள். நடந்து போம்போதெல்லாம் யதீசுவரர் வேதாந்த பாடம் சொல்லிக்கொண்டே போவதால் வழி நடக்கும் சிரமமே யாருக்கும் தெரியவில்லை. மற்ற சிஷ்யர்களை விட இராமானுஜாசாரியருக்கும் கோவிந்த பட்டருக்கும் வழியில் உபசாரங்

களும் பாதுகாப்பும் அதிகமாய் நடக்கிறது. யதிகள் வழி நடக்கும்போது இவ்விருவரையும் வெகுவாய்த் தம் ஸமீபத்திலேயே கூட்டிச் செல்லுகிறார். இரவில் படுக்கும் போது தம் சயனத்தினருகேயே படுக்கச் செய்கிறார்.

இவ்வாறு வெகு தூரம் யாத்திரை நடந்தது. அக் கூட்டத்தில் மறைவாய்க் காக்கப்பட்ட அந்தக் கெட்ட யோசனையானது எப்படியோ கோவிந்த பட்டருக்குத் தெரிந்தது. முன்பின் நிலைகளைத் தீர ஆலோசித்ததில் அது உண்மையே யென்று மனத்திற்கு நிலைப்பட்டது அதை இராமானுஜாசாரியருக்குத் தெரிவிக்க ஏற்ற ஸமயம் தேடிக்கொண்டிருந்தார் கோவிந்த பட்டர்.

ஒளித்து வைக்கப்பட்ட மந்த்ராலோசனை யெப்படியோ கோவிந்த பட்டருக்குத் தெரிந்துவிட்டதென்பதை யறிந்ததும் யதீசுவரர் இராமானுஜாசாரியரும் கோவிந்த பட்டரும் தனியே ஸந்தியாதபடிக்கு மிகவும் ஜாக்கிரதை செய்து வைத்தார். ஆகையால் இவருக்கு அதை இராமானுஜாசாரியருக்குத் தெரிவிக்க ஸமயம் நேராமலேயிருந்தது. பின்னும் சில நாள் யாத்திரை நடந்தது. காஞ்சீபுரம் வெகு தூரத்தில் நின்று விட்டது. வெகு தூரத்துக்கு வெகுதூரம் கிராமங்களே கிடையாத பெரிய காட்டின் தொடர்ச்சியில் யாத்திரை செய்கிறார்கள். வஸதியான மலைக் குகைகளிலும் மலை யருவி யோரங்களிலும் மரங்களின் அடிகளிலும் தங்கித் தங்கி யாத்திரை செய்கிறார்கள்.

தெய்வச் செயலாய் ஒரு நாள் மாலைப்பொழுது யாத்திரையில் கோவிந்த பட்டர் ஜல விஸர்ஜனத்துக்சென்று பின் தங்கினர். சிஷ்யர்களும் ஆசார்யரும் வேறெதெதிலோ கவனமா யிருந்ததால் அதை யாரும் கவனிக்கவில்லை. சற்றுத் தாமதித்து இராமானுஜாசாரியரும் ஜல

விஸர்ஜனத்துக்காகப் பின் தங்கினர். வழக்கம்போலவே யெல்லாரும் நடந்துகொண்டே யிருந்தார்கள். இப்படி யொருவரையொருவர் அறியாமல் பின் தங்கியதும் அதை அக் கூட்டத்தார் யாரும் கவனியா திருந்துவிட்டதும் தெய்வச் செபலேயாம்.

இராமாநுஜாசாரியர் பின் தங்கினதைக்கண்ட கோவிந்த பட்டர் செடிகளின் மறைவாயே யிவரிடம் வந்து சேர்ந்து அக் கூட்டத்தார் செய்திருக்கும் மோசவகையான யோசனையை யறிவித்து வந்த வழியே திரும்பிவிடுவது யுக்தமென்று சொல்லித் தாமும் திரும்பிவிட்டால் அவர்கள் தேடத் தொடங்குவார்களாகையாலும் தம்மிடத்தில் அவர்களுக் கெவ்விதமான பகையும் இல்லையாகையாலும் தாமவர்களோடே காசி யாத்திரை போய் வருவதே தகுமென்று தெரிவித்துக்கொண்டு, இராமாநுஜாசாரியர் அநுமதி பெற்று வேறு குறுக்கு வழியாய் விரைந்து நடந்து அக்கூட்டத்தைத் தொடர்ந்துகொண்டார். வெகு தூரம் நடக்கும்வரையில் யாரும் இராமாநுஜாசாரியரைக் கவனித்தார்களில்லை.

வெகு தூரங்கடந்த பின்னே பெரியதோர் காட்டினிடையாய்ச் செல்லும்போது அருகே யிருந்த தோர் தாமரைத் தடாகத்தில் செவ்வி மலர்கள் அலர்ந்து தேன் சொரிவதைக் கண்ட யாதவப்ரகாசயதிகள் திடீரென்று कप्यास(கப்யாஸ)ச்ருதி ஞாபகம் வரவே அதன் தொடர்ச்சியாய் இராமாநுஜாசாரியரை நினைத் தருகே பார்க்கையில் அவரில்லாமல் கோவிந்த பட்டர் மாத்திரம் இருப்பதைக் கண்டு 'இளையாழ்வார் எங்கே?' யென்று கேட்டார்கள். வெகு தூரத்திற்கு முன்னே யவர் ஜலந்தேடிக் குறுக்கே செல்வது கண்டேன், இப் பெருங் கூட்டத்தின் பின்னே வருகிறாரென்று நினைக்கிறே னென்றார் அவர். கூட்ட

மெல்லாம் நிறுத்தப் பட்டது. இராமானுஜாசாரியர் இல்லை. உடனே அவரைத் தேடும்படி யதீசுவரர் கட்டளை பிறந்தது. நாலா மூலைகளிலும் தேடினார்கள். அவர் நின்ற விடம் வெகு தூரம். இவர்கள் அவரைக் காண முடியுமோ? அஸ்தமனமாகும் ஸமயம் நெருங்கி விட்ட தாலும் அங்கே நிற்கத் தகுதியான இடமில்லையாகையா லும் இனி யவரைத் தேடி யலைவது வீணுயிர்ச் சேதத்துக் கிடமாகுமென்று நிச்சயிக்கப்பட்டது. முன்பின் பழக்க மும் திரும்பிப்போக வழி தெரியக் காரணமும் இல்லாத மனுஷ்ய ஸஞ்சாரமே யிராத பெருங் காடாகையால் இராமானுஜாசாரியர் காட்டு மிருகங்களுக் கிரையாய் விடு வது நிச்சயமென்று நம்பி யதீசுவரரும் சிஷ்யர்களும் மனத்திற்குள் பெரிய ஸந்தோஷமடைந்தார்கள். பழியும் பாவமும் இல்லாமலே தம் மெண்ணம் நிறைவேறி விட்ட தற்காக யதீசுவர்கள் பரப்ருஹ்மத்துக்குப் பலவகையாக நன்றி செலுத்தினார்கள்.

வெளிக்கு இராமானுஜாசாரியரைப்பற்றி மிக வருத் தம் பாராட்டப்பட்டு வந்தது. ஒவ்வொரு அடியும் அவர் ப்ரஸ்தாபமே. அவர் பெயர் வாயில் வரும்போதே யதி கள் கண்களில் நீர் ததும்பும். சிஷ்யர்கள் கெட்ட எண் ணத்தால் தூண்டிட்டதற்காக யதிகள் சம்மதம்போல் நடித்தார்களாகும். உண்மையாய் முடிவில் இராமானுஜா சாரியருக்கு யதிகள் கெடுதி யாதும் செய்யவிடார்கள். அவர் கூட வந்திருந்தலே நலமாம் தீர ஆலோசியாமல் நான் அவரைப் பிரிந்து போகச் சொன்னது பாவமே, இவர்கள் பயப்படுவதுபோ லவருக்குக் காட்டி லேதாவது தீங்கு நேர்ந்து விட்டால் அந்தத் தோஷ மென்னைச் சேருமே, என்று கூடக் கோவிந்தபட்டர் நினைக்கலாயினர். அவ்விதமான வஞ்சனையோடு யாத்திரை இடையூறின்றி நடக்கிறது.

இது நிற்க; தனியே நின்ற இராமானுஜாசாரியர் கதி யென்னவென்பதை யாராய்வோம்.

கோவிந்த பட்டர் வார்த்தையா லப்பெருங் கூட்டத்தைப்பிரிய நிச்சயித்த இராமானுஜாசாரியர் அவ்வழியை விட்டகன்று ஓர் மரத்தடியில் நின்றுபார்க்க அது அடர்ந்த பெருங் காடா யிருக்கையாலே வழி திகைத்து அம் மரத்தின்மேலேறிப்பார்க்க அவ்விடம் தண்ணீர் என்ற பெயரே யில்லாமலும், நிழ லில்லாமலும், கள்ளிகளும் எட்டிகளு மல்லது வேறு செடி பூண்டு யாதுமில்லாமலும், அக்கள்ளிகளு முலர்ந்து வாடிப்போம்படி கொடிய கானல் வீசுவதன்றிக்குளிர்ந்த காற்றென்பதே யில்லாமலும்பெரியதோர் பாலைவனமாய்ப் பெரும் புலிகளுங் கரடிகளுஞ் சிங்கங்களுஞ் செந்நாய்களு மோடித் திரியுமிடமாய் “निष्पानीये निरालम्बे निश्छाये निराश्रये। द्राघीयस्य शुभे मार्गे यमस्य सदनं प्रति” ‘ நிஷ்பாநீயே நிராலம்பே நிச்சாயே நிராச்ரயே। த்ராகீயஸ்ய சுபே மார்கே யமஸ்ய ஸதநம் ப்ரதி’ என்று சொல்லப்பட்ட யமலோகத்து மார்க்கத்துக் கொப்பாக இருப்பதைக் கண்டு மனம் நடுங்கி “कान्तारमध्ये विजने विसृष्टाबालेवकन्या विललाप सीता” ‘ காந்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாப ஸீதா’ என்றதற்கு இணையாக (மநுஷ்ய ஸஞ்சாரமே யில்லாத பெருங்காட்டி னடுவில் தனியே விடப்பட்ட சிறு பெண்போலத் துயரப் பட்டழுத ஸீதையைப் போலே) இவரும் விதியை நினைத்துப் புலம்பி மரத்தைவிட்டுக் கீழே யிறங்கி ஆபத்துக்குத் தெய்வமே துணையென்று தேறிக் கையெடுத்துக் கூப்பிக்கொண்டு தாமரை மடுவில் பூப் பறிக்கும்போது முதலையால் பிடிக்கப்பட்டு அதை விடுவிக்க வழியில்லாமல் ஆதிமூலமே யென்று கூவியழைத்த கஜேந்த்ராழ்வா

னைப்போலே 'இமையோர் தலைவா' என்றுரக்கக் கூவி யழைத்தார்.

"श्रिया च सहतन्वंग्या भूत्वा षोडशवार्षिकः।
राजलक्षणसंपन्नस्सर्वाभरणभूषितः॥"

𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌚 𑌸𑌹𑌤𑌨𑍍𑌵𑌙𑍍𑌗𑍍𑌯𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌷𑍋𑌡𑌶𑌵𑌾𑌰𑍍𑌷𑌿𑌕𑌃 ।
𑌰𑌾𑌜𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥

காஞ்சிபுரத்தில் ஹஸ்தகிரியி னுச்சியில் கோயில் கொண்டிருக்கும் பேரருளாளப் பெருமாள் தமக் கிஷ்டமானபோது பெருந்தேவியா ருடனே பதினாறு வயது இராஜகுமாரனாக உருவமெடுத்துக்கொண் டாபரணங்களோடழகாகப் பூந்தோட்டத்தின் சோலையைத் தேவியாருக்குக் காட்டிக்கொண்டு ஸஞ்சரிப்பது வழக்கம்.

"तत्सर्वंदर्शयन्देव्यैचचारवरदोवने।"

'𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍 𑌦𑍇𑌵𑍍𑌯𑍈 𑌚𑌚𑌾𑌰 𑌵𑌰𑌦𑍋 𑌵𑌨𑍇 ।'

இளையாழ்வார் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்ட இமையோர் தலைவா என்னுஞ்சொல் காதிற்பட்டவுடனே யப்பெருமாள் மனந்தத்தளித்தது. பெரிய இராஜசபையில் பரிபவப்படுத்தப்பட்ட பாஞ்சாலி "गोविन्द" 'கோவிந்த' என்றழைத்த சொல்லைக் கேட்டபோது மனம் பதைத்தது போலேப் பதைத்தது. தம் மனோவேகத்தைவிட விரைவுடைய கருடன்மேலேறிச்செல்லவும் துணிவு பிறக்கவில்லை. கஜேந்த்ரனைக் காக்கவந்தபோது கருடனை யதட்டி யடித்திழுத்துக்கொண்டுவர வேண்டிய தாயிற்றே யென்பது ஞாபகம் வந்தது. இளையாழ்வார் நிற்கும் நிலையை நினைத்தார். அக் காட்டிற்குரிய கோலமே யிசையுமென் றபிப்பிராயம் கொண்டார். திவ்ய தம்பதிக ளிருவரும் வில்லியுருக்கொண்டு இளையாழ்வார்முன்னே யாவிர்ப்பாவ மானார்கள்.

அவ் வில்லிதம்பதிகள் இவருக்காக வந்தமையை

மறைத்து வழி நடப்பவர்களாகவே காட்டிக்கொண்டார்கள். அவர்களைக் கண்ட இளையாழ்வாருக்கு எவ்வளவு ஸந்தோஷமுண்டா யிருக்குமோ அதை யவரவர் மனஸ் ஸாக்ஷியத்தால் தெரிந்துகொள்ளவேண்டும். இளையாழ்வார் அவர்களைத் தம் குலதேவதையாகிய பேருளாளனும் பெருந்தேவித் தாயாருமாகவே நினைத்துக்கொண்டார். அவர்களை நெருங்கி வந்து 'நீங்க ளெவ்விடம் போகிறவர்களோ' என்று இளையாழ்வார் கேட்டார். அவர்கள் 'நாங்கள் தொண்டை மண்டலத்துக்குப் போகிறோம்' என்றார்கள். ஸம்ஸார ஸாகரத்தில கரைகாணமாட்டாதே தவிப்பவர்க்கு ஸதாசார்ய கடாக்ஷம்போலே இக்காட்டில் வழி தெரியாது திகைத்த நமக்கு இவர்கள் ஸஹாயம் கிடைத்ததே யென்று மன மகிழ்ச்சியோடு 'ஆயின் நீங்க ளென்னையும் கூட்டிக்கொண்டு போகவேண்டும்' என்று இளையாழ்வார் கேட்டுக்கொண்டார். 'நீர் யார்? எங்கிருப்பவர்? இங்கே தனித்ததென்? தொண்டை மண்டலம் போக விரும்புவதேன் ?' என்று வில்லிகள் கேட்டார்கள். 'நானிருப்பது காஞ்சீபுரம், கங்கையாடப் புறப்பட்டேன், வழியே யொரு தடை நேர்ந்தது, திரும்பி ஊர் போக விரும்புகிறேன்' என் றிளையாழ்வார் கூறினர்.

பேயும் பிசாசமும் திரியும் காட்டில் எப்படி நடப்போமோ என்று பயந்த எங்களுக்கு வைதிகாக்ரேஸரரான நீரே துணையானீ ரென்று வில்லிகள் கௌரவித்துச் சொன்னார்கள். மூவருமாய் நடக்க லானார்கள். 'ஸந்தியாவந்தனம் செய்ய ஜலம் வேண்டுமே யென் செய்வது' என்று இளையாழ்வார் கேட்க, 'கொஞ்சந்தூரஞ் சென்றால் நல்ல தடாகமுண்டு' என்று வில்லி கூறினன். அந்திப்பொழுது அணுகும் ஸமயமா யிருந்ததைப்பற்றிக் கொஞ்சம் கடுக நடக்கவேண்டிய தாயிற்று. நல்லதோர்

தாமரைப் பொய்கையை நெருங்கி வில்லிகள் கால் கை சுத்தி செய்து மாலைக் கடன் கழித்தார்கள். இராமானுஜாசாரியர் ஸ்வாமிகளும் யதாக் கிரமமாக ஸந்தியோபாஸநம் செய்து முடித்தார்கள்.

ஸ்ரீ ராமாயணத்தில் தமஸாநதிக்கரையிலே ஸ்ரீராமன்

"अद्भिरेवतु सौमित्रे वत्स्याम्यद्यनिशामिमां ।
एतद्धिरोचतेमह्यं वन्येपिविविधेसति ॥"

'அத்பிரேவது ஸௌமித்ரே வத்ஸ்யாம்யத்ய நிஶாமிமாம் ।
ஏதத்தி ரோசதே மஹ்யம் வந்யேபி விவிதே ஸதி ॥'

காட்டுக்குரிய ஆஹாரங்கள் பல இங்கே கிடைக்குமானாலும் இன்று ஜலாஹாரம் செய்திருக்க வேண்டுமென்பதே யெனக்கு ஸம்மதமா யிருக்கிறதென்று கூறவே இராமன் ஸீதை லக்ஷ்மணன் மூவரும் அப்படியே ஜலபாநம் செய்து பட்டினி யிருந்ததுபோல இங்கும் வில்லி சொல்லியபடி மூவரும் ஜலாஹாரம் செய்திருந்தார்கள்.

பின்பு, இளையாழ்வார் இன்றிர வெங்கு படுப்பதென்ன வில்லி இங்கு இடம் படுக்கப் பாங்காக இருக்கவில்லை. இரவின் முற்பொழுதே யின்னும் சிறிது தூரம் செல்வோமென்று கூற, மறுபடி மூவரும் வழி நடக்க லானார்கள். அப்படி வழி நடக்கும்போது முன்னே வில்லியும் அவன் பின்னே வில்லிச்சியும் அவள் பின்னால் பவித்திரமும் கையுமாய் இளையாழ்வாருமாய் நடந்தார்கள். ஸ்ரீராமாயணத்தில் अग्रतः प्रययौरामस्सीतामध्ये सुमध्यमा । पृष्ठतस्तुधनुष्पाणिर्लक्ष्मणोनुजगामह ॥" அக்ரத: ப்ரயயௌ ராமஸ்ஸீதா மத்யே ஸுமத்யமா । ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோ நுஜகாமஹ ॥ என்று கூறப்பட்ட நடையை இவ்வனத்தில் வில்லிகளும் இராமானுஜாசாரியருமாய் நடந்த நடை யொத்திருந்தது.

தோட்டத்தில் கொடி மரம் முதலியவைகளைக்காட்டி வந்ததின் குறையை முடிப்பவர்போல வில்லி யருகேயுள்ள செடி கொடி முதலியவற்றை வில்லிச்சிக்குக் காட்டி கொண்டே செல்ல, வில்லிச்சி சிலவற்றின் தளிர்களையும் சிலவற்றின் புஷ்பங்களையும் உகந்து கொண்டாட, பின் நடந்துவருகிற இளையாழ்வார் அவைகளைப் பறித்துக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டே வழி நடந்தார். இது ஸ்ரீ ராமாயணத்தில் "रमणीयान् बहुविधान् पादपान् कुसुमोत्कटान् । सीतावचनसंरब्धा आनयामास लक्ष्मणः ॥" ரமணீயாந் பஹுவிதாந் பாதபாந் குஸுமோத்கடாந் |ஸீதா வசநஸம்ரப்த ஆநயாமாஸ லக்ஷ்மண:||' என்று ஸீதை யுகந்து கொண்டாடும் புஷ்ப பல்லவங்களை லக்ஷ்மணர் பறித்துக்கொண்டு வந்து கொடுத்ததை யொத்திருந்தது.

இவ்வாறு முன்னிராப் பொழுதிலேயே சிலதூரம் வழி நடந்து இருள் கனமாவதற்கு முன்னமே ஓர் தேன் சோலையைச் சேர்ந்தார்கள். மூன்று யாத்திரைக்காரரும் இங்கே படுக்க வஸதியா யிருக்கிறது, பயம் ஒன்றுமில்லை, இன்றிரவை யிங்கே கழித்துக் காலை யெழுந்து பிரயாணப் படுவோமென்று வில்லி கூறினன். அந்தப்படி யங்கே படுத் திரவைக் கழிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

இராமானுஜாசாரியர் மரமேறித் தளிர்கள் பறித்துப் படுக்கை பரப்ப வில்லிகள் அதில் இருந்தார்கள். இது ஸ்ரீ ராமாயணத்தில் "सौमित्रिस्तुततः पश्चादकरोत्स्वास्तरंशुभं । स्वयमानीयबर्हींषिक्षिप्रं राघवकारणात् ॥' ஸௌமித்ரிஸ்துதத: பஶ்சாதகரோத்ஸ்வாஸ்தரம் ஶுபம் | ஸ்வயமாநீயபர்ஹீம்ஷி க்ஷிப்ரம் ராகவகாரணாத் ||' என்று லக்ஷ்மணர் தாமே தர்ப்பங்களைக் கொண்டுவந்து ஸ்ரீராமனுக்குப் படுக்கை பரப்ப "तस्मिन् समाविशद्राम स्वास्तरे सह सीतया" 'தஸ்மிந்

ஸாவிஸ்ருஹ்ருத் ஸ்வாஸ்ஹ்ரெ ஸஹஸீதயா’என்று ஸ்ரீராமனும் ஸீதையும் அதில் படுத்தார்களென்று கூறிய முறையை யொத்திருந்தது.

பல்லவ சயனத்தில் படுத்த வில்லிகள் ஆச்சர்ய ரஸத்தாலே திகைத்தாற் போலே யிருந்த இளையாழ்வாரை ‘ஐயனே! தொண்டை நாட்டின் வளமும், கரிகிரியின் காட்சியும், வரதராஜப் பெருமாள் பெருமையும் கூறுவீராயின் கேட்கலாம்’ என்றார்கள். இராமானுஜாசார்யர் மிக்க ஆதரவோடு பிராஹ்ம புராணத்தில் பதினெட்டு அத்தியாயங்களால் கூறப்பட்ட ஹஸ்திகிரியின் மாஹாத்ம்யத்தை யவர்களுக் கெடுத்துரைத்தார்.

அது முடிந்தவாறே ‘வெகு நாழிகையாய் விட்டது, சற்றுறங்கவேண்டும்’ என்று கூறிவிட்டு வில்லிகள் நித்திரை செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் தமக்கு வழித்துணையாகையா லவர்களுக்குக் காவலாக இரவு முழுதும் தாம் கண்ணுறங்காமலே யிருக்கவேண்டுமென்று இராமானுஜாசாரியர் நினைத்தா ரென்றாலும் வழி நடந்த அலுப்பினால் நித்திரை விளைத்துக்கொள்ளவே யிவர் முறைப்படி பூர்வ ராத்திரிபோகத்தைச் செய்து படுத்துத் தூங்கிவிட்டார்.

ஆச்ரிதர்க் கிதஞ்செய்வதே தம் பணியாக என்று முறங்காது நின்று காப்பவனாகிய கருணைக் கடலான ஸ்ரீய:பதி இளையாழ்வார் கடு நித்திரையா யிருக்கும்போது வில்லிச்சியை யெழுப்பிக்கொண்டு ‘ஸுகுமாரமான இந்த வபுவம் இனி முள்ளுங் கல்லுமான கடிய வெங்கானகத்தில் ஒரு நிமிஷமும் வாட்ட முறும்படி விடுவது பெரிய அனர்த்தத்தை விளைக்கும், ஆகையால் நாம் அந்தர்யாமியா யிருந்து ஜீவாத்மாவை ஸூக்ஷ்ம சரீரத்தோடே இப்பிரகிருதிதேஹத்திலிருந் தெடுத்துக்கொண்டு கரையேறிப்போ

வதுபோலே இவருக்குத் தெரியாமல் இவரை யெடுத்துக் கொண்டு தொண்டைமண்டலம் சேர்த்துவிட வேண்டும்' என்று கூறி அவள் ஸம்மதம் பெற்று இராமானுஜாசாரி யரைக் குழந்தையைப் போல் கையி லெடுத்துக்கொண்டு வில்லிச்சி பின்வரக் காஞ்சிபுரத்திற்கு மேற்கே யுள்ளதோர் சோலையில் வந்து சேர்ந்தான். ஸத்திய ஸங்கல்பனுன ஸர்வேசுவரன் தான் ஒன்று செய்ய நினைத்தால் அதற்கு மாறுதலுண்டோ. முக்தி தசையை யடைந்த ஜீவாத் மாக்களுக்கும் நினைத்தது நிறைவேறப் பெறும் பெருமை யுண்டென்பது சுருதிகளின் ஸித்தாந்தமாகையால் ஸர்வே சுவரன் விஷயத்தில் கேட்கவும் வேண்டுமோ! முன்னிரவில் படுத்த படுக்கையும் இந்தச்சோலையிலேயே வந்து சேர்ந்து விட்டது. பகவன் மாயையின் மஹிமையால் இவ்வளவு ஆச்சர்யமாய் நடந்தேறிய கார்யமானது இராமானுஜா சாரியருக் கணுவளவும் தெரியவில்லை.

பொழுது விடிந்தது. கீழ்வானம் வெளுத்தது. பற வைகள் இனிமையாய்க் கூவின. வெள்ளி யெழுந்தது, வியாழ னுறங்கிற்று. வைகறை மாருதம் வீசத் தொடங் கியது. செங்கழுநீர் விகஸிக்கவும் ஆம்பல் முகிழ்க்கவும் தொடங்கின. ஆகாயத்தில் நக்ஷத்ரங்கள் ஒளி மழுங்கிக் காணப்பட்டன.

அப்போது வில்லி யெழுந்து 'பிள்ளாய்! காட்டுப் பறவைகள் இனிமையாய்க் கூவுங் குரல் கேட்கவில்லையா, எழுந்திரு, புறப்பட வேண்டாமா, இப் பாலை கடந்து தேனலஞ் சோலை வழியே செல்லப் புறப்படு' என்று எழுப்ப, அலுப்பால் தூங்கிவிட்ட இளையாழ்வார் பரபரப் புடனே 'ஹரி ஹரி' என்றெழுந்து போக சேஷத்தை முடித்துச் சரீரத்தில் இளைப்பும் அலுப்புமில்லாம லிருந்த தை நினைத்து ஆச்சரியப்பட்டு வில்லிகளைப் பின் தொடர் ந்து புறப்பட்டார். இது " अथरात्र्यां व्यतीतायां सुखसुप्तमनंतरं ।

प्रबोधयामास तदा लक्ष्मणं लक्ष्मणाग्रजः ॥ सौमित्रे शृणुवन्यानां वल्गुव्याहरतां स्वनं । संप्रतिष्ठामहेकालः प्रस्थानस्यपरंतप ॥ ”

‘𑌅𑌥𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌅𑌵𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌦𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌗𑍍𑌰𑌜𑌃 ॥ 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌶𑍃𑌣𑍁𑌵𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌲𑍍𑌗𑍁𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌤𑌾𑌂 𑌸𑍍𑌵𑌨𑌂 । 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌹𑍇 𑌕𑌾𑌲𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑍍𑌯𑌪𑌰𑌂𑌤𑌪 ॥’

என்று ஒரு நாள் இராத்திரி ஸுகமாய் நித்திரைபோய் விட்ட லக்ஷ்மணரை ஸ்ரீ ராமன் எழுப்பி ‘தம்பி! பறவைகள் குரலைக் கேள், எவ்வளவு இனிமையாய்க் கூவுகின்றன எழுந்திரு புறப்பட்டுப் போவோம்’ என்று கூற,

“ ससुप्तस्समये भ्रात्रा लक्ष्मणः प्रतिबोधितः । जहौ निद्रां च तन्द्रीं च प्रसक्तं पथिश्रमम् ॥ ”

‘𑌸𑌸𑍁𑌪𑍍𑌤𑌸𑍍𑌸𑌮𑌯𑍇 𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌿𑌤𑌃 । 𑌜𑌹𑍌 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂 𑌚 𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑍀𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌂 𑌪𑌥𑌿𑌶𑍍𑌰𑌮𑌮𑍍 ॥’

என்று நித்திரை போய்விட்ட தம்மை ஸமயத்தில் ஸ்ரீராமனெழுப்பியதால் லக்ஷ்மணர் உறக்கம் சோம்பல் வழியலுப்பு முதலியவை யனைத்தையும் விட்டு விளங்கினாரென்பதாக ஸ்ரீ ராமாயணத்தில் கூறியதை யொத்திருக்கிறது.

சிறிது தூரம் நடந்தவாறே ‘இங்கே குடிக்க நல்ல தண்ணீர் உண்டோ?’ என்று வில்லிச்சி கேட்க ‘கொஞ்சம் வழி விலகிப்போனால் குளிர்ந்து தெளிந் தமுதம் போன்ற நீருடைய கிணறொன்றுண்டு’ என்று வில்லி கூற அங்கே போகவேண்டுமென்ற வில்லிச்சியின் அபிப்பிராயப்படி மூவரும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள். கிணறு இறங்க முடியாததாயிருந்தது. ஜலம் முகந்து எடுத்துக் குடிக்கப் பாத்திரமும் கயிறும் இல்லை. என் செய்வது, தாகம் பொறுக்க முடியவில்லையே யென்று வில்லிச்சி கூறினாள்.

தமக்குப் பெரிய உதவி செய்த அவர்களுக்குத் தாம் இவ்வுதவி செய்யாதது நியாயமல்லவென்று நினைத்து இராமாநுஜாசாரியர் அந்த இருட்டிலே ஸாவதானமாய்க் கிணற்றிலிறங்கி ஜலத்தினருகே யிருந்து இரு கையாலும் ஜலத்தை யெடுத்து நிமிர்ந்து கிணற்றில் பாதிவரையி லிறங்கி நின்ற வில்லிகையில் கொடுக்க, வில்லியும் நிமிர்ந்து கரையோரத்தி லிருந்த வில்லிச்சிக்கு அதைக் கொடுக்க வில்லிச்சி யதைக் கைகளால் வாங்கிக் குடித்துத் திருப்தியாய்ப் போது மென்றாள். பிறகு வில்லியும் இரண்டு கைத் தண்ணீர் வாங்கிக் குடித்துப் பின்னும் குடிக்கக் கையேற்க அவ்வளவிலே வில்லிச்சி வில்லிகையைப் பிடித்துத் தகைந்து விட்டாள். இது கிருஷ்ணாவதாரத்தில் குசேலர் கொண்டு வந்த அவலைக் கண்ண னொருபிடி யமுதுசெய்து இரண்டாவது பிடி யெடுத்த போது பரபரப் புடனே ருக்மிணீ அவர் கையைப் பிடித்ததாக

" इति मुष्टिं सकृज्जग्ध्वाद्वितीयां जग्धुमाददे । तावत् श्रीर्जगृहेहस्तं सत्वरा परमेष्ठिनः ॥ " 'இதி முஷ்டிம் ஸக்ருஜ்ஜக்த்வா த்விதீயாம் ஜக்துமாததே | தாவச்ச்ரீர்ஜக்ருஹே ஹஸ்தம் ஸத்வரா பரமேஷ்டிந: ||'

என்று கூறியிருப்பதை யொத்திருக்கிறது.

வில்லி கரையேறி வந்தவுடனே அத் தம்பதிகள் இருவரும் அந்தர்த்தானமாய் விட்டார்கள். இராமாநுஜாசாரியர் கிணற்றிலே கை கால் சுத்திசெய்துகொண்டு ஆசமனம் செய்து கரையேறி வந்து பார்த்தார். வில்லிகள் தென்படவில்லை. இதென்ன மாயமோவென்று மயங்கினார். நாலா மூலையும் தேடினார். எங்கும் யாதும் குறி கூடக் காணவில்லை. காலடி வைத்த இடமும் குறிகாணப் படவில்லை. திகைத்து நின்றார்.

சிறிது பொழுதானவுடனே மனுஷ்ய ஸஞ்சாரம்

செய்யத் தொடங்கினார்கள். ஒருவ ரிருவராய்ப் பலர் தென்பட்டார்கள். அவர்களைக் கண்டதும் இராமானுஜாசாரியர் தேறுதல் அடைந்து அவர்களை யணுகி 'இது எத்தேசம்? அருகே ஊர் உளதோ?' என்று கேட்டார். அவர்கள் இவர் குரல் நடுக்கத்தையும் முக வாட்டத்தையும் கண்டு இரக்கமும் சிரிப்பு மதிகமாகி 'பிள்ளாய்! உன்னைத்தான் பேயோ பிடித்தது, அதோபார், புண்ணியகோடி விமானம் ஸ்பஷ்டமாய்த் தோற்றுகிற்கிறது, இனி யாரை யெது கேட்கவேண்டும்?' என்று பதில் கூறினார்கள்.

முதலில் இளையாழ்வாருக்கு இதில் நம்பிக்கையே பிறக்கவில்லை. இவர் காஞ்சிநகரத்தை விட்டு யாத்திரையாக எத்தனை நாள் சென்றார்? நேற்று மாலைப்பொழுதில் இவர் விந்தியமலைச்சாரலை யடுத்த காட்டிலல்லவோ திகைத்தது! இரண்டொரு யாமப்பொழுது தளர்ந்த நடை நடந்தார்; எவ்வளவு தூரம் நடக்கலாம்? ஸர்வேசுவரனுடைய மாயச் செய்கையை யிவரறியாரே! எப்படி யிவர் நம்பக் கூடும்? ஆயினும் நன்றாக நிதானித்ததில் எதிரே தோற்றங்கொடுப்பது புண்ணியகோடி விமானமேயென்று தெளிந்தார். பிறகு ஸம்சயமென்ன? மனிதர்களின் நடையுடை பாவனைகளும் பேச்சு விதங்களும் அவரது நிச்சயத்துக் குதவியாயின.

'நேற்று நம்மை வழி நடத்தினவர்கள் பேரருளாளனும் பெருந்தேவியாருமே. அவர்கள் நேற்றிரவு நாமறியாமே நம்மை அந்தர்யாமி ரூபமாய் தூக்கிவந் திங்கே கிடத்தினராகும். நேற்று முன்னிரவில் வழி நடையின் போக்குக்கள் இராமாயணத்துக் கொத்தனவாயும் இன்று காலை வில்லிச்சி போதுமென்று கையைப் பிடித்தது ஸ்ரீ கிருஷ்ணலீலைக் கொத்ததாகவு மிருப்பதால் இராம

கிருஷ்ணவதாரம் இரண்டுமாகிய தேவபிரானே நம்மைக் காத்தருளினனாயிருந்தது' என்று இளையாழ்வார் நிச்சயித்து அவனது ஆச்ரிதவாத்ஸல்ய குணங்களை நினைந்து நினைந்துள்ளமுருகிக் கசிந்து நைந்து மோஹித்துத் தாமே தேறி, அருகே யிருந்ததோர் §கடாகத்தில் ப்ராதஸ்நாநம் செய்து திருமண்பெட்டி யில்லாமையால் துளசியடி மண்ணால் திருமண் தரித்துக்கொண்டு ஸந்த்யாவந்தனமும் ஜபமும்செய்துவிட்டு இராஜமார்க்கமாக ‡திருத்தண்கா திவ்ய தேசம் வந்து அங்கே தூப்புல் ஸோமயாஜியார் கிருஹத்தில் திருமண் ஸ்ரீசூர்ணம் வாங்கித்துவாதசோர்த்வபுண்ட்ரங்களையும் தரித்துக்கொண்டு காலைக்கடன் குறைகளை லக்ஷ்மீ ஸரஸ்ஸில் முடித்துக்கொண்டு அந்த வெம்பெருமானான தீபப்ரகாசரை ஸேவித்து 'தேனலஞ் சோலை வழியே' யென்று வில்லி சொன்னதும் இத் திருத்தண்காவையேயாகுமென்று பாவித்து ஸந்தோஷத்தோடு பெரிய வீதி வழியாய்த் தேவாதி ராஜன் ஸந்நிதிக்குச் சென்று ஸேவிக்கவேண்டிய முறைப்படி பெருந்தேவித் தாயாரையும் பேரருளாளப் பெருமாளையும் ஸேவித்துத்தனக்காகக் கூடவொரு துணையு மில்லாதே அதி ஸுகுமாரமான பத கமலங்களில் பரல்களுன்றி யுதிரங்கசிந்து சிவக்க முள்ளுங்கல்லுமான கடிய வெவ்விய கானகத்தில் இருவருமாய் நடந்து வருத்தப்பட்டதைச் சொல்லிச் சொல்லி மனங்கரைந்து தாம் ஆபத்காலத்தில் 'இமையோர் தலைவா' வென்று கதறிப் பேரருளாளன் மனத்தில் கலக்கத்தையும்

---

§ இத்தடாகம் அநுஷ்டானகுளமென் றிப்போதும் வழங்கப்படும். இது காஞ்சீபுரம் கோவிலுக்குத் தென்மேற்கு மூலையில் ஒரு மயில் தூரத்தி லிருக்கிறது.

‡ இது விளக்கொளி கோவில் என்று சொல்லப்படும். தண்-குளிர்ந்த, கா-சோலை.

பதகமலங்களுக்கு வருத்தத்தையும் உண்டாக்கினதற்காக அபராத க்ஷாபணம் செய்துகொண்டு ஆழ்வார் திருவீதி பிரதக்ஷிணமாகத் தமது திருமாளிகையைச் சேர்ந்தார்.

கங்கா யாத்திரைக்குக் கூட்டத்தோடு சேர்ந்து சென்ற தனது அருமை மகன் திடீரென்று தன் கண்ணில் தென்படவே இதென்ன மயக்கமோ என்று முதலில் தாயார் ஸந்தேஹித்தாள். பிறகு இவர் தாயாரைத் தண்டனிட்டு நடந்தவை யாவையும் ஸவிஸ்தாரமாகச் சொல்ல, தாயார் கேட்டு ஆச்சரியப்பட்டு 'ஆபத்பந்துக்களான திவ்ய தம்பதிகளே உனக்குத் துணையானார்கள்' என்று கொண்டாடி 'உனக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தபோது உன் மாமாவாகிய பெரிய திருமலைநம்பி உனக்காராதனத்துக்காகக் கொடுத்த பேரருளாளப் பெருமாளே காட்டிலே வில்லியாய் வந்து உன்னை வாழ்வித்தாரென்று நினைப்பாயாக' என்று கூறிப் புத்திரனை ஸுகமே சிரஞ்சீவியாய் வாழ்வாயாகவென்று 'வாழ்த்தினார். அதுமுதலாக அந்தப் பெருமாளுக்கு 'வந்துவாழ்வித்த பெருமாள்' என்று பெயராயிற்று.

(இன்னும்வரும்.)

ஸ்ரீ ச்யாம தேசிக திருமலைதாதாசாரியார்.

நாற்பதுலக்ஷம் ரூபாய்.

சென்ற ஆடிமீ 18-ம் தேதியாகிய செவ்வாய்க்கிழமையன்று தென்னிந்தியா ரயில்வேயில் திருவிடைமருதூர் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் கும்பகோணத்துப்பக்கமாக ஒரு ரயில்வே கேட்டண்டை தண்டவாளத்தில் ஒரு மனிதனது சரீரம் மிகவும் விகாரமாகச் சின்னாபின்னப் படுத்தப்பட்டுக் கிடந்தது. இதன் விவரத்தை யெழுதுவதானால் மிகவும் பயங்கரமாயிருக்குமாதலால் நமது கதைக்கு வேண்டியவளவு இங்கே சொல்லுவோம். அந்தச் சரீரமானது தண்டவாளத்தில் நீட்டுப்போக்காகக் கிடந்ததால் அந்த லயனில் சென்ற ரயில் வண்டியானது அவனுடம்பையும் முகத்தையும் அடையாளந் தெரியாமற் செய்துவிட்டது. கொஞ்சநஞ்சம் அடையாளந்தெரியும்படி யிருந்ததைக்கூட எஞ்சினிலிருந்து வந்த நெருப்புப் பொறியானது கருக அடித்துவிட்டது. அங்கு அந்தச் சவங்கிடந்த மாதிரியைப் பார்க்கும்பொழுது தற்செயலாகத் தவறி விழுந்து இந்த மாதிரியான அபாயத்திற்குள்ளானான் என்று சொல்வதற்கிடமில்லை. ஒன்று, யாராவது கொலை செய்து, கொலையுண்ட மனிதன் இன்னானென்று உருப்படி தெரியாமலிருக்கும் வண்ணம் அவன் உடம்பைச் சின்னாபின்னப் படுத்தக்கருதி அம்மாதிரியாகத் தண்டவாளத்தில் நீளப்போட்டிருக்கவேண்டும்; இல்லையோ, ஏதோ மனோவியாகூலத்தால் தற்கொலை செய்துகொள்ளக் கருதியவன், பின்பு தன்னை யின்னானென்று தெரிந்துகொள்ளாமலிருப்பதற்காக அவ்வாறு வேண்டுமென்றே தண்டவாளத்தில் நீட்டுப்போக்காகப் படுத்துக்கொண்டிருக்கவேண்டும். இவ்விரண்டிலொன்றாகத்தான் நிச்சயமாய் இருந்து தீரவேண்டும்.

திருவிடைமருதூரில் இந்த சமாசாரம் தெரிந்தவுடன் அங்கு நடந்த அமளிக்கு ஓர் எல்லையில்லை. சிறிய ஊரானதால் ஒவ்வொருவரும் இதைக்குறித்தே பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வூர் போலீஸார்களும் உடனே அவ்விடத்துக்குப்போய் அந்தச்சவத்

தையும் அதனருகிற் கிடந்த துணிமணிகளையும் எடுத்து வந்து போலீஸ் ஸ்டேஷனில் ஜாக்கிரதையாக வைத்தார்கள். பிறகு பரிசோதித்துப் பார்த்து 1. இறந்தவன் சுமார் 35-வயதுள்ளவனென்றும், 2. $5\frac{3}{4}$-அடி உயரமுள்ளவனென்றும், 3. பச்சைச் சகலாத்தினுற் செய்யப்பட்ட கண்மூடித்துண்டு ஒன்று கிடந்தமையால் இறந்தவனுக்கு ஒரு கண் சிறிது மங்கலென்றும், 4. கைவிரல் நுனிகளிலும் முன் கையிலும் கந்தகத் திராவகம்பட்டுக் கறுத்துப் போயிருந்த அடையாளங்களிருந்தபடியால் இறந்தவன் கந்தகத் திராவகம் சம்பந்தப்படக்கூடிய வேலை செய்பவனென்றும் நிச்சயித்தார்கள். இவ்விஷயத்தில் அவ்வூரார் தத்தமக்குத் தோன்றியபடியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்களேயன்றித் தங்கள் கருத்தின்னதென்று ஒருவராவது போலீஸாரிடம் சொல்லத் துணியவில்லை. கிராமாந்தரத்தில் போலீஸாரிடத்திலிருக்கும் பயம் அவ்வளவு. அப்படியவர்கள் பயப்படுவதற்குங் காரணமில்லாமற்போகவில்லை. ஏதாவது சமாசாரந் தமக்குத் தெரிந்ததைச் சொன்னுல் அதைக் கேட்டுக்கொண்டு அதிலெவ்வளவு உண்மையிருக்கலாமென்று இந்தப் போலீஸார்கள் ஆராயப்போவதில்லை. முதலில் சமாசாரஞ் சொன்னவனைப் பிடித்து வைத்துக்கொண்டு உனக்கு இந்தச் செய்தி யார் சொன்னுர்? உனக்கு எப்படித் தெரிந்தது? என்ன? ஏது? நன்ருகத் தெரிந்துகொள்ளுகிற வரையில் இதைவிட்டு அசையக்கூடாது. உன் பேரென்ன? ஊரென்ன? என்று தாறுமாருகச் சொல்லி மருட்டிக் கச்சேரி முதலான இடங்களுக்குப் பலதடவை யலைக்கழிப்பதனுல்தான் கிராமவாஸிகள், சில போது பட்டினவாஸிகளுங்கூடப் போலீஸா! அப்பா, அது பெருந்தொல்லை. அந்தச் சனியனில் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது, என்று நடுங்குகிருர்கள். இதுவாகும் நம் போலீஸ் டிபார்ட்மெண்டின் ஒழுங்கும் அதைப்பற்றி நம்மவர்க்குள்ள அபிப்பிராயமும்.

இது நடந்த மறுநாள் அவ்வூரில் கொஞ்சம் கச்சேரிக்குப் போக்கு வரத்துள்ள ஒருவன் போலீஸாரிடம் சென்று சுந்தரத்தாய்ச்சி வீட்டில் வந்திருந்த மனிதனைக் காணுமையால் ஒருவேளை இறந்தவன் அவனுகவிருக்கலாமென்று சொன்னுன். அந்தச் சுந்தரத்தாய்ச்சி யென்பவள் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கும் ஒரு வீட்டிற் குடியிருந்துகொண்டு வருகிறவர்களுக்குச்

சாப்பாடு போட்டுக்கொண்டிருந்தாள். அவ்வீட்டில் ஆறு மாத காலமாக ஒருவன் ஜாகை வைத்துக்கொண்டு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தான். ஆனால் அவ்வூரார் ஒருவரும் அவனைப் பார்த்ததில்லை. ஆகையால் அவன் வருவதும் போவதும் இரவிலேயே நடந்திருக்கவேண்டும். சுந்தரத்தாய்ச்சிக்கு நாகையா என்று ஒரு பிள்ளை யுண்டு. அவன் சொல்லத்தான் அவ்வூராருக்கு அப்படி ஒரு மனிதன் வந்து போவதாகத் தெரியும். அவன் அந்நிய நாட்டான் என்றும், மிகவும் டம்பக்காரன் என்றும், வாயால் உச்சரிக்க முடியாத முழ நீளமுள்ள பெயருடையவனென்றும் அவன் சொல்லியிருந்தான். அவனுடைய நடத்தையெல்லாம் மிகவும் விசித்திரமாக இருக்குமாம். இருந்தாற்போலிருந்து திடீரென்று போய்விடுவானும். பின்பு வாரக்கணக்காகத் திரும்பிவரமாட்டானும். அவன் எங்கு போகிறானென்பதும் தன் தாய் சுந்தரத்தாய்ச்சிக்குத் தெரியாதாம். அவன் திரும்பி வரும்பொழுதெல்லாம் விடியற் காலையிலேயே வருவானும். இந்த சமாசாரங்களெல்லாம் போலீஸாருக்குத் தெரிந்தவுடனே சுந்தரத்தாய்ச்சியாவது அல்லது அவள் பிள்ளையாவது தங்கள் வீட்டில் வந்துகொண்டிருந்த மனிதனைக் காணுமென்று சொல்லாமலிருக்க ஊரார் வந்து சொல்லிக்கொள்வது ஆச்சரியமாக இருக்கிறதென்று எண்ணினார்கள். உடனே இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களைக் கூட்டிக்கொண்டு சுந்தரத்தாய்ச்சி வீட்டுக்குப்போய்ப் பார்த்தபொழுது அவ்வீட்டின் கதவு தாளிட்டுப் பூட்டப்பட்டிருந்தது. என்ன இடித்தும் பதிலில்லாமையால் கதவையுடைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் உள்ளே நுழைந்தார்கள். அங்கு ஒருவரையுங் காணாமையால் ஒவ்வொரு உள்ளாகச்சோதிக்க ஆரம்பித்தார்கள். கடைசியில் ஒரு சிறு உள்ளில் பரப்பப்பட்டிருந்த படுக்கையில் சுந்தரத்தாய்ச்சி கழுத்திற் சிறிது காயத்துடன் கொலையுண்டு கிடந்ததைக் கண்டார்கள். அவள் மகன் சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை. அந்த வீட்டிலிருந்த சாமான்களெல்லாம் அப்படியே யிருந்தன. அங்கு ஒரு பலகையிற்கிடந்த சில்லறைக் காசு கூட போட்டபடியே யிருந்தது. ஆதலால் சுந்தரத்தாய்ச்சியைக் கொன்றவன் திருட வந்தவனல்ல. காரணம் இன்னதென்று தெரியாமல் இரண்டு கொலைகள் இந்தச் சின்ன ஊரில் இவ்வளவு

சீக்கிரத்தில் நடந்தது எல்லோருக்கும் மிகவும் பெரிய வியப்பாக இருந்தது. ஒருத்தருக்கும் தலை கால் தெரியவில்லை. நாகையன் போனவிடமோ சிதம்பர ரகஸியமாக விருந்தது. அவனது அங்க அடையாளங்களை ஒவ்வொரு ஊரிலுமுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கும் தந்திமூலமாய் அறிவித்தும் ஓர் இடத்திலாவது அவன் காணப்படவில்லை. போலீஸாரும் அவன் தான் அந்த அந்நிய நாட்டானை அவன் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொலைசெய்து தண்டவாளத்தில் போட்டுவிட்டு அதற்குச் சாக்ஷி சொல்லக்கூடிய தனது தாயாரையும் கொலை செய்துவிட்டு எங்கேயோ கண்காணமல் ஓடிப்போய் விட்டான் என்று தீர்மானித்து அவ்வாறே மேலதிகாரிகளுக்கும் ரிபோர்ட்டு எழுதிவிட்டார்கள்.

அத்யாயம் 2.

அதே மாதம் 20-ம் தேதி பிற்பகலில் மைலாபூரில் எனது யஜமானராகிய வக்கீல் M. T. கோபால கிருஷ்ணையர் வீட்டில் நான் உட்கார்ந்திருந்தபொழுது வாசற்கதவை ஒருவர் தட்டியதுபோற் சத்தம் கேட்டது. உடனே நான் எழுந்துபோய்க் கதவைத் திறந்தேன். அங்கு மிகவும் ரூபவதியான ஒரு பெண் நிற்கக்கண்டேன். அவள் என் யஜமானரைப் பார்க்கவேண்டுமென்று சொன்னதால் அழைத்துப்போய் அவரிடம் விட்டேன். உடனே அவள் என் யஜமானரிடம் பின் வருமாறு கூறினாள். “ஐயா, என் பெயர் மீனாக்ஷி; நான் முக்கியமான ஒரு விஷயத்தைக் குறித்துத் தங்களிடம் சட்ட சம்பந்தமாக ஆலோசனை செய்யவேண்டுமென்னு மெண்ணத்தால் முன்பின் தெரியாமலிருந்தபோதிலும் திடீரென்று இவ்வாறு வந்தேன். தங்களைப்பற்றி நான் மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். மிகவும்சமர்த்தரான தாங்கள்தாம் எனக்கு இவ்விஷயத்தில் புத்தி மதி சொல்ல வல்லவர்கள். என்னுடைய விஷயமோ மிகவும் முக்கியமானது. நான் ஸாம்பாஜி ராய் என்னும் அந்நிய நாட்டு ராஜ குமாரனுக்குப் பத்னியாவதாக வாக்களித்திருந்தேன். அவன் தான் முந்தாநாள் தினம் திருவிடைமருதூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் தண்டவாளத்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தவன்.”

வக்கீல்:—“ஓகோ, அது விஷயமாகத் தொந்திரவி லகப்பட்டுக் கொண்டிருக்கிறாயோ? அதனால் தான் என்னிடம் ஆலோ

சிக்க வந்தாயோ? நல்லது, நான் என்ன செய்யவேண்டுமென் பதைச் சொல்லு பார்ப்போம்."

மீனாக்ஷி:—"நான் சொல்லுங்கதை யொருவேளை தங்களுக்கு அசட்டுத்தனமாகத் தோன்றலாம். இருந்தாலும் நான் சிறு பெண் தானே. ஆறு மாதத்திற்கு முன்பு நான் பள்ளிக்கூடத்துப் படிப்பை முடித்துக்கொண்டு என்னுடைய கார்டியனாகிய மாசிலாமணியிடம் போயிருப்பதற்காகத் தஞ்சாவூரிலிருந்து நான் ரயிலில் வரும்பொழுது முதன் முதலில் இந்த ஸாம்பாஜி ராய் என்னும் ராஜகுமாரனைக் கண்டேன். அவன் என்னிடம் மிகவும் கவனமும் பக்ஷமுமுள்ளவனாகவிருந்தான். தான் மகாராஷ்டிர தேசமென்றும் அங்கு நடந்த கலகத்தில் தன்னை ஊரைவிட்டுத் துரத்திவிட்டதாகவும், தனக்கு அங்கு உள்ள ஏராளமான சொத்துக்களையெல்லாம் ஆங்கிலேயர்கள் பிடுங்கிக்கொண்டுவிட்டதாகவும், தாம் தற்காலம் திருவிடைமருதூருக்குச் சமீபத்திலுள்ள ஒரு குடிசையில் குடியிருந்து வருவதாகவும் அவன் சொன்னான். எனக்கப்பொழுது உண்டான சந்தோஷத்திற்களவில்லை. ஏனெனில் எனது கார்டியனாகிய மாசிலாமணியின் வீடும் அவ்வூருக்குச் சமீபத்திலேயே யிருந்ததால் அடிக்கடி இந்த ஸாம்பாஜியைப் பார்க்கலாமென்னுமெண்ணமுண்டாயிற்று. வீணே கதையை வளர்ப்பதிற் பிரயோஜனமென்ன. மாசிலாமணியின் மனைவி யென்னிடம் மிகவும் பிரீதியுள்ளவளாக இருந்தாள். அவள் தூங்கும் சமயங்களில் நான் ரகஸியமாக வெளியிற்போய்ச் சமீபத்திலுள்ள வயற்காடுகளில் ஸாம்பாஜியைக் கண்டு அடிக்கடி பேசி வருவது வழக்கம். அதிசீக்கிரத்தில் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மிகவும் இச்சிப்பதாகத் தெரிந்துகொண்டோம்."

வக்கீல்:—"உன் கார்டியன் செய்தி யென்ன"?

மீனாக்ஷி:—"என்னுடைய கார்டியன் நான் திருவிடைமருதூர் போன முதலிரண்டு வாரங்களும் ஊரில் இல்லை. பிறகு அவர் திரும்பி வந்தவுடன் யாரோ வேலைக்காரன் நான் செய்ததைப் பார்த்திருந்து அவரிடம் சொல்லிவிட்டான்போலிருக்கிறது. அவர் எனக்கொரு பெரிய பிரசங்கம் செய்தார். அந்நிய

நாட்டுப் பசல்களை நம்பக்கூடாதென்றும் அதிலும் பணக்காரி யாயிருப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டு மென்றும் வெகுவாகச்சொன்னார். அவரென்னைக்கடுமையான காவலில் வைத்திருந்தமையால் அவர் ஊரிலிருந்த ஒரு வார மளவும் நான் எனது பிரியனான ஸாம்பாஜியைப்பார்ப்பதற்கு வெளியிற் போகக்கூடாமலிருந்தது. ஆனால் அவர் ஊரை விட்டுப் போன க்ஷணமே திரும்பவும் முன்போலச சந்தித் தோம். இவ்வாறு எனது கார்டியன் செய்த இடையூறுகளெல் லாம் எங்களது ஆசையை அதிகரிக்கச் செய்தது. நல்லவேளை யாய் எனது கார்டியனுக்குக் கார்யாந்தரமாய் அடிக்கடி வெளியிற்போக நேர்ந்ததால் நாங்களும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்னும் பழமொழிப்படி அச்சமயங்களைப் பலவாறாக உபயோகப்படுத்தினோம். எனக்கு வயது வந்து நான் யதேச்சையாக ஆனதும் நாங்களிருவரும் கலியாணம் பண்ணிக் கொள்வதாகத் தீர்மானித்தோம். எனக்கு இவ் வளவு ஆஸ்தியுள்ளதென்று தெரியாது. என் தகப்பனார் மிக வும் தனிகரானபடியால் நான் வயது வந்ததும் ஏழையாயிரு க்கமாட்டேனென்று மட்டும் எண்ணினேன். நாளது மாதம் 9-ம் தேதி தான் எனக்கு 18-வயது நிரம்பியது. அனறைய தினம் எனது கார்டியன் என்னைத் தனியாக அழைத்துப் போய் எனக்கு 40,00,000 ரூபாய் ஆஸ்தி வைத்திருப்பதாக வும், அப்போது நான் போதுமான வயதுள்ளவளாக ஆகி விட்டதால் இனியதை என்னிஷ்டப்படி நான் உபயோகப் படுத்தலா மென்பதாகவுஞ் சொல்லி யென்னிடம் இந்த 40,00,000 ரூபாயையும் கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட் டாகக் கட்டிக் கொடுத்தார். நான் இப்பொழுது மிகவும் பணக்காரி யாகிவிட்டதால் உடனே சென்னப்பட்டணம் போய் அங்கு என்னுடையவும் ஸாம்பாஜியுடையவும் அந்தஸ் துக்குத்தக்கபடி ஒரு வீடு வாங்கிக்கொண்டு அங்கேயே குடித் தனம் செய்வதாகத் தீர்மானித்தேன். கலியாணமான பிறகு வெளிதேசம் போவதாகவும் தீர்மானித்தேன். ஸாம்பாஜி யும் அதற்கிணங்கவே, நாங்களிருவரும் பட்டணத்திற்கு வந் தோம். இங்கு வந்ததும் ஸாம்பாஜி. "கலியாணமானதும்

நாம் அந்நிய தேசத்திற்குப் போகிறவர்களாகையால் கவர்ன் மெண்டு பிராமிஸரி நோட்டாக விருப்பதில் பிரயோஜன மில்லை. பணமாக மாற்றி வைத்துக்கொண்டால் நலமாயி ருக்கும்" என்று சொன்னான். அதை நான் ஒத்துக்கொண்டு அந்த நோட்டுக்களிலெல்லாம் கையெழுத்து செய்து அவை களை மாற்றி வரும்படி யவனிடமே கொடுத்தேன். அவனும் அவ்வாறே மாற்றிக்கொண்டு வந்த பிறகு சென்ற ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் தான் திருவிடைமருதூருக்குப் போய், அங்கே சில்லறையாக யிரண்டொருவருக்குக் கொடுக்கவேண் டிய கடன்களைக் கொடுத்துவிட்டு மறுநாளே வருவதாகப் போனான். நேற்றுக் காலை நான் காப்பி சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருந்தபொழுது சுதேசமித்திரன் பத்திரிகை கிடை த்தது. அதில் திருவிடைமருதூருக்குச் சமீபத்தில் நடந்த கொலையைப்பற்றி வாசித்தேன். அங்கு தண்டவாளத்திற் கிடந்த சவத்தின் துணி மணி வர்ணனைகளைக் கவனித்த பொழுது கொலையுண்டவன் என் ஆசை நாயகனெனத் தீர் மானித்தேன் ஈசுவரனே! நான் இதை என்னமாகச் சகிப் பேன்."

வக்கீல்:—"உனக்கு இத்தகைய துக்க நேர்ந்ததைப்பற்றி மிகவும் துக்கிக்கிறேன். ஆனால், நான் இவ்விஷயத்திலென்ன செய்ய வேண்டுமென்பதை நீ யின்னுஞ் சொல்லவில்லை."

மீனாக்ஷி:—"வேறு என்ன? என் பணத்தைப் பற்றித் தான். அது முழுதும் அவனிடமே யிருந்தது. அவன் ஊருக்குப் போகும் பொழுது கடைச் செலவுக்காக 50-ரூபாய் கொடுத்துவிட்டுப் போனான். அதைத்தவிர பைசா அளவிலும் என்னிடம் இல்லை. என் நண்பனைக் கொலைசெய்து இந்தப்பணத்தை யபகரித்தவ னைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் தாங்கள் எனக்கு உதவி செய்யவேண்டும்."

வக்கீல்:—"நல்லது, என்னால் கூடியமட்டில் நான் பிரயாசைப் படுகிறேன். வேறு விசேஷமொன்றுமில்லையே? நீ இந்த ஊரில் எங்கிருக்கிறாய்? உன் மேல் விலாசத்தைக் கொடுத்து விட்டுப்போ. நான் சீக்கிரத்தில் மேல் நடவடிக்கைகளைத் தெரிவிக்கிறேன்."

உடனே மீனுக்ஷியும் ஒரு துண்டுக்கடிதத்தில் தனது இருப்பிடத்தை யெழுதிக்கொடுத்துவிட்டு உத்திரவு பெற்றுக்கொண்டு போனுள். நான் வாசற்கதவை முன்போலத் தாளிட்டுக்கொண்டு என் யஜமானரிடம் வந்து "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழிக்கு இக்கதை நல்ல நிதர்சனமாக இருக்கிறது. அந்த ராஜகுமாரனென்று சொல்லப்பட்டவனைக் கொன்றவன் எவ்வளவு போக்கிரியோ அதிற் சற்றேனுங் குறைந்தவனல்ல அந்த ராஜகுமாரனென்று சொல்லப்பட்டவனும் உங்களுக்கு என்ன தோன்றுகிறதையா" என்றேன். அவரும் என்னிடம் வெகு கவுரவமாகத் தானே "நீ சுத்த மக்கு எனத்தோன்றுகிறது" என்ருர்.

அத்யாயம் 3.

அன்று சாயங்காலம் வெளியான சமாசாரப் பத்திரிகைகளிலும் திருவிடைமருதூர்க் கொலைவிஷயமாகப் புதியவிஷயங்களொன்றுங் கிடையாது. நாகையன் இருக்குமிடத்தைப் பற்றியும் ஒரு சங்கதியும் தெரியவில்லை. நாளைய தினமாகிய வெள்ளிக்கிழமை இன்குவெஸ்ட் என்னும் அபமிருத்யு விசாரணை நடக்கப்போவதாகமட்டும் போட்டிருந்தது. அதில் ஏற்கனவே சேகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்த சங்கதிகளைத் தவிரப் புதிதாகப் போலீஸார் ஏதேனும் வெளிப்படுத்தப் போவதாகத் தெரியவில்லை. எனது யஜமானர் இதுவிஷயத்தில் தாம் பிரவேசித்தால் போலீஸார் மிகவும் வருத்தப்படுவார்களென்றும், அதை யுத்தேசித்துத் தாம் பேசாமலிருந்துவிட்டால் போலீஸாருடைய முட்டாள் தனத்தால் குற்றவாளி கைக்ககப் படாமற்போய் மீனுக்ஷியின் பணத்திற்கும் அவளுடைய உயிருக்குமே மோசம் வந்துவிடுமென்றும், ஆதலால், வந்தது வரட்டுமென்று தான் இது விஷயத்தில் பிரவேசிப்பதாயும் சொல்லி, என்னை உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் மீனுக்ஷி வந்து சொல்லிவிட்டுப்போன விஷயங்களையெல்லாம் இந்தக் கேஸ் விஷயமாகத் துப்பு விசாரிப்பதற்கு அப்போது சென்னப் பட்டணம் வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தெரியப்படுத்திவிட்டு வரும்படி சொன்னுர். நான் அவ்வாறே போய்ச் சொன்னதும் அந்த இன்ஸ்பெக்டருக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. "நாகையன் தான் கொலை செய்தவனென்று நாம் முன்ன

மேயே தீர்மானித்துவிட்டோம். ஆனால் அவன் இவ்வாறு கொலை செய்வதற்குக் காரணம் தெரியாமலிருந்தது; இப்பொழுது இந்த சமாசாரத்தைக் கேட்டதும் எல்லாம் வெட்ட வெளியாக ஆகிவிட்டது. இந்தப் பணத்திற் காசைப்பட்டே அந்த நாகையன் ஸாம்பாஜியைக் கொன்றிருக்கிறான். அதற்கு சாக்ஷி சொல்லக்கூடிய தன் தாயாரையுங் கொலைசெய்துவிட்டு அவ்வளவு பணத்தையும் தூக்கிக்கொண்டு எங்கேயோ ஓடிப்போய் விட்டான். இந்தப் பட்டிக்காட்டுப் பயலுக்கு இவ்வளவு துணிச்சலா? இவன் கொண்டு போன அவ்வளவு பணமே இவனைக் கண்டுபிடித்துக் கொடுத்து விடும். அவனை ஒரு நிமிஷம் கண்டு பிடித்துவிடுகிறேன். எனது முக்கியமான கான்ஸ்டபிளாகிய மருதையை இப்பொழுதே திருவிடைமருதூருக்குப் போகச் சொல்லுகிறேன். உன் யஜமானராகிய கோபாலகிருஷ்ணையருக்கு இன்னும் ஏதாவது சமாசாரங்கள் தெரியவேண்டியிருந்தால் அவனைத் தெரிவிக்கச் சொல்லுகிறேன். உன் ஐயர்சொற்படி அவனை நடக்கச்செய்கிறேன்" என்று சொல்லி என்னை யனுப்பிவிட்டார். நான் வீடு வந்ததும் வாசலில் ஒரு வண்டியில் என் எஜமான் உடுப்புக்களையெல்லாம் போட்டுக் கொண்டு பயணமாக இருந்தார். என்னைக் கண்டதும் "வாடா கிட்டு, வண்டியிலேறிக்கொள், திருவிடைமருதூர் போய்வரலாம் வா; அந்தக் கேஸ் விஷயமாக ஒருவிதமாக நான் மனதில் தீர்மானங்கொண்டிருக்கிறேன்; அது சரி, தப்பு என்பது நேரில் அந்த இடத்தைப்போய்ப் பார்த்தால்தான் தெரியும், வா போவோம்" என்றார். உடனே இருவரும் திருவிடைமருதூருக்கு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு ரயிலேறினோம். வழியில் என் யஜமானர் ஒன்றும் பேசவேயில்லை. மிகவும் சிந்தையில் ஆழ்ந்திருந்தார். என்றாலும், இடையிடையே அவர் கண்களிலுண்டான பிரகாசத்தாலும், அவர் முகத்திலுண்டான புன்னகையாலும், அவருடைய ஸ்வபாவத்தை நன்கறிந்த நான் அவர் இந்த விஷயத்தில் குற்றவாளி யின்னாரென்பதைக் கண்டுகொண்டாரென்பதை நிச்சயமாய் அறிந்தேன். நாங்கள் அந்தச் சின்ன ஸ்டேஷனாகிய திருவிடைமருதூர் வந்ததும் அங்கு கான்ஸ்டபிள் மருதையும் வந்திருந்ததைக் கண்டோம். மருதை டிக்கெட்டு கொடுக்கிற குமாஸ்தாவிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். என் யஜமானரும் சற்றுநேரத்

துக்கெல்லாம் அவன் அருகிற்போய் "நான் உன்னை இங்கு அதிக மாகத் தாமதிக்கும்படி செய்யமாட்டேன், இன்னுங் கொஞ்ச நாழி கழித்து உன்னுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் அந்த சவத்தைப் பார்க்க விரும்புகிறேன். அதற்குள்ளாக இந்த ஊர் வழியாக நடந்துபோவோம். எதாவது புதிதாகச் சமாசாரங்கள் உனக்குத் தெரிந்திருந்தால் சொல்." என்றார்.

மருதை:—(சிறிது படபடப்புடன்) "புதிதாக ஒரு சங்கதியையுங் காணோம். இந்தக் கேஸ் பெரிய தொல்லையா யிருக்கிறது. இதில் நடுவில் யாராவது தலையிட்டால் இதனுண்மை ஒரு பொழுதும் வெளிப்படு மென்று தோன்றவில்லை."

கோபாலகிர்ஷ்ணையர்:—(அவனுடைய பிந்திய வாக்கியங்கள் காதிற்படாதவர்போல) "ஓகோ நீ அந்த டிக்கெட் குமாஸ்தா விடம் பேசிக்கொண் டிருந்தாற்போ லிருக்கிறதே. அவர் அந்த அந்நியநாட்டு ராஜ குமாரனைப்பற்றி என்ன நினைக்கிறாரோ. அவ்விராஜ குமாரனை யொருவராவது பார்த்ததாகத் தெரியவில்லையே. ஆனால் இங்கு ரயில்வே ஸ்டேஷனி லுள்ளவர்கள் கட்டாயம் அவனை யடிக்கடி பார்த்திருக்கவேண்டுமே."

மருதை:—"இங்கிருக்கும் போர்ட்டருகளும் டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தாவும் அவனை ஒரே ஒருதரந்தான் பார்த்திருக்கிறார்களாம் அதுவும் சென்றதிங்கட்கிழமை காலை $7\frac{1}{2}$ மணிக்கு வருகிற பாஸ்ட் பாஸெஞ்சர் வண்டியில் அவன் வந்து இறங்கின பொழுது எல்லோரும் பார்த்தார்களாம் அன்றிரவு சுமார் 11 மணிக்கெல்லாம் அவனை ஒருவன் மட்டும் பார்த்தானும். அப்பொழுதுதான் போட்டுமெயில் சென்றிருந்ததாம். ஸ்டேஷனிலுள்ளவர்களெல்லாம் கதவுகளைச் சாத்திக்கொண்டு படுக்க முயன்றார்களாம். அப்பொழுது இந்த ஸாம்பாஜி நாகையனோடு எதோ பேசிக்கொண்டு ரயில்வே கேட்டைப்பார்க்கச் சென்றானம்."

வக்கீல்:—"அவன் பார்வைக்கு என்னமாக இருந்தானும்?"

மருதை:—"அந்நிய நாட்டானைப்போலவே தோன்றினானும். தலையில் கறுத்தநீண்ட மயிரும் நீண்ட மீசையும் நல்ல புஸ்தியும் உண்டாம். முகத்தில் கத்திவெட்டுக் காயம்போல் ஒரு மச்ச

மும் ஒரு கண்ணில் கண்மூடியும் இருந்ததாம். அவன் எப்படியிருந்து தொலைந்திருந்தாலென்ன? இப்பொழுது கொஞ்சமேனும் அடையாளந் தெரியவில்லை." இவ்வாறு பேசிக்கொண்டே மருதை அந்த ஸ்டேஷன் ப்ளாட்பாரத்தைவிட்டிறங்கி கொலை நடந்த பக்கமாகத் தண்டவாளத்தோடு சென்றான். நாங்களும் பின்றொடர்ந்தோம், எங்களுக்கு இடதுபக்கமாக இருந்த வயல்களுக்கும் ரயில்வே லயனுக்கும் நடுவில் நெருக்கமாக வேலியொன்று கட்டப்பட்டிருந்தது. எங்களுக்கு முன்பாகச் சுமார் 200 கஜதூரத்துக்கு அப்பால் கொலை நடந்த இடமாகிய ரயில்வே கேட் இருந்தது. அதற்கு இருபதடிக்கு இப்பால் அந்த வேலியில் ஓர் இடவெளி காணப்பட்டது. அதை மருதை எங்களுக்குச சுட்டிக் காண்பித்து "இவ்வழியாகத்தான் நாகையன் ஸாம்பாஜியை ஏதோ தந்திரம்பண்ணி அந்த வயலுக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கு அவனைப் பிரக்ஞாபங்கப்படுத்தி பிறகு இழுத்துக் கொண்டுவந்து இந்தத் தண்டவாளத்திற் போட்டிருக்கவேண்டும். இந்த இடவெளி இதற்குமுன் மிகவும் சிறிதாக இருந்ததாக மாசிலாமணி யெனக்குச் சொல்லுகிறான். ஆதலால் இது அதிஸமீபத்தில்தான் இவ்வளவு விசாலப்படுத்தப்பட்டிருக்கிறது" என்றான்.

வக்கீல்:—"மாசிலாமணியா?"

மருதை:—"ஆம், மாசிலாமணிதான். இவைகளெல்லாம் அவருடைய வயல்கள்தாம். அவருடைய வீடுந் தோட்டமும் அதோ எதிர்ப்பக்கத்திலிருக்கின்றன."

வக்கீல்:—"ஆ, அப்படியா? நிரம்ப சந்தோஷம். நான் இந்த ஊரைவிட்டு இன்று போவதற்குமுன் மாசிலாமணியை நேரில் அவசியம் போய்ப் பார்க்கவேண்டும்."

இவ்வாறு பேசிக்கொண்டே இன்னுனென்று தெரியாத அந்நிய நாட்டான் மிகவும் கோரமாய்க் கொலையுண்ட இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கேயே நின்றுகொண்டு என்னுடைய யஜமானன் கீழ்பூமியை மிக்கக் கவனமாய் உற்றுநோக்கினர். அக்கம் பக்கமெல்லாம் சுற்றிப்பார்த்தார். நானும் கான்ஸ்டபிளும் ஒன்றும் பேசவில்லை. எங்களுக்கு ஒன்றுந் தெரியாமற்போனபோதிலும்

அவர் மிகவும் தெரிந்தவர்போலக் காணப்பட்டார். இருந்தாற்போலிருந்து வெகுவேகமாக ஓடி அந்த வேலியின் இடைவெளி வழியாகச் சென்று அப்பாலுள்ள வயலையடைந்தார். நாங்களும் பின்னோடு சென்றோம். அந்த வயலில் அவர் தாறுமாறுமாக அலைந்தார். அவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்றே யெங்களுக்குக் தோன்றிற்று. சற்று நேரத்துக்கெல்லாம் அங்கிருந்து சுமார் 2 பர்லாங் தூரத்திலிருந்த ஒரு சிறிய குடிசைக்குச் சென்றார். அதற்கருகில் ஒரு தோட்டமும் இருந்தது. அந்தக் குடிசை யாருடையது என்று கேட்டார். அதற்கு மருதை சுந்தரத்தாய்ச்சியது என்றான். உடனே அந்தக் குடிசைக்குள் நுழையாமல் அடுத்த தோட்டத்திற்குள் சென்றார். அங்கு ஒரு ஓரத்தில் தோட்டத்திய சாமான்களை வைப்பதற்காக ஒரு சிறு உள் இருந்தது. அதில் என் யஜமானனுக்கு ஏதோ விசேஷமிருப்பதாகத் தோற்றினாற்போலிருக்கிறது. ஏனெனில் அநேக தீக்குச்சிகளைக் கொளுத்தி அந்த உள்ளை வெகுகவனத்துடன் சோதித்தார். எனக்கும் மருதைக்கும் மிகவும் களைப்புண்டாகிவிட்டது. நாங்களிருவரும் ஒருபுறமாக உட்காருவதற்கு இடம் பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று அந்த யஜமானர்? திரும்பி,“நல்லது, ஸ்டேஷனுக்குப் போய் சவத்தைப் பார்த்து மேல் ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்க நான் தயாராயிருக்கிறேன்” என்றார். உடனே மருதைக்குவந்த ஆத்திரத்துக்கு அளவில்லை. அவன் மாட்டேனென்று மறுதளிப்பனென்றே நினைத்தேன். ஆனால் அவ்வாறு அவன் செய்யவில்லை. என் யஜமானன் சொற்படி கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று அவனுக்கு மேலதிகாரிகளிடமிருந்து அவ்வளவு கண்டிப்பான உத்திரவு வந்திருக்கிறது போலும். அவன் உடனே எங்களுக்கு வழிகாட்டிக்கொண்டு போனான். நாங்களும் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் பேசாமல் அவ்வூர் வழியாக நடந்து சென்று அந்தச் சிறிய போலீஸ் ஸ்டேஷனை யடைந்தோம்.

அத்யாயம் 4.

அந்த ஸ்டேஷனில் உட்புறமாக இருந்த ஒரு சிறிய உள்ளுக்குள் மருதை யெங்களை யழைத்துச் சென்றான். அங்கு ஒரு மேஜையின்மேல் ஒரு வெண்மையான துணியால் போர்த்தப்பட்டு

அந்தச் சவங்கிடந்தது. அந்தப் போர்வையைக் கொஞ்சமேனும் அருவருப்பின்றி மெதுவாக என் யஜமானர் கையால் எடுத்தபோது என் கண்ணுக்குப் புலப்பட்ட காட்சியின் கோரத்தை வர்ணிப்பது அஸாத்தியம். நான் மிகவும் திகிலடைந்துவிட்டேன். சேவகா விர்த்தியின் கொடுமையால் அங்கு தங்கினேனேயன்றி யில்லா விடில் பத்துக்காதம் ஓடித்தான் திரும்பிப் பார்த்திருப்பேன். அதை நினைத்தா லின்னுங்கூட ஜுகுப்ஸையாக இருக்கிறது. மெய் யும் பதறுகிறது. கான்ஸ்டபிள் மருதைக்கும் என்னைப்போலவே பயமுண்டாயிற் றென்று தெரிந்துகொண்டேன். ஏனெனில் அவ னும் சவத்தைப் பார்க்காமல் அப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான். என் யஜமானனோ சற்றேனும் மனத்தளர்ச்சி யடையாமல் அப்போர்வையை முழுவதும் எடுத்துவிட்டு அருகில் வைக்கப்பட்டிருந்த துணிமூட்டையை யவிழ்த்து அவைகளையும் ஒவ்வொன்முக எடுத்துப் பார்த்து "இவைகளெல்லாம் இந்தச் சவத்தின்மேற் போடப்பட்டிருந்தனவோ?" என்று மருதையைக் கேட்டார். அதற்கவன் ஆம், இந்த மோதிரம் ஒன்று தவிர மற்ற வை யெல்லாம் அவன் மேலேயே போடப்பட்டிருந்தன. மோதிர த்தை மட்டும் கையிற் பிடித்துக்கொண்டிருந்தான்." என்றான்.

"சரிதான், இந்த மோதிரம் போட்டுப் பழகியதாக இருந்த போதிலும் இவன் என்னமா இதைப் போட்டுக்கொள்ளுகிறது? இவன் ஒருநாளும் இதைப் போட்டுக்கொண்டிருந்திருக்கமாட் டான். இவனுக்கு இது மிகவும் சிறிய தாயிற்றே." என்று சொல்லி விட்டு என் யஜமானர் அங்கிருந்த உடுப்புக்களையெல்லாம் ஒன்று விடாமல் தனித்தனியே யெடுத்துப் பார்த்துவிட்டுக் கடைசியாக மருதையைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர் "இவ்விஷயம் ஒரு வாறு முடிந்தால் உனக்கும் நல்லது எனக்கும் நல்லது. இதி லுள்ள ரகஸ்யத்தை வெளிப்படுத்தவோ ஒரே மார்க்கந்தான் உள் ளது. அம்மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டதும் ரகஸியம் முழுமை யும் வெளியாகிவிடும். ஆதலால் அதை நீ சீக்கிரம் கண்டுபிடிப்பா யென நம்புகிறேன்."

மருதை:—"இதிலிப்பொழுது தெரியாமலிருப்பது ஒன்று தான். அதாவது. இந்த இறந்து கிடக்கிறவன் இன்னானென்பதே. இவனைக் கொன்றவன் இன்னானென்பது எல்லோருக்குந்

தெரிந்தவிஷயம். அவன் ஏராளமான பணத்துடன் ஓடிப் போயிருப்பதால் அவனிருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதும் வெகு ஸுலபம்."

"இறந்தவன் இன்னானென்பதில் எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. அதில் ஒரு ரகஸ்யத்தையுங் காணேன். இதோ கிடக்கும் இந்தப் பிணம் இவ்வூரில் வஸித்துவந்த சுந்தரத்தாய்ச் சியின் மகனான நாகையனுடையதே." என்று என் யஜமானர் மிகவும் நிதானமாய்க் கொஞ்சமேனும் படபடப்பில்லாமல் ஏதோ ஸர்வ ஸாதாரணவிஷயத்தைச் சொல்வதுபோலச் சொன்னார். கான்ஸ்டபிள் மருதைக்கு இதைக் கேட்டதும் தூக்கிவாரிப்போட் டது. என்னைப்பார்த்து விழித்தான். அவன் சொல்லாவிட்டா லும் இந்தப் பயித்தியத்தோடு என்ன செய்வது என்று அவன் எண் ணினானென்பது நன்றாகத்தெரிந்தது.

"இந்த மனிதனுக்கு இந்தத் துணிகளில் ஒன்றாவது கொஞ் சங்கூடப் பொருந்தவேயில்லை யென்பது போலீஸாராகிய உங்க ளொருவருக்காவது தோன்றவில்லையே. இதுதான் இதுவிஷய த்திலெனக்குள்ள ஆச்சரியம்." என்றார் என் யஜமானர்.

மருதை:—"ஒவ்வொருவரும் ஓக்ஸ் கம்பெனியாரிடந்தான் சட்டை தைத்து வைத்துக்கொள்ளுகிறார் போலிருக்கிறது."

வக்கீல்:—"அடடே, வேண்டாமப்பா, எந்தத் தையற்காரன் தைத் தால்தான் என்ன? கால் நிஜார் மூன்றங்குலம் அதிக நீளமா கவும் சட்டைக் கைகள் நாலங்குலம் குட்டையாகவுமா தைப் பான்? இந்த மோதிரமோ இவன் சுண்டுவிரலுக்குக்கூடப் போதவில்லை. பாதரக்ஷையோ, இதைப் போட்டுக்கொண்டு இவன் நடந்திருந்தானேயானால் காலில் குறைந்தது பத்து இடத்திற் கடித்திருக்கவேண்டும். இவனால் பத்து அடிகூட நடந்திருக்கமுடியாது. இவன் காலிலோ ஒரு காயத்தையுங் காணோம்."

மருதை:—"ஒருவேளை இந்த உடுப்புக்களை எங்கேயாவது பழ விலைக்கு இவன் மலிவாக வாங்கியிருக்கலாம்."

வக்கீல்:—"என்ன, பாதரக்ஷையைக்கூடவா பழவிலைக்கு வாங்கு வன்? அப்படியே வைத்துக்கொண்டாலும் கட்டைவிரல் நுழையாத சிறிய வளையத்தையுடைய இந்தச்சிறிய பாதர

கைஷயையா வாங்குவன்? பழஞ்செருப்பை ஸர்வ தரித்திரனும் வாங்கமாட்டானே."

மருதை:—"அப்படியானல் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

வக்கீல்:—"இவை வேறெருவனுடைய துணிமணிகள். இதில் இன்னெரு விஷயமுங் கவனிக்கவேண்டும். இத்துணிகளோ மிகவும் உயர்ந்தவைகளாக இருக்கின்றன. இவைப் பிரபுக்கள் தாம் உடுத்துவார்கள். நிஜார், சட்டை, பாதரக்ஷை, எல்லாம் விலையுயர்ந்தனவாகவே யிருக்கின்றன. ஆனல் உள்ளுக்குள்ளிருக்கும் இடுப்புத்துணியும் மேல் குடுத்துணியும் சுத்தத் திராபையாயிருக்கின்றன."

மருதை:—"இந்நாளில் வெகுபேர்களை யப்படிப் பார்க்கலாம்."

வக்கீல்:—"நான் அதை ஒரு பெரிதாகச் சொல்லவரவில்லை. இவனைக் கொன்றவன் இவனுடைய அடையாளந் தெரியாமலிருக்கவேண்டியதற்கு எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவையும் வெகு தந்திரமாயும் கவனமாயுஞ் செய்திருக்கிறான். இவனுடைய சட்டைகளிலிருந்து பொத்தான்களையும் தையற்காரன் பேர் போட்டிருக்கும் துண்டையும் ஜாக்கிரதையாக எடுத்திருக்கிறான். கந்தக திராவகத்தால் முன்கையிலிருந்த பசசிலைப்பொட்டை யழித்திருக்கிறான். விரல் நுனிகளில் இருந்த அடையாளங்களையும் அவ்வாறே போக்கியிருக்கிறான்."

மருதை:—"கந்தக திராவக ஸம்பந்தமான வேலையோதோ செய்பவன். இவன் என்றல்லவா போலீஸார் தீர்மானித்திருக்கிறார்கள்."

வக்கீல்:—"ஹாஹா! போலீஸ் தீர்மானத்திற்குக் கேட்பானேன்; உலக்கைக் கொழுந்துகளல்லவா அவர்கள். அவ்வாறு வேலை செய்பவனுக விருந்தால் விரல் நுனிகளில் வேண்டுமானல் காயம்பட்டிருக்கலாம். முன்கையிற்கூட எதற்காகக் காயம்பட வேண்டும்? நீயே நன்றாக யோஜித்துப்பார் மருதை. மற்றெரு விஷயமும் ஞாபகப்படுத்திக்கொள். இவனை எந்த கோரமான ஸ்திதியிலும் ஏதாவது ஒன்றைக்கொண்டு அடையாளங் கண்டுபிடித்துச் சொல்லக் கூடிய ஸ்திரீயும் கொல்லப்பட்டுக் கிடந்தாளல்லவா?

மருதை:—"யார், சுந்தரத்தாய்ச்சியா?"

வக்கீல்:—"ஆம், இவன் தாயார்தான். இங்கே கிடக்கிறது இந்த ஊர் நாகையன் பிணந்தானென்று உனக்கே இப்பொழுது தோன்றவில்லையா? ராஜகுமாரனென்று சொல்லிக் கொண்டு திரிந்த அந்த ஸாம்பாஜி—அந்த பக்கா போக்கிரிப் பயல்—அந்தத்திருடன்—அந்தப் புளுகுணி—அந்தக் கொலை பாதகன்—இன்னும் போலீஸார் கையில் அகப்படாமல் திரிகிறானே."

மருதை:—"இருக்கலாம். நீங்கள் சொல்வது நிஜமாயிருக்கலாமென்று என்னை யறியாமலே எனக்கே தோன்றுகிறது ஆனால் இப்பொழுது நீங்கள் சொன்னதைக்கொண்டு எங்கள் கஷ்டம் என்னமா நிவர்த்தியாயிற்று? சொல்லப்போனால். பின்னும் அதிகமான கஷ்டத்தையல்லவா உண்டாக்கிவிட்டீர்கள். தமிழைத்தவிர வேறொரு பாஷையுந் தெரியாதவனும் 40 லக்ஷம் ரூபாயுடன் ஓடிப்போயிருக்கிறவனுமான எல்லோருமறிந்த ஒரு நாட்டுப்புறத்தானைக் கண்டுபிடிப்பது எவ்வளவு ஸுலபம். பல பாஷைகள் தெரிந்த அந்நிய நாட்டானாகிய ஒருவருக்கும் அடையாளந்தெரியாத ராஜகுமாரனை யினி இந்த பரதகண்டம் முழுமையும் தேடிக் கண்டுபிடிப்பது எவ்வளவு அஸாத்தியமான காரியம். நீங்களே சற்று யோஜித்துப்பாருங்கள்."

வக்கீல்:—(சிரித்துக்கொண்டு) "நீ இந்தியா முழுமையும் தேடிக் கொண்டு போகவேண்டாமப்பா. உடனே கச்சேரிக்குப் போய் ஒரு பிடிவாரண்டுக்கு மனுக்கொடு. அதிசீக்கிரத்தில் காரியம் நடக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆள் ஓடிப் போய்விடுவான். 'கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை' யென்றாகிவிடும். ஒரு கணப்பொழுதில், கண்மூடிக் கண் திறப்பதற்குள், திருவிடைமருதூர் மாசிலாமணியை அரெஸ்டு செய்வதற்கென்று ஒரு பிடிவாரண்டுடன் ஓடி வா. மாசிலாமணியின் வீட்டில் 40 லக்ஷம் ரூபாயும் வெகு சாவதானமாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் என்னுடைய கக்ஷிக்காரியாகிய மீனாக்ஷியினு

டையது. அப்படியே யவளையும் நாளையதினம் பிரமாண வாக்குமூலம் கொடுக்கச்சொல்லுகிறேன்."

மருதை:—"உங்களுக்கென்ன பயித்தியமா?"

வக்கீல்:—"பயித்தியமா? நானா? நான் சொல்வதெல்லாம் சரியென்று உனக்கே நிச்சயமாயிருக்குமே. பட்டணத்தில் மீனாக்ஷியென்னிடம்வந்து சமாசாரங்களையெல்லாம் விஸ்தாரமாகச் சொன்னபோதே இந்த யுக்தியை நான் ஊகித்து விட்டேனே. பின்பு அங்கிருந்து இங்குவந்த இந்த இடத்தைப் பார்த்தபிறகு இந்த இடமும் அந்தப் போக்கிரிப் பயலுடைய அயோக்கியத்தனத்திற்கு எவ்வளவு அனுகூலமாக இருக்கிறதென்று நன்கு புலப்படுகின்றது. இந்த விஷயத்தில் மூன்று சங்கதிகளை முக்கியமாகக் கவனித்தாயேயானால் நான் சொல்வது சரியென்று ஒத்துக்கொள்வாய். முதலாவது:—மாசிலாமணி வீட்டிலிருந்த பொழுதெல்லாம் மீனாக்ஷி யவளுடைய நண்பனைப் பார்க்கமுடியவில்லை. அவன் காரியாந்தரமாக ஊருக்குப் போனதாகப் புறப்பட்டதுமுதல் வழக்கமாகச் சந்திக்குமிடத்தில் அந்த வயலில் மீனாக்ஷியவனைப் பார்த்தாள். ஆனால் எப்பொழுதும் இரவிலேயே பார்த்தாள், அசசமயத்தில் அவன் போட்டிருந்த வேஷத்தை—கருப்பு மயிரையும் கத்திக்காயத்தையும்—இச்சிறுபெண் நிஜமென்றே யெண்ணி யேமாந்தாள். அவளுடைய பணம் முழுவதும் தன் கையில் நிச்சயமாக வந்தபிறகுதான் இவன் அவள்முன் பாகப் பட்டணத்தில் ஒரே யொருநாள் பகலில் தென்பட்டான். அன்றையதினமும் வேலை மிகவும் அதிகமாக இருந்ததால் இவனையவள் கவனித்திருக்க இடமில்லை."

மருதை:—"ஆம், எனக்கும் அந்த அடர்ந்த கறுப்பு மயிரும் கத்திக்காயமும் வேஷமாகத்தான் இருக்கவேண்டுமென்று தோன்றிற்று. சில பேர்கள் ஆள் உருப்படி, தெரியாமல் வேஷம் போட்டுக்கொள்வதில் மிகவும் ஸமர்த்தர்கள். மாசிலாமணியோ வழுக்கத்தலையனும் முகத்தில் மயிரில்லாதவனுமிருப்பதால் மாறு வேஷம் போட்டுக்கொள்வது அதிஸுலபம்."

வக்கீல்:—உடுப்பு மாற்றிக்கொள்வதும் மிகவும் ஸுலபமே. அந்தத் தோட்டத்தில் தனித்திருக்கும் ஆயுதங்கள் வைக்கும் அந்தச்

சிறிய அறையில் வெகு ஸௌகர்யமாக உடுப்புக்களை மாற்றிக் கொண்டான். மாசிலாமணியைப் போலொத்த ஒரு போக்கிரிக்கு அயலூருக்குப் போவதாகச் சொல்லி வீட்டைவிட்டு ரயில் பையுடன் புறப்பட்டுத் தன் வயல் வழியாகச் சென்று அந்த அறையில் போய் பையிலிருந்து உடுப்பை யெடுத்துமாற்றிக்கொண்டு காலவேளையில் ராஜகுமாரனுன ஸாம்பாஜி யென்று வெளிவருவது ஒரு பிரயாஸமான காரியமன்று. ராஜகுமாரனுகவிருந்து மீளவும் மீனுக்ஷியின கடுமையான கார்டியனுக ஆனதும் அவ்வாறேதான். இரண்டாவது: மீனுக்ஷியை இவ்வாறு யுக்தி செய்து ஏமாற்றியவன் அவளுக்கு நிஜமாக உள்ள ஏராளமான சொத்தின் அளவையும் அவளுக்குப் பதினெட்டு வயதானதும் அவ்வளவையும் அவளிடம் ஸ்வேச்சா விநியோகமாகக் கொடுத்துவிட வேண்டுமென்று அவள் தகப்பனர் எழுதியிருந்த உயில் ஷாத்தையும் நன்கு அறிந்தவனுக இருந்திருக்கவேண்டும்."

மருதை:—"வாஸ்தவந்தான். இதை யோஜிக்கும்பொழுது மாசிலாமணியாய்த்தான் இருக்கவேண்டு மென்று தோன்றுகிறது. தங்களுடைய மூன்ருவது சங்கதியென்ன?

வக்கீல்:—"அடிக்கடி இந்த ஊரைவிட்டுப் பல அயலூர்களுக்குப் போய்வந்ததாகச் சொல்லப்படும் இந்த அந்நிய நாட்டான் பன்முறை இந்த ஸ்டேஷன் ரயில் அதிகாரிகளின் கண்களில் பட்டிருக்கவேண்டும். ஆனல் கொலை நடந்ததற்கு முதனுள் வரையில் இவனை யொருவராவது பார்க்கவில்லை. முதனுளோவெனின் பகலில் வெளிப்படையாக வந்ததுமன்றி யன்றிரவிலும் இந்த நாகையனைக் கூட்டிக்கொண்டு எல்லோரும் காணும்படியாக ரயில்வே ஸ்டேஷன் வழியாகச் சென்ருன். இதில் இவன் கருத்தென்ன வெனில் தான் நாகையனைக்கொன்று தனது வேஷத்தை யெடுத்து அவனுக்குப் போட்டு அவன் சவம் உருத்தெரியாமல் போகும்படி தண்டவாளத்தி லெறிந்தபின்பு விடியற்காலத்தில் அதைப் பார்ப்பவர்கள் இது அவனுடைய சவமென்றும், இந்த நாகையன் அவனை யவ்வாறு கொன்றுவிட்டுப் பணத்தை யெடுத்துக் கொண்டு போய்விட்டா னென்றும் எல்லோரு மெண்ண

வேண்டு மென்பதே. கொலையையோ நடுநிசியில் அவனுடைய வயலிலேயே செய்துவிட்டான் என்பதில் தடையில்லை. பச்சிலைப்பொட்டினுல் அடையாளந் தெரியாமலிருக்கும்படி கந்தகத்திராவகத்தையும் உபயோகப்படுத்தினுன். பிறகு சுந்தரத்தாய்ச்சியையுங் கொன்றுவிட்டு ஸ்வஸ்தனுக வீடுபோய்ப் படுத்தான். இவ்வளவிற்கும் அவனது மனைவியும் உட்கையென்று எனது துணிபு. சில பெண்டுகள் அகமுடையானுக்கு மிகவும் கீழ்ப்படிந்தவர்கள்."—"நல்லது, கிட்டு! நாழிகையாகவில்லையா? நாம் ரயில்தப்பாமல் போகவேண்டாமா? இந்த மருதை நான் சொன்னவற்றையெல்லாம் நன்கு ஆலோசிக்கட்டும் அவனைத்தனியே விட்டுவிட்டுப் போவோம் வா."

மருதை:—"இல்லை ஐயா, எனக்கு யோஜிக்கவேண்டியது ஒன்றுமில்லை. நானும் ஸ்டேஷனுக்கு வருகிறேன்."

வக்கீல்:—"எதற்காக?"

மருதை:—"கும்பகோணத்திற்குப் போய் மாஜிஸ்டிரேட்டிடம் இது சங்கதிகளையெல்லாம் ரிபோர்ட்டுசெய்து பிடிவாரண்டு வாங்கிவருவதற்காகத்தான்."

* * * * *

இனி மருதை மேற்சொன்னவாறு ரிபோர்ட் செய்ததும், மாசிலாமணி அரெஸ்டு செய்யப்பட்டதும், அவன்மேல் இரண்டு கொலைக்குற்றம் சுமத்தப்பட்டதும், அவனது வீட்டு இருப்புப் பெட்டியில் 40 லக்ஷம்ரூபாய் அகப்பட்டதும் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லமாட்டாமல் அவனும் அவனது மனைவியும் விழித்ததும், மாஜிஸ்டிரேட்டு முன்பாக விசாரணை நடந்த காலத்தில் திடீரென்று மாசிலாமணி மனமுடைந்து செத்ததும் எல்லோரும் அறிந்த விஷயமே.

இவையெல்லாம் நடந்து மூன்று வருஷங்களாயின. மீனுக்ஷி இப்பொழுது என் யஜமானரையே சலியாணம் செய்துகொண்டு ஸுகமாக மைலாப்பூரில் வாழ்ந்துவருகிருள். அந்நிய நாட்டானுகிய ராஜகுமாரனைத்தான் இதற்குமுன் வெகு மும்முரமாய் நேசித்ததை மறந்துவிட்டனள்போலும்.

விபீஷணசரணாகதி.

பயப்பட்டாவது, பயப்படாமலாவது, சத்துருக்களுக்குள் எவனொருவன் சரணமென்று வருகிறானோ அவனைக் குருகுலவாஸம் பண்ணிச் சாஸ்திர மர்யாதையறிந்திருக்கிறவன் தன் பிராணன்களை விட்டுக் காப்பற்றவேண்டும். தன் பிராணன் போமென்னும் பயத்தினாலாவது எதிரியினிடத்தில் கைக்கூலி கொள்ளவேண்டுமென்கிற பக்ஷபாதத்தினாலாவது, இது செய்யத் தகுவது இது செய்யத் தகாதது என்றாராயாமலாவது, சரணாகதி பண்ணினவனைக் கபடத்தைவிட்டுத் தன் சக்தியுள்ள வளவுங் காப்பாற்றாமற் போனால், அவனை மஹா பாபியென்று லோகமெல்லாம் நிந்திக்கும். சரணாகதன், தன்னை ரக்ஷிக்க ஸமர்த்தனானவன் பார்த்துக்கொண் டிருக்கையில் ரக்ஷிக்கப்படாதவனாய் நசித்தால், அந்த ரக்ஷகன் ஆர்ஜித்த எல்லாப் புண்ணியங்களையும் வாங்கிக்கொண்டு அப் புண்ணியங்களாலடையக்கூடிய புண்ணியலோகங்களை யடைவன். இப்படி, சரணாகதனை ரக்ஷிக்க சக்தியிருக்க ரக்ஷியாமற்போனால் அவன் செய்த புண்ணியங்கள் ஸ்வர்க்கப்பிராப்திக்கு ஹேதுவாகா; அபயசஸ்ஸு முண்டாகும்; சரீரபலமனோ

பலங்களும் போய்விடும். கண்டுமெஹாமுனி யதார்த்த மாய்ச் சொன்ன சிரேஷ்டமான வசனத்தை நான் அனுஷ்டிக்கப்போகிறேன். அதைச் செய்தால், இந்த லோகத்தில் பாபங்கள் போய்க் கீர்த்தியுண்டாகும். பலோதய காலத்தில் நிரதிசயஸுகத்தையுங் கொடுக்கப் பெறலாம். தன் தோஷத்தைப் பார்த்துத் தேங்காமல் என்னுடைய குணத்தையே பார்த்து நம்பி ஒருகாலாவது வாசிகமாகவோ காயிகமாகவோ மானஸிகமாகவோ ப்ரபத்தி பண்ணினவனுக்கும் அவனோடு ஸம்பந்தித்தவைகளுக்கும் ஸமஸ்த பூதங்களால்வரு மாபத்தைப் போக்கித்தருவதே எனக்கு முக்கியமான ஸங்கல்பம். எதைத் தப்பினாலும் இதைத் தப்பமாட்டேன். என்னிடத்தில் மித்ரபாவ மாத்ரத்தையே பண்ணினவனுக்கும் அவன் ஸம்பந்திகளுக்கும் ஸகலவித பயங்களையும் போக்கி மங்களத்தைத் தந்து ரக்ஷிப்பதே அவசிய கர்த்தவ்யமாக வெண்ணி அப்படியே யதை யனுஷ்டித்துக்கொண்டு வருகிற நான், இப்படித் தன்னுடைய தாரபுத்திராதி ஸகல பந்துக்களையும் விட்டு ஸலக்ஷண ப்ரபத்திபண்ணிப் பரம புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தை யர்த்தித்து வந்த இந்த விபீஷணனுக்கு "ராவஹ ஶரணம் மத:" "எந்தையே ராகவ சரணம்" என்றபோதே அபயங் கொடுத்தேன். இவன் உம்மைப் புருஷகாரமாகக் கொண்டு என்னை யாச்ரயித்தவனாகையாலே இவன் மனோரதப்படி நீரே இவனை யழைத்துக்கொண்டு வாரும். நீர் போய்ப் பார்க்குமளவில் இவன் ஸாது வ்ருத்தனான விபீஷணனாகாமல், துர்வ்ருத்தனான இராவணனாயிருந்தாலும், இவன் விபீஷணனல்லன், அவன் தமயன் இராவணனென்று விட்டுவிடாமல் அவனையும் அழைத்துக்கொண்டு வாரும். விபீஷணனைக்கைக்கொண்டோமாகில் "விபீஷணஸ்து யஸ்சாத்ர"

என்கிறபடியே, தன் பக்கலில் ஒரு முத லுடையவனை ஸ்வீகரித்தோ மாவோம்; "ராவணஸ்ய நருஸம்ஸஸ" என்கிறபடியே, அந்த நருஸம்ஸனை ஸ்வீகரித்தோமாகில், அதுதான், நமக்குப் பெருமையாவது. விபீஷணனை ரக்ஷித்தால் அவனோடு கூடின நால்வரையும் ரக்ஷித்த தாகும்? இராவணனை ரக்ஷித்தால் லங்கை முழுமையும் ரக்ஷித்தோமென்று புகழுண்டாகும். இப் புகழ் என்னோ ஸமஸாக துக்கரான உமக்கு முண்டாகையால் என் ஸங் கல்பத்தைச் செய்து தலைக்கட்டி வையும்".

இப்படி, காகுத்தன், அருளிச் செய்த வார்த்தை யைக்கேட்டு வானர ராஜாவான சுக்கிரீவன் தன் பரிகர மான வானரர்களுடன் கூட முன்புள்ள கலகத்தை விட்டு, ஸ்ரீராமன் தன்னிடத்தில் பண்ணின ஸௌஹார்த் தத்தைக் கண்டு மறுத்துச் சொல்ல மாட்டாமல் அவ் வார்த்தைக் கனுகூலமாகவே பெருமாளுக்குப் பிரதியுத் தரம் சொல்வ தானான்.

"லோகநாத! ஸத்வகுண ப்ரதாநராய், சரணாகதரக்ஷ ணமே உத்கிருஷ்ட தர்மமென் றறிந்து, அதனால் ஐநங் களை யொரு உபத்ரவம் வாராதபடி ரக்ஷித்து, ஸுகப்ரத ராய், இப்படி ஸந்மார்க்கத்தில் சலியாமலிருந்து ஸர்வ லோக பூஜ்யரான தேவரீர், ஆச்ரித விஷயத்தி லிப்படி யருளிச்செய்தது ஒரு ஆச்சர்யமா? இந்த விபீஷணன் கபடத்தை விட்டு ருஜுவாயே சரணாகதி பண்ணினா னென்று எனக்கும் தோற்றுகிறது. ஏனென்றால், இவ னுடைய முக மலர்ச்சியாலும், கண்டத்வநி முதலியவைக ளாலும், இப்படி ஸர்வப்ரகாரங்களாலும் இவனுடைய மனத்தை யாராய்ந்தோம். ரகுகுலத்தி லவதரித்த ஸ்ரீ ராமா! ஆகையால், அத்யந்தம் புத்திமானான விபீஷணாழ

வான் சீக்கிரம் எங்களோடுகூட ஸமானனாக ஆகட்டும். எங்களுக்குத் தோழமையும் அடையட்டும்.''

இவ்வாறு ஸுக்கிரீவ மஹாராஜன் சொன்ன வார்த்தையைப் பெருமாள் கேட்டு அவன் அநுமதி பண்ணின படியே, திரிலோகாதிபதியான இந்திரன் பக்ஷிராஜனை கருத்மானோடு ஸமாகமத்தை யடைந்தாற்போல ஆகாசத்தில் நின்று மிறங்கிவந்த ஸ்ரீவிபீஷணாழ்வானோடு ஸமாகமத்தை யடைந்தான்.

சரணாகத வத்ஸலரான பெருமாள், ஸர்வ ஸங்கங்களையும் விட்டுத் தம்மிடத்தில் சரணம் புகுந்த விபீஷணனுக்குத் தானவதரித்த குலத்தில் பெரியோர்களனுஷ்டித்துப் பரம்பரா பிராப்தமான அபயப் பிரதானம் பண்ணினபின்பு, விபீஷணாழ்வான் ஸ்ரீராமன் பண்ணின உபகாரத்தை யறிந்தவனாய்த் தன்னுடன் ஸமஸுகதுக்காராய்ப் புறபட்டுவந்த நான்கு ராக்ஷஸர்களோடுங்கூட மிகவும் ஸந்துஷ்டனாய் ஆகாசத்தினின்றும் பூமியிலிறங்கி அப்பெருமானது சரணாரவிந்தங்களில் வந்து விழுந்தான்.

அவ்வாறு வானர ஸேனையின் மத்யத்திலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீராகவனைத் திருவடிதொழுத விபீஷணன், அப்போது அக்கோஷ்டியில் தர்மத்தோடு கூடினதாயும், யோக்யமானதாயும், இந்தக் காலத்தில் ஸந்தோஷ ஜநகமானதாயு மிருக்கிற வாக்கியத்தைச் சொல்லத் தொடங்கினான். ''நான் மஹா பாபியான இராவணனுக்குத் தம்பி; பாப பிரசுரனான அவன் என்னைத் தீரவும் திரஸ்காரம் பண்ணினான்; ஆகையால் நான் அகதிகனாய், ஸர்வர்க்கும் ரக்ஷகராயும், ஞான சக்தியாதிகளினால் பரிபூர்ணராயுமுள்ள தேவரீரைச் சரணமாக வடைந்தேன். நான் என்னுடைய ஜ்யேஷ்ட பிராதாவான இராவணன் ஆண்டு வரும் இலங்கையையும், அதைச் சேர்ந்த ராஜ பந்துக்

களையும், மற்று மங்குள்ள சம்பத்துக்களையும் நசையற விட்டுப் போந்தேன்; அற்பமான அவைகள் எனக்கு உபாதேயங்களாகமாட்டா; ஏனென்றால், இந்த ராஜ்ய ஸுகமும், அதன்மூலமான தனஸுகமும், அன்னபானுதி ஸ்ரக்சந்தனுதி ஸுகமும் இவையெல்லாம் தேவரீருடைய கடாக்ஷ லப்யமான தேவரீருடைய கைங்கர்ய ஸுகத்தில் ஏகதேசங்கள்.''

இவ்வாறு ஸ்ரீ விபீஷணுழ்வான் சொன்ன பிரார்த்தனு வாக்கியத்தைப் பெருமாள் கேட்டு, அவன் மனுேக்லேசங்கள் நீங்கும்படி நல்வார்த்தை சொல்லிப், பூர்ணமாகக் கடாக்ஷித்து, அக் கடாக்ஷத்தாலவனை யுருகும்படி பண்ணி யவனுடன் ஸம்பாஷித்துக் கொண்டிருந்து பின் வரும் பாசுரத்தைச் சொல்லி யருளினுன்.

“குகனெடு மைவ ராணு முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடு மறுவ ராணு மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லையா! நின்னெடு மெழுவ ராணும்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை.”

பி. ஆர். கிர்ஷ்ணமாசாரியர்.



கிறிஸ்து போன்ற ஒழுக்க முறை நூல்.

9-வது அதிகாரம்.

ஆறுதலின்மை.

ஈசுவரன் அனுக்கிரகம் இருக்கும்பொழுது, மனிதன் ஆறுதலை அலக்ஷியஞ் செய்தல் குற்றமன்று. ஆனால், மண்ணினின்றும், விண்ணினின்றும் எவ்வித ஆறுதலும் வேண்டாதபடி அவ்வளவு நேர்மைபற்றி வாழ்நாள் நடை பெறுதல் அதிக மேம்பாடு உற்றதாம். இறைவனிடமுள்ள பக்தியினால் இயற்கையான இருப்பிடம் விட்டு நீங்கின ஆன்மா தன் பிரகிருத நிலைமையைப் பொறுத்தல் உயர்வாம். [பூலோகம் மனிதனுடைய இயற்கையான இருப்பிடம் இல்லை. இறைவனிடமிருந்து வந்தான். அவரிடம் போகவேண்டுபவன் மனிதன்.] ஒன்றிலும் பற்று வையாமலும், பிரயோஜனத்தைக் கருதாமலும், தன் யோக்கியதையைப்பற்றி மெச்சாமலும் ஒழுகுதல் நலமாம்.

ஈசன் அருள் பெற்றவன் ஆனந்தமுள்ளவனையும் அன்புள்ளவனையும் ஒழுகுதல் ஒரு ஆச்சரியமா? இது எல்லாரும் பிரார்த்திக்கும் நேரம். அருள் என்ற குதிரை கட்டிய ரதத்தின்மீது, உல்லாஸமாய் அவன் சவாரி பண்ணுகிறான். சர்வ சக்தியுள்ள பரமகுருவாகிய பரமேசுவரனே தாங்கி அவரே வழி நடத்தும்போது அம் மஹிமை பெற்றவன் ஒரு சிரமமும் உணராமல் சுகமாயிருக்கிறான் என்பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

ஏதேனுமொன்றைப்பற்றி ஆறுதல் அடைய சந்தோஷிக்கிறோம். "நான்" என்ற கோசத்தை ஒழிக்க மனிதனுக்குக் கூட

வில்லை. [நான் என்ற கோசம் - அகங்காரம் அல்லது அகந்தை. "யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுல கம் புகும்"—குறள்]

பிராணத் தியாகியாகிய லாரன்ஸ் என்பவரும் [இற்றைக்கு 1700-வருஷங்களுக்கு முன்னர் வலரியன் என்ற ரோமாபுரி சக் கிரவர்த்தியின் ஆஞ்ஞையால் நெருப்பில் வெதப்புண்டு மரண மடைந்தார்.] அவருடைய உபதேசகரும் கடவுளின் பக்தியில் மேம்பாட்டை யடைந்தவ ராதலின், உலக சந்தோஷங்களை முற்ற வெறுத்தார்கள். அதனால் முன்னவர் தம்முடைய அத்யந்த பிரிய முள்ள உபதேசியாகிய ஸிக்ஸ்டஸ் என்பவரைத் தம்மினின்று பிரிய ஒப்பினர். சிருஷ்டிகர்த்தரின்மே லுள்ள அன்பினால் மனித சிநேகிதரை லாரன்ஸ் என்பவர் விட்டார். கடவுளுக்குப் பிரிய மானதை யுத்தேசித்து மனுஷ ஆறுதலை விட்டார். அவ்வண்ணமே கடவுளின் திர்ப்திக்காக உற்ற சிநேகிதரையும் விடக் கடவாய்! உனக்கு சுகிருதமான ஒருவர் உன்னைவிட்டுப் பிரிந்தால் மனம் நோகாது சகித்துக்கொள்வாய். நாம் எல்லாரும் ஒரு காலத்தில் பிரிவினையுற வேண்டியவரேயாம்.

தன்னை முற்றிலும் வசப்படுத்திக் கடவுளின்பால் மனத்தைச் செலுத்த அறியுமுன் பலமுறையும் பலகாலும் தன்னுள்ளே ஒரு வன் போர்புரிய வேண்டுவதாகும். தன்னை நம்புகிறவன் மனுஷ சுகத்தை நாடி நழுவுவான். கடவுளின் உண்மையானபக்தனும் நல்லாரை நாடி நடக்கிறவனும் ஆறுதல் வேண்டான். மாயா உலக ருசிகளைத் தேடான்; கடுமையான கருமத்தையும் தீவிர தப முறைகளையும், செய்ய விரும்புவான்.

2

இறைவனே உனக்கு ஆறுதல் அருளுங்காலத்தில், அதை அடைந்து நன்றிபாராட்டி அவரைப் போற்றுக. அவரே யருட் பெருக்கால் உனக்குத் தந்த பாக்கியமென எண்ணுக. உன் யோக் கியதையால் கிடைத்ததென நினையற்க. அதனால் இறுமாப்புக் கொள்ளற்க. அதனால் அதிக சந்தோஷம் கொள்ளற்க. அதனால் வீண் செருக்குச் செய்யற்க. அந்த அருட்பேற்றினால் நீ தாழ்மை யுடையவனாக இரு. முன்னைவிட அதிக கவன முள்ளவனாகவும் அதிக வணக்கமுள்ளவனாகவும் இருக்கக் கடவாய். ஏனென்றால்

ஒருகால், இந்த அருட்செல்வம் உன்னை விட்டு விலகி, உன்னைச் சோதிக்கும் சங்கடம் நேரிடினும் நேரும். அருட்பேறுன ஆறுதல் அகல, உடனே துக்கத்துக் குள்ளாகாதே. பண்புடனும் பொறுமையுடனும் ஈசன் அருளை யெதிர்பார்த்திரு. முன்னரை விட அதிக சுகத்தை ஈசுவரன் அளிப்பார். கடவுள் முறையறிந்தவருக்கு இது புதுமையன்று. அற்புதமுமன்று. ஞானிகள் தத்துவ தரிசிகள் சரிதங்களால், இது விளங்கும். ஒரு சுகத்திற்குப் பதிலாக வேறு சுகம் நேரும். ஆகையாற்றான் ஈசுவரன் அனுக்கிரகம் இருக்குமளவில் அடியில் வருமாறு ஒருவர் சொல்லுகின்றார். "நான் செல்வத்திற் செழித்திருக்குங் காலத்தில் ஒருவரும் என்னை யசைக்கமுடியாது." அவர் அருள் விலகினபொழுது அன்னவரே தம் அனுபவத்தை இவ்வண்ணம் சொல்லுகிறார். "இறைவா நீர் பராமுகமாகத் திரும்பின நிமிஷமே நான் துன்பத்துக் குள்ளாயினேன்." அவ்விதமே, அவருக்குத் துயரம் வந்திடவே மனம் தளர்ந்து மயங்காமல் கடவுளைப் போற்றி மறுபடி பிரார்த்திக்கின்றார். — "ஈசா, உம்மை நோக்கியே நான் வாய் திறப்பேன். உம்மை நோக்கியே யென் பிரார்த்தனை செய்வேன். உம்மை விட வேறு புகலிடம் எனக்கு இல்லை." இப்படியே யவர் ஸ்தோத்திரம் செய்ய ஈசன் அருள் திரும்பப் பெற்றாராயினர். கடவுள் தன் பிரார்த்தனைக்கு இறங்கி அருளினர் என அடியில் வரும் விதம் உற்சாகத்துடன் அவர் வசனிக்கின்றார்.—"இதோ, என் ரக்ஷகர், என் முறையிடுதலைக் கேட்டு, என்மேல் இரங்கி எனக்குத் துணையாகி விட்டார்—(எவ்விதம் என்றாலோ கேளீர்) என் அழுகையை யானந்தமாக்கி, என்னைச் சந்தோஷங்களால் நிரப்பிச் செய்வித் திருக்கின்றார்."

முதிர்ந்த ஞானிகளுக்கே இந்தச் சம்பவங்கள் நேரில் மெல்லியராகிய நாம் பயப்பட வேண்டாம்-மனம் தளர வேண்டாம் - ஒருகால், கொதிப்பு இருந்தால் மற்றொருகால் குளிர் சம்பவிக்கும். ஈசன் செயலால் ஆன்மாவுக்கு உயர்கிறதும் தாழ்கிறதும் இயற்கையாம். தேவ அருள் பெற்ற ஜோப் சொல்லுகிறதாவது:— இறைவா, அருளினல் ஒருவனுக்கு அனுக்கிரகம் செய்கின்றீர். திடீரென அவனையே இடுக்கண்ணினுற் சோதிக்கின்றீர். அப்படியானல் எதைத்தான் அடைக்கலமாகக் கொள்ளுகிறது? எதைத்

தான் நம்புகிறது? இறைவன் அருளே யல்லாமல் வேறு கதியில்லை. ஏனென்றால்,— ஈசன் கடாக்ஷ மின்றேல் நல்லார் உடனிருந்தென்ன? அன்புள்ள சகோதரர் இருந்தென்ன? உண்மையான நண்பர் இருந்தென்ன? இனிய கீதம் என் செய்யும்? இவையெல்லாம் ருசிக்காவாம். வறுமையில் மூழ்கிடுவேன். அக்காலத்தில் எல்லாம் ஈசன் செயல் எனச் சிந்தித்துப் பொறுமைபாராட்டுதலே உற்ற விருதம். அதுவே நோய் தீர்க்கும் மருந்து.

ஒரு காலத்தில் அல்லது மற்றொரு காலத்தில் எவ்வளவு பக்திமானாகிலும், எவ்வளவு ஞானவானாகிலும் ஈசன் உதவி குறைந்து துன்பம் அடைவான். இது முற்காலத்திலும் சரிதான். இக்காலத்திலும் சரிதான். எவ்வளவு அறிவுடையரேனும் எவ்வளவு அன்புடையரேனும் சோதனையான துயரத்துக் குட்படாதவர் ஒருவருமில்லை.

அவ்வண்ணம் சோதனையான துன்பத்தினால் வருந்தாமல் தத்துவஞானம் பெற ஒருவரும் அருகர் ஆகார். அருள் வரும் முன்னே சோதனை திண்ணமாக வரும். சோதனையால் பரிசுத்தரானவர்க்குத் தேவ அனுக்கிரகம் வந்திடும். "பொறுமையுடன் தம்மை வென்றவருக்கு நான் அமிருதத்துவத்தை அளிப்பேன் என்றது தேவ வாக்கு.

ஆபத்தைச் சகிக்க, தேவன் ஆறுதல் கொடுப்பார். மனச் செருக்குத் தணியவே சோதனை நேருவதாகும். ஆசுர பாவம் எங்கே என்று காத்திருக்கிறது. மனுஷ சுபாவம் அற்றுப்போகவில்லையே. அதனால் போருக்கு சந்நத்தனாக விரு. முன்னும் பின்னும் தூக்கமில்லாமல் உன்னைத் தம் வசமாக்க உன் பகைவர்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

10-வது அதிகாரம்.

ஈசன் அருளுக்கு நன்றிபாராட்டுதல்.

உழைக்கப் பிறந்திருக்கச் சாந்தத்தை என் நாடுவான்? பொறுமை பாராட்டுமின். சுகத்தை நாடன்மின். துன்பத்தைச் சகிமின். சந்தோஷத்தைத் தேடன்மின்.

கிடைக்கப் பெறுமாயின் உலகத்தாரில் யார்தான் மேலான சுகத்தையும் ஆத்ம சந்தோஷத்தையும் விரும்பார்? ஏனென்றால்

சரீர சுகத்தையும் விஷய சந்தோஷங்களையும் பார்க்கில் ஆத்ம சுகம் அதிக மேன்மையுள்ளது அல்லவா? உலக சுகங்கள் அற்ப மானவைகள் அல்லவா? வீணானவைகள் அல்லவா? ஈசன் அருளால் நற்கருமங்களின் பலனாகத் தூய மனத்தினர்களுக்கு ஆத்ம சந்தோஷம் பெருகுவதாகும். ஆனால் இச் சந்தோஷம் எப்போதும், வேண்டுங்கால மெல்லாம், மனிதனுக்குக் கிடைக்கத் தக்கதன்று. ஏனென்றால் மாயா உலக மயக்கம் அவனை முற்றும் விட்டதன்றாம். தான் என்ற அகந்தையும், தன்னால் எல்லாம் சாதிக்கக் கூடுமென்ற செருக்கும் ஈசுவர தர்சன பிராப்திக்குத் தடைகளாம். மனிதனுக்கு, ஈசன், ஆறுதலை யன்புடனே யருளுகின்றார். ஆனால் அவன் அதை உணருகின்றானில்லை. கடவுளிடமிருந்து வந்த பாக்கியமென்று எண்ணி நன்றி பாராட்டுகிறானில்லை. அதனால் அருள் வெள்ளத்தின் தொடர்ந்த வருகை தடைப்படுகிறது. ரக்ஷகரை நாம் அன்பு பாராட்டி அவருக்கு வந்தனங்கள் செலுத்தினோமில்லை. அன்பு செய்கின்றாருக்கே ஈசன் அருள் புரிவார். தாழ்மை யுள்ளாருக்கு அருள் கிடைக்கும்; இறுமாப்புள்ளாருக்குக் கிடைக்காது. அதனால்,—என் பாபத்திற்குப் படும் அனுதாபத்தைக் கொடுக்கும் ஆறுதல் நான் வேண்டேன். எனக்கு இறுமாப்பு உண்டாக்கும் சிஷ்டை வேண்டேன். உயர்வானதெல்லாம் புண்ணியமன்று; ருசியானதெல்லாம் நல்லவையல்ல; விரும்பியவை யெல்லாம் தூயவையல்ல; இறைவனுக்குப் பிரியமானதெல்லாம் இனியவை யல்ல, பண்பும், பணிவும், அச்சமும் அமையத் தன்னையே தியாகஞ்செய்யச் சித்தனாய் இருக்கும்படி இறைவன் அருள் அடைய வேண்டுவேன்.

2

அருளால் அறிவு பெற்றும் அருள் நீங்கிச் சோதனையான துன்பம் தொடரவும் மெய்யுணர்வு அடைந்தவன் தன்னுடைய யோக்கியதையைப்பற்றித் தன்னை மெச்சிக்கொள்ளத்துணியான். மேலும் அற்பனென்றும் சேவலன் என்றும் தானே ஒப்புக்கொள்ளுவான். இறைவனால் ஏற்பட்டதை அவரால் என்றும், உன்னால் ஏற்பட்டதை உன்னாலென்றும் ஒப்புக்கொள்க; அவரால் ஏற்பட்ட நன்மைகளுக்கு நன்றி பாராட்டுக. உன்னால் ஏற்பட்ட குற்றத்துக்கு உன்னையே குறைசொல்லுக. உனக்குச் சம்பவிக்கும் தண்

டனே உன் குற்றத்துக்கு வந்தது என உணர்க.

எப்போதும் கீழான நிலைமையை நாடு. மேலான பதவி அவர் அருள்வார். கீழான நிலைமையிருந்தால் மேலான பதவிவந்து சேரும். ஞானிகள் தங்கள் நோக்கில் தங்களைக் கீழாயினோர் எனக் கருதுவார். கடவுள் நோக்கில் மேலானவராகத் தோன்றிடுவார். எவ்வளவுக்குத் தாழ்மையோ அவ்வளவுக்கு மேன்மையுண்டு. சத்தியமும் திவ்ய தேஜஸும் பொருந்தியவரான ஞானிகள் வீண்புகழை விரும்பினரில்லை. இறைவனிடம் மனத்தை நிலைநிறுத்தி ஸ்திர பிரஞ்ஞை யுடையராதலால் கருவம் கொண்டார்களில்லை. ஈசனிடமிருந்து கிடைத்த பாக்கியத்தை அவருக்கே அர்ப்பணஞ் செய்வார். பிறரிடமிருந்து புகழுங் கீர்த்தியும் வேண்டார். கடவுளிடமிருந்து வரும் அருளையே திரும்பினராய்த் தாம் அவரைப் போற்றியும் மற்றைய ஞானிகள் அவரைப் போற்றும்படி செய்வித்தும் இதே கவனமாயிருப் பாராயினர். அற்பக் கொடைகளுக்கும் நன்றிபாராட்டிடின் பெரிய கொடைகள் பெற அருகனாவாய். அற்பத்தைப் பெரிதாக எண்ணு: உபயோகமற்றதைப் பயனுடையதாக நினை ["தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்—கொள்வர் பயன்றெரிவார்"—குறள்.] கொடையாளியின் மகிமையை யெண்ணின் கொடையற்பமென்றும் விலைமதிப்புள்ளதென்றும் நினைக்கமாட்டாய். கடவுளிடமிருந்து வரும் கொடை அற்பமாக இருக்கக்கூடியதன்று. அவர் உனக்குத் துயரமும் தண்டனையும் நேரும்படி செய்வாராயினும் அவை கடைமுறையில் இனியவை யாகவே யிருத்தல் வேண்டும். அவரால் நமக்குக் கிடைக்கின்றவைகள் நம்முடைய ஆன்ம க்ஷேமத்தின் பொருட்டேயாம். ஈசன் அருள் தன்னிடம் நிலைத்திருக்க வேண்டுவோன் அதுவருங்காலத்தில் நன்றியுள்ளவனாக இருக்கவேண்டும். அது போகுங்காலத்தில் பொறுமை பற்றியவனாய், இனி அதன் வரவை யெதிர்பார்க்க வேண்டும். வந்தால் ஒருகால் இழப்போமே யென்ற பயத்துடனே கவனமாயும் தாழ்ந்த சிந்தையுடையவனாயும் இருக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.

இந்தியாவும் நெசவுத் தொழிலும்.

நமது மாஜி கவர்னர் ஜெனரல் கனம் பொருந்திய கர்ஜன் பிரபு அவர்கள், இந்தியாவைவிட்டுப் புறப்பட்டுத் தன் தேசத்திற்குப் போகு முன்னர், பம்பாய் நகரத்துப் பைகுல்லா ஆங்கிலேய சபையோர் அவருக் களித்த விருந்தின் இறுதியில் அவர் ஸௌக்கியத்தையும் மங்கள வாழ்க்கையையும் சுக யாத்திரையையும் ஸபையோர் கோரிய பின்னர் அதற்குப் பிரத்யுபசாரமாக அவர் செய்த பிரஸங்கத்தில், தனது ஆளுகையின் பிரதாபத்தைச் சொல்லுமளவில் இந்தியாவின் "வாஸ்தவ ஜனங்களாகிய" கிருஷிக விருத்தியை அனுஸரித்துவரும் சுமார் 23-கோடி ஜனங்களின் ஏழைத் தனத்தையும் அவர்கள் படும் கஷ்டத்தையும்பற்றித்தாம் மிகவும் மனம் நொந்ததாகவும் அவர்களுடைய ஸ்திதியைச் சுகப்படுத்துவதே ஒவ்வொரு கவர்னர் ஜெனரலுடைய முக்கிய உத்தேசமாகயிருக்கவேண்டுமென்றும் தமதபிப்பிராயத்தை வெளியிட்டார். கவர்ண்மெண்டார் அப்போதைக்கப்போது பிரஸித்தப்படுத்தும் வேறு கணக்குகளின்படி இந்தியாவில் பயிரிடுவோரும் அவரைச்சார்ந்தவரும் ஏறக்குறைய $18\frac{1}{2}$க்கோடி யெனக்கணக்கிடப்பட்டிரு

க்கிறது. இந்தியாவின் ஜனத்தொகையோ 1901௵த்திட் ஜனகணிதப்படி 29கோடியே 70லக்ஷம். மேலே சொல்லிய $18\frac{1}{2}$கோடி கிருஷிகர் வருஷாரம்பம் முதற்கொண்டு வருஷாந்தம் வரையில் பலவிதமாய்க் கஷ்டப்படுகிறார்களென்றால் அந்த விருத்தியை யனுஸரிக்காத பாக்கி சுமார் 10 கோடிஜனங்களும் சுகஜீவனம் செய்து வருகிறார்களென ஏற்படாது. மேலே பிரஸ்தாபித்த ஜன கணித விவரமடங்கிய ரிபோர்ட்டை நாம் பரிசீலனை செய்தால் இது விஷயம் நமக்கு நன்றாய்ப்புலப்படும். இப்பின் வகுப்பில் சர்க்கார் உத்தியோகத்திலும், மற்றுமுள்ள கௌரவ உத்தியோகங்களிலும், வியாபாரத்திலும் அமர்ந்து கூடியமட்டில் ஸௌகமாய் ஜீவனம் செய்வோர் சிலரே. இதில் பெரும்பான்மையோர் நெசவு, சிற்பம், முதலிய கைத்தொழில்களிலும் வண்ணான், அம்பட்டன், முதலிய வகுப்பிலும், சில்லரைத்தொழில்களிலும் கூலிவேலைசெய்து பிழைத்தல் பிச்சைபுகுந்து பிழைத்தல் முதலியஹீனவிருத்திகளிலும் அமர்ந்துள்ளவராவர். மேலே நாம் எடுத்துக் கூறிய தொழில்கள் பலவற்றின் தாரதம்மியத்தைக் கவனித்துப் பார்க்குங்கால் அவைகளெல்லாவற்றிலும் முக்கியமானது குடிகளின் உதர போஷணைக்கு வேண்டிய தானிய முதலியவற்றைப் பயிர் செய்யும் முறைமையாகிய விவசாயமேயாகும். அதற்குப் பிறகுதான் மற்ற எவ்வகைத் தொழிலும் பிரதானமாகும். ஆகவே நமது தேசத்து ஜனங்களிற் பெரும்பான்மையோர் அத்தொழிலைக் கைக்கொண்டிருத்தல் நியாயமே. விவசாயத்தின் பெருமையைப்பற்றி நாம் இங்கு எழுதப் புகவில்லை. அதொழிந்த மற்ற கைத்தொழில்களில் விவசாயத்தை அடுத்து முக்கியமாகும் நெசவுத்தொழிலைப்பற்றி நமது தேசம் சம்பந்தப்பட்டவளவில் நாம் இங்கு பிரஸ்தாபிப்போம்.

இங்கிலாந்து போன்ற சிலதேசங்கள் தன் குடிகளுக்கு உணவுக்கென்ற பதார்த்த விஷயத்தில் அயல் நாடுகளைச்சார்ந்திருப்பதை நாம் அறிவோம். அத்தேசங்கள் தங்கள் கைத்தொழிற்பொருள்களை அதிகமாய் விளைவித்து அயல் நாடுகளில் விற்று அதற்குப்பதிலாகக் கோதுமை முதலிய உணவு பதார்த்தங்களையும் கைத்தொழில்களுக்கு வேண்டிய பருத்தி, பட்டு, கம்பளம், தோல், போன்ற பதார்த்தங்களையும் வாங்குவதும் உலகமுழுவதும் பரவி வெவ்வேறு சீதோஷ்ண ஸ்திதிகளைப் பெற்று அதனால் எண்ணிறந்த விளைபொருள்களோடு கூடிய தமது விசாலமான இராஜ்யத்தின் பற்பல விடங்களிலும் மேற்கூறிய விளைபொருள்களை வேண்டுமளவும் உண்டாக்கிக்கொள்ளவும், விருத்திபண்ணிக்கொள்ளவும் வேண்டிய ஸௌகரியமுள்ளவைகளாயிருக்கின்றன. நமது தேசமோ அத்தகையதானதல்ல. வியவாசயப் பொருள்களை அதிகமாய் உண்டாக்கி அவைகளை இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கனுப்பி அத்தேசங்களின் கைத்தொழிற் பொருள்களை அதிகமாய் வாங்கும்படியான நிலைமையில் இருக்கிறது. இதற்கு ருஜுவாக நாம் காலையில் படுக்கையை விட்டெழுந்திருக்கும் முதல் ராத்திரி நித்திரை செய்யப் போமளவும் உபயோகிக்கும் பதார்த்தங்களைப்பற்றி சற்று ஆழ்ந்து கவனித்துப்பார்த்தால் நாம் மேலே சொல்லியது விசதமாகும். நல்லது, நமது கைத்தொழில்கள் இவ்வளவு ஹீன ஸ்திதியிலிருப்பானேன்? அவைகளை இனியாவது அபிவிருத்தி செய்யக்கூடாதா? நமது தேசம் சில நூற்றூண்டுகளுக்குமுன் எந்நிலையிலிருந்தது? நம்மை அரசாளும் ஜாதியாரும் இன்னும் அனேக நாட்டாரும் நாகரீக விஷயத்தில் மிகத்தாழ்ந்த நிலைமையிலிருக்கையில் நமது தேசம் உலகுக்கெல்லாம் ஒரு மகுடம்போல் பிரகாசிக்க

வில்லையா? அந்தோ! பரிதாபம், நாம் கைத்தொழில் விஷயத்தில் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டோம்? நமது பழய உன்னத தசைக்கு நாம் மீண்டும் எழலாகாதா? சற்று யோஜித்துப் பார்த்தால் இந்தக் கேவலஸ்திதிக்கெல்லாம் நாமே காரணமென்ற விஷயம் தெற்றெனப்புலப்படும்.

நாம் மேலே சொல்லியவாறு ஒருதேசத்தின் க்ஷேமத்திற்கு முதல்முதல் முக்கியமானது வியவசாயமே. அதைக்கொண்டு எவ்விதத்திலும் வயிற்றுப் பாட்டுக்கு ஏற்பட்டுவிட்டால் வேறொன்றும் வேண்டாமென்று நாகரீகம் கொழுத்ததேசத்தினர் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள நிகிரோவர் போன்ற முரட்டு ஜாதியாரைப்போல் பிறந்த மேனிக்கு இருத்தல் அஸாத்தியமாகும். நாகரீமதிகரிக்க அதிகரிக்க நமக்கு மென்மேலும் புதிய தேவைகள் ஜனிக்கின்றன. உணவுக்குப் பின் உடை தறித்தல் அவசியமானது என்பதை நாம் யாவரும் ஒப்புக்கொள்வோம். உடை விஷயத்திலும் ஒரே தேசத்தில் பற்பல வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. புருஷர், பெண்டிர், பணக்காரர், ஏழைகள், ஜாதி மதவித்தியாசங்கள் இவைகளுக்குத்தக்க வண்ணம் அவர்கள் உடுத்தும் உடைகளும் வித்தியாசமடைகின்றன. பட்டாடைகள் பஞ்சாடைகள், கம்பளங்கள், நார்மடிகள் என்ற நான்கு வகுப்புக்குள் வஸ்திரங்களைப் பிரிக்கலாம். இவ் வகுப்புகளில் ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த மாதிரிகள் ஏற்பட்டுள. மனிதனுக்கு வஸ்திரம்தானே தேவை, இவை கணக்கில்லாத வேறுபாட்டுடன் இருப்பானேன் என்ற கேழ்வைக்கு பதிலுரைப்போம். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்னும் மஹான் ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நாகரீகத்தில் தாழ்ந்திருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அலங்காரப் பிரியராயும்

அவசியமாய் வேண்டுவது இன்னதென்று அறியாதவர் களாயுமிருப்பார்களென்று தன் அருமையான புத்தகங்களொன்றிற் கூறியிருக்கிறார். இதற்கு நிதர்சனமாக ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் மிகவும் புராண ஸதிதியில் இருந்து வரும் காட்டுஜாதியாரின் ஸ்திரீகள் தாங்கள் நிர்வாணமாயிருப்பது மானக்குறைவு என்று கொஞ்சங்கூட சங்கைப்படாது தங்கள் முகத்திலும் மார்பிலும் ஓர் விதச் சாயத்தைப் பூசிக்கொண்டு கூத்தாடுவது அழகென்றெண்ணி அப்படி அலங்கரித்துக் கொள்ளுதலே அவசியமென்றெண்ணுவதும் அவர்கள் புருஷர்கள் தங்கள் சத்துருக்களைக் கொன்று அவரது மண்டையோடுகளையும் சிகைத்தோலையும் மாலையாய் அணிவதும் ஆகிய இவைபோன்ற பல விஷயங்களை எடுத்துக் கூறலாம். அலங்காரப் பிரியத்தைப்பற்றி மேற்சொல்லிய விஷயம் நாகரீகமதிகரித்த பின்னும் வாஸ்தவமென்பது எமது துணிபு. ஏனெனில் நம்மவருள் அந்தஸ்து உயர உயர, பணத்துக்குத் தக்கவிதம் ஆடைகளின் ஆடம்பரத்தைப்பற்றியும் அவைகளை உபயோகிக்கும் ரீதிகளைப்பற்றியும் எவ்வளவோ அவசியமில்லாத பேதங்களேற்படுகின்றன. இவ்விதப் பேதங்களுக்கெல்லாம் காரணமுரைத்தல் எளிதல்லவாயினும் உடை உடுத்தல் எத்துணையும் அவசியமாக முடிகின்றது. அவ்வுடை ஸம்பந்தமான நெசவுத் தொழில் வியவாசயத்தை யடுத்து மேலே சொன்ன காரணத்தால் முக்கியமாகின்றது. நமது முன்னோர்கள் ஆடையணிவதின் அவசியத்தை எப்படி யுணர்ந்தார்களெனின், அவரவர் குடியேறிய நாட்டின் சீதோஷ்ணஸ்திதிக்குத்தக்க வண்ணம் மழை, காற்று, வெயில், குளிர் முதலியவற்றினின்று தங்களைப் பாது காத்துக்கொள்ள அவர்கள் வழிதேடியதின் பரிபாகமே பலவித ஆடை

களுக்கும் காரணமாகுமெனத் தோன்றுகின்றது. இவ்வருங் கைத்தொழிலை எச்சாதியார் முதல்முதல் கைப்பற்றினர்களெனும் கேழ்விக்குப் பதிலுரைத்தல் மிகவும் அஸாத்தியமாகும்.

ஏறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னும் நமது தேசத்தில் இக்கைத்தொழில் உன்னத தசையில் வழக்கத்திலிருந்தது என்பது நமது தேச கிரந்தங்களினின்று வெளியாகும். இதேமாதிரி பூர்வீக எகிப்தியரும் சீனர்களும் இத்தொழிலை வெகுநாளாய்ப் பயின்று வந்தார்களெனவுமேற்படுகிறது. இவ்வுலகத்தில் முதல் வஸ்திரம் எந்த ஜாதியாரால் நெய்யப்பட்டது என்பது நமக்குத் தெரியவேண்டியது அவ்வளவு அவசியமல்ல. ஏனெனில் பூர்வ காலத்தில் பலஜாதியார்கள் நாகரீகம் பெற்றவராயிருந்தார்ளென்று நாம் அனுமானிப்பதைத் தவிர்த்து யார் முதலில் நாகரீகம் பெற்றார்களென்பதைக் குறித்து தகுந்த அத்தாக்ஷிகள் ஒன்றுமில்லை. ஆனால் புராதன மனிதனுக்கு வஸ்திரம் நெய்யக் கற்றுக்கொடுத்தது ஒருவாறு நம்மைச் சுற்றிலுமுள்ள பிரபஞ்சமேயாகும். அதெப்படியெனில், அவனைச்சுற்றிலுமுள்ள விலங்கினமும் பக்ஷிகளும் பிறக்கும்போதே மழை காற்று முதலியவைகளினின்று தங்களை ஸம்ரக்ஷித்துக் கொள்வதற்கேற்ற மயிரடர்ந்த சருமங்களோடு பிறப்பதையும், அதேமாதிரி விருக்ஷவர்க்கமும் இலைபடர்ந்த கிளைகளால் தங்கள் உயிர்நிலையாகிய வேரை மறைப்பதையும் அதனதன் அமைப்புக்குத் தக்கவண்ணம் கூடியமட்டும் அழுத்தமான பட்டைகளால் தங்கள் சரீரத்தை நிகர்த்த உள்மரத்தைக் கவசமிட்டுக்காத்து வருவதையும் அவன் கண்ணுற்ற. அதுபோல் தானும் தன்னை சூரியன், மழை இவைகளின் கொடுமையினின்று விடுவித்துக்கொள்ளத்தக்க வழிதேடியிருந்திருக்கவேண்டும். முதலில் விருக்ஷவர்க்கத்தின் பட்டைகளை

வஸ்திரமாகத் தறித்தும் ஆடு மாடு முதலிய மிருகங்களின் பதனிடாத தோலை உடுத்தியுமிருக்கவேண்டும். பிறகு நாளாவட்டத்தில் தன் முரட்டாடைகளிடம் அதிருப்தி கொண்டவனாய் தானே கூடியமட்டும் மிருதுவான வஸ்திரம் தயார்செய்ய யத்தனித்திருக்கவேண்டும். இந்த விதம் யத்தனம்செய்த அவனுக்கு இயல்பாகவே பன்னாடை முதலியவற்றின் அமைப்பை கவனித்தபிறகாவது புல், கோரை, நாணல் முதலியவைகளால் குறுக்கேயும் நெடுக்கேயும் வரிசைவரிசையாய் அடுக்கப்பெற்ற பாய் போன்ற வஸ்திரம் நெய்யத்தெரிவதியல்பாகும். மேலே நாம் கூறியவையெல்லாம் யுக்தி வாதமல்லவென்பதை நாம் நன்றாய் நிரூபிக்கலாம். அஃதெவ்விதமெனில் நமது பூர்வகால கிரந்தங்களில் வல்கலம் என்றும் மர உரியை வஸ்திரமாக உபயோகப்படுத்திய வழக்கத்தைப்பற்றியும், யானை, புலி முதலியவைகளின் சருமங்களை உடுத்திய வழக்கத்தைப்பற்றியும், தர்ப்பாஸனம், தர்ப்பதல்பம் முதலியவைகளின் உபயோகத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருப்பதும் தவிர இப்பொழுது நாகரீகம்பெற்ற சில ஜாதியார் சில நூற்றாண்டுகளுக்குமுன் மேற்சொல்லியவாறு உடை உடுத்தி நடமாடினரென்று அந்நாள் சரித்திரம் கூறுகின்றது. இதுவுமன்றி நமது காலத்திலும் சில காட்டு ஜாதியார் வாஸஞ்செய்யுமிடத்தைப்போய்ப் பார்த்துவந்த யாத்திரிகள் அவரது நடையுடைபாவனைகளை வர்ணிப்பதிலிருந்தும் மேற்சொன்னது ஸம்பாவிதமென்றே நாம் அறியலாம். இதன்பிறகு காலக்கிரமத்தில் ஆட்டு ரோமம், நார், பருத்தி சில காட்டுப்பூச்சிக்கூடுகளினின்று தயார்செய்யப்பட்ட பலவிதப் பட்டு முதலியவைகளினின்று இழை இழைக்கக்கற்றும் அவ்விழைகளைக் கொண்டு மிகவும் பிராசீனமான வழிகளையனுஸரித்து வஸ்திரம் நெய்யக் கற்றிருக்கவேண்டும். இதற்கப்பால்

அந்த வஸ்திரங்களுக்குக் காட்டுக்கொடிசெடிகளினின்று தயார் செய்யப்பட்ட சாயங்களை ஏற்றி சாய வஸ்திரங்களாகவும் ஸாதாரண இழைகளையும் சாயமேற்றிய இழைகளையும் விதம் விதமாகக் கலந்து நெய்து பலவர்ணமுள்ள வஸ்திரங்களைத் தயார்செய்யக் கற்றிருக்கவேண்டும். மேற்சொல்லிய விஷயங்கள் சரிவர நடந்தேறிவர பல நூற்றாண்டுகள் சென்றிருக்கும். இவ்விதம் நெசவுத்தொழில் தேர்ச்சியடைவதற்குள் நாகரீகமும் மிகுந்தவளவு அதிகரித்துக் கடைசியில் அத்தொழில் விருத்தியடைய ஆரம்பித்து அதற்குவேண்டிய ஸௌகரியங்களைப்பெற்ற சில தேசத்தார் ஒருவரைவிட மற்றொருவர் நேர்த்தியான வஸ்திரங்களை நெய்வதில் மிகுந்து இதர தேசங்களுக்கு வஸ்திரங்களை வியாபாரத்தின்பொருட்டு ஏற்றுமதிசெய்து பணங்கொழுக்க வழிதேடியிருந்திருக்கவேண்டும். அவ்வாறு கைதேர்ந்த தேசங்களுக்கெல்லாம் முதலாக நமது இந்தியா சற்றேறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்வரையில் நின்றது.

முன்னாளில் இந்தியாவில் நெசவுத்தொழில் எவ்வளவுமட்டும் விருத்தியடைந்திருந்தது என்று கவனித்துப் பார்ப்போம். நாம் மேலே சொல்லியவாறு நமது தேசத்தில் பஞ்சாடைகளும் பட்டுவஸ்திரங்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே வெகு திறமையுடன் நெய்யப்பட்டுவந்தன வென்பதற்கு ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் கூறியிருப்பதைத் தவிரவும் வேறு ருஜுக்களிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

பெண்மணி.

ஸ்நாநதினம் முக்கியமானதால் அதில் நடந்து வரும் வழக்கத்தைக் கொஞ்சம் எடுத்துக்காட்டுகிறோம். பல்லக்கிலிருந்து பெண்மணி இறங்கினவுடனே அவள் தாயாரும் தகப்பனாரும் வாசலிலிருந்து பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஒரு சுமங்கலி மஞ்சள்நீர் சுற்றிப் பாடினாள். உடனே பெண்மணியை உள்ளே அழைத்துப்போனார்கள். சில சுமங்கலிகள் வீதிப்புறம் குதித்துப்பாடினார்கள். மற்றச் சுமங்கலிகளும் பெண்களும் உட்புறம் முற்றத்தில் கூடினார்கள். கூடத்தில் பெண்மணியை வெள்ளிக்குமிழ் பதித்த மணப்பலகையில் உட்காருவித்தார்கள். புக்ககத்தார் வாங்கிவந்திருந்த செவப்புப் புடவையை யப்போ பெண்மணி தரித்திருந்தாள். வேடிக்கைபார்க்க வந்திருந்த சூத்திரப் பெண்பிள்ளைகள் பெண்கள் எல்லோரும் வெளியே போய்விட்டார்கள்.

ஒரு பெரிய வாழையிலையில் மடைப்பள்ளியிலிருந்து கொண்டு வந்து அன்னம் கறியமுது முதலிய போஜன வர்க்கங்கள் நிரப்பப் பட்டன. அந்த வாழையிலையின் மூலைகளில், எழுத்தாணி, ஓலை சங்கு, கண்ணாடி, கழக்கோடி, அம்மானை இவைகள் வைக்கப்பட்டன. அந்த இலையின்பேரில் வேறு ஒரு வாழையிலையைப் போட்டு மூடி வைத்திருந்தது. முற்றத்திலும் சுமங்கலிகளும் பெண்களும் குதித்துப் பாடினார்கள். பிறகு எல்லோரும் பெண்

மணியின் இட்டவந்து அவளைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னார்கள். ஒரு சுமங்கலி வாழையிலையைத் திறந்து அதிலிருந்து எழுத்தாணியையும் ஓலையையும் கையில் எடுத்துக்கொண்டு ஆண் குழந்தை ஆண் குழந்தை என்று சொல்லிவிட்டு அம்மானை பாலடை முதலியவைகளையும் இலையிலிருந்து எடுத்துவிட்டாள். கிரமமாக மேலே இருந்த இலையை எடுத்துவிட்டுப் பெண்மணி கண் மூடிக்கொண்டிருக்கும்போதே கீழிலையின் ஓரங்களி லிருந்தவைகளில் ஆண் அல்லது பெண்குழந்தை விரும்பும் பொருளை எடுக்கும் படி செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் பெண்மணிக்கு முதல் முதல் ஜனிக்கும் ஸந்ததி ஆண் அல்லது பெண் என்பதை அறியலாம். இது ஒரு சோதிடசம்பந்தமான ஆரூடம் போன்றது. ஒரு சுமங்கலியின் மனது இலையைத் திறந்தவுடன் எந்தப் பொருளை நாடுகிறதோ அதைக்கொண்டு ஆண் பெண் என்பதை நிச்சயிக்கிறார்கள். இது புராதன வழக்கம். விவாகத்தின் முக்கிய உத்தேசம் பிள்ளைப்பேருகையால் அதைப்பற்றி முன்னுடி அறியவே இப்படிச் செய்கிறார்கள்.

பிறகு புக்ககத்தார் சமைத்த அப்பங்களைப்பெண்மணியை நிற்கவைத்து மடிநிரையக்கட்டினார்கள். பிறகு சுமங்கலிகள் ஐந்து பேர்கள் மஞ்சள்நீர் சுற்றி வழக்கம்போல் ஏற்றி இறக்கினார்கள். பிறகு பெண்மணி அங்கிருந்த சுமங்கலிகளை ஸேவித்தாள். அவர்கள் அச்சுதம் தெளித்தார்கள். வழக்கமாய் ஒற்றைப்பட்ட சுமங்கலிகள்தான் தெளிப்பது. அதாவது ஐந்து எழு ஒன்பது பேர்களேயாம். அச்சுதன் என்பதை அச்சுதம் என்று பிழையாகப் பெண்கள் வழங்கிவருகின்றார்கள். "அச்சுதன்" என்றால் அந்தப் பிள்ளை என்பது பொருள். அதாவது முதலில் வாழையிலையைத் திறந்து ஓர் சுமங்கலி சொன்ன ஆண்பிள்ளை என்பதுதான் பொருள். இங்கே அச்சுதன் என்பது திருமாலின் பெயரல்ல. அச்சுதன் தெளித்தலாவது சுமங்கலிகளின் ஆசீர்வாதம். அதை வாயால் மட்டும் சொல்லாது பால், அக்ஷதை, புஷ்பம், சந்தனம் இவைகளை ஒரு குளபாத்திரத்தில் சேர்த்து அதைக்கையில் எடுத்துக்கொண்டு ருதுவானபெண் வந்தனம் பண்ணுகையில் அவள் முதுகைத்தொட்டுத்தெளிப்பதாம். இது ஓர்வகை ஆசீர்வாதம். இவைகளெல்லாம் பெண்டுகள் நடத்தும் வழக்கம். ருதுவானதுமுதல்

ஸ்நான தினபூர்த்திவரையில் பெண்டுகள்நடத்தும்கொண்டாட்டம் விசித்திரமானதே. புருஷர்கள் சமீபத்திலிருக்கிறார்களென்பதைச் சற்றும் எண்ணாமல் இழிவானவார்த்தைகளைச்சொல்லி மாப்பிளையையும் புருஷர்களையும் கேலிபண்ணுவதுண்டு.

பிறகு பெண்மணியும் தோழிகளும் கூடத்தில் சாப்பிட உட்கார்ந்தார்கள். முன் சொன்ன வாழையிலையிலிருந்த போஜனங்களைப் பெண்மணியும் தோழிகளும் புசித்தார்கள். மடைப்பள்ளியிலிருந்தும் தின்பண்டங்கள் போதும் போதாததற்குக் கொண்டுவந்து பரிமாறினார்கள். இப்படியாகப் பெண்கள் கொண்டாட்டம் ஒருவாறு நிறைவேறியது. தோழிப்பெண்களுக்கும் குதித்துப் பாடிய சுமங்கலிகளுக்கும் சந்தனம், பசுமஞ்சள், குங்குமம், வெற்றிலைபாக்கு, பழம், தேங்காய், கொடுத்தார்கள். தோழிப்பெண்கள் வசூல் செய்த தொகையைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டார்கள். பணத்தை வைத்திருந்து எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுத்த சுமங்கலி தனக்கும் ஒரு பங்கு எடுத்துக்கொண்டாள். குதித்துப்பாடின சுமங்கலிகளுக்கெல்லாம் வெற்றிலைபாக்குடன் தக்ஷிணை போல் ஆளுக்கு வீசம் அரைக்கால் கொடுக்கப்பட்டது.

கிராமாதிகாரியாம் ராயருக்கும் பெண்மணியின் தாயார்தகப்பனுருக்கும் ஊராருக்கும் இந்த நான்கு நாள்களும் குதூகலமாயும் விசித்திரமாயு மிருந்தன.

பெண்மணியின் மாமனார் குடந்தையிலிருந்து கோயன்புத்தூருக்குத் தன் குமாரனுக்கு ஒரு கடிதம் போட்டார். பெண்மணி பெரியமனுஷியாய் விட்டாளென்றும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் சாந்தி முகூர்த்தம், நடத்தவேண்டுமென்றும் ஒரு மாதத்திற்குச் சம்பளத்தோடு ரஜா பெற்றுக்கொண்டு செலவிற்கும் நூறு ரூபாய்க்குக் குறையாமல் பணம் ஜாக்கிரதை செய்துகொண்டு முன்னாடியே வந்து சேரவேண்டுமென்றும் சம்பந்தியோடு கலந்து பேசி முகூர்த்தம் நிச்சயம் செய்துகொண்டு பிறகு ஒருவாரத்திற்குள் கடிதம் போடுவதாகவும் அதில் எழுதியிருந்தார்.

இக்கடிதத்தைப் பார்த்தவுடனே பெண்மணியின் புருஷனுக்

குண்டான ஸந்தோஷத்தை நாம் இங்கு சொல்லிமுடியாது. மறு தபாலில் தகப்பனருக்குக் கடிதமும் பதில் எழுதப்பட்டது. ஐந் தாறு நாட்கழித்துப் பெண்மணியின் பாட்டனர் திருக்குடந்தைக்கு அமுதன் ஸேவைக்காக வந்திருந்தார். அப்பொழுது அவரும் சம் பந்தியுமாக ஒரு நல்ல சோதிஷரை வைத்துக்கொண்டு சாந்தி முகூர்த்தம் நிச்சயம் செய்து முகூர்த்தப் பத்திரிகை ஏற்படுத்தினர் கள்.

நிச்சயித்த முகூர்த்ததினம் பூருவபக்ஷம் தசமி, ஸ்வாதி நக்ஷத் திரம் கூடிய சுபதினம். மாமனர் தகப்பனர் இருவருமாக ஒரே கடிதமெழுதிக் கோயன்புத்தூருக்கு அனுப்பினர்கள். ஒரு வாரத் திற்குமுன் சுமங்கலிப் பிரார்த்தனை செய்யவேண்டி யிருப்பதால் முகூர்த்தத்திற்குப் பதினைந்து நாளைக்குமுன் வரவேண்டுமென்று பிதா தன் பிள்ளைக்கு எழுதினர். மாமனரோ மாப்பிள்ளையைக்கடிதம் கண்டவுடனே புறப்பட்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பெண்மணியின் புருஷனும் ஒரு வாரங் கழித்துவந்து சேர்ந்தான். முதலில் குடந்தையில் தகப்பனரைக்கண்டு ஸகல விவரத்தையும் அறிவித்துவிட்டு ரொக்கம் ரூபாய் நூறையும் எண்ணிக் கொடுத்து விட்டு உல்லாஸமாக இருந்தான்.

தனது கிராமத்தில் ராயர் பந்தல் முதலானதும் போட்டுப் பெண்மணியின் சாந்தி முகூர்த்தத்திற்காகக் கட்டில் மெத்தை தலையணை திண்டு, அசமானகிரி, முதலியவைகளையும் அக்கால 'த்தில் வழக்கமாகச் சீருக்காக எடுக்கும் பாத்திரம் வகைராக் களையும் சித்தமாக்கிவைத்துக் கொண்டிருந்தார். ஒலைகொண்டு போனவன் ஒருவன் பெண்மணியின் புருஷனைத் தான் குடந்தை யில் கடைவீதியில் நேரிற்கண்டதாக ராயரிடம்அறிவித்தான். ராயர் மறுநாட்காலையில் ஒருவண்டி வைத்துக்கொண்டு திருக்குடந்தை போய்ச்சேர்ந்தார். அரிசிலாற்றண்டை வண்டியை நிறுத்திவிட்டு ஸ்நாநம் அனுஷ்டானங்கள் செய்துகொண்டு கடைக்குப்போய் வெற்றிலை பாக்குப் பழம் வாங்கிக்கொண்டு வண்டியிலேறி சம்பந் தியின் கிரகத்திற்குப்போய்ச் சேர்ந்தார். அப்பொழுது மாப்பிள்ளை வெளியேபோயிருந்தார். சம்பந்தியைப்பார்த்தார். சம்பந்தி தம்குமா ரன்வந்திருக்கிறன். முகூர்த்தம் நடத்தலாமென்றார். ராயர் முகூர்

த்தம் ஒருவார மிருப்பதாலும் மாப்பிளே தூரத்திலிருந்து வந்திருப்பதாலும் ஐந்தாறு நாள் முன்னடியே மாப்பிளேயை ஊருக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பிள்ளேயாண்டான் அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு சொல்வதாகச் சம்பந்தி பதில் சொன்னர். இத்தருவாயில் மாப்பிளே கடைவீதியிலிருந்து கையில் பழவர்க்கத்துடன் வந்துசேர்ந்தார். பழவகைகளேத் தகப்பனரிடம் கொடுத்துவிட்டு ராயருக்குத் தண்டன் ஸமர்ப்பித்து அபிவாதனம் செய்துவிட்டுப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். ராயர் மாப்பிளேயைப் பார்த்து உம்மை ஊருக்கு முகூர்த்தத்திற்கு முன்னடி அழைத்துப்போக வந்திருக்கின்றேன். அண்ணு உம் அபிப்பிராயத்தை யறிந்துகொண்டு பதில் சொல்வதாக ஆஞ்ஞாபித்தார். என்ன சொல்கிறீர் என்றார். அண்ணு நியமித்தால் வர வித்தமாயிருக்கிறேன் என்று மாப்பிளே சொன்னர். பிள்ளேயாண்டானுக்கு முன்னடியே போக ஆவலிருப்பதைச் சாடையா லறிந்துகொண்டு நீ இன்று ஸாயங்காலம் புறப்பட்டுச் சம்பந்தியுடன் போகலாம். நான் எல்லோருடனும் முகூர்த்தத்திற்கு முதல்நாள் சூரியன் உதயமாகும் முன்பு வந்து சேருகிறேனென்று பிள்ளேயிடம் அறிவித்தார். ராயரும் அப்படியே ஆகட்டுமென்றார். மூன்றுபேருமாகப் பிறகு உள்ளே போய்ப் பெருமாளமுது புசித்தார்கள். சூரியன் அஸ்தமிக்க ஒரு ஜாமப்போ திருக்கையில் ராயரும் மாப்பிளேயும் ஸம்பந்தியிடம் அனுஞ்ஞை பெற்றுக்கொண்டு வண்டியிலேறிச் சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகைப்போ திருக்கையிலேயே ஊர் வந்து சேர்ந்தார்கள். பெண்மணி வண்டி வந்ததைக் கண்டு ஆவலோடு ஓடி வந்தாள். புருஷனே வண்டியிற் கண்டபோது அவள் கொண்ட களிப்பிற்கு எல்லேயில்லே. உடனே வெட்கப்பட்டுக்கொண்டு தாயாரிடம்போய் மறைந்துகொண்டு நின்றாள். மாப்பிளே உள்ளே வந்து மாமனர் மாமியார்களுக்குத் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டுத் தாம்பாளம் கொண்டுவரச்சொல்லி அதில் பாக்கு, வெற்றிலே, பழம் இவைகளேயும் பூச்செண்டு ஒன்றையும் எடுத்து வைத்தார். பெண்மணியைத் தகப்பனர் அழைத்து மாப்பிளேயை ஸேவிக்கும்படி சொன்னர். பெண்மணி கொஞ்சம் லஜ்ஜைப்பட்டாள். பயப்படாதே தாராளமாய் வந்து ஸேவித்துவிட்டுத் தாம்பாளத்தை வாங்கிக்கொண்டுபோ என்றார். தாயா

ரும் உடனே என்னடி ஆருக்குப் பயப்படுகிருய். நீ புத்திசாலி யல்லவோ, நாங்கள் சொல்லுகிறபடி நட என்று சொன்னதைக் கேட்டுப் பெண்மணி தன் புருஷனைத் தூரத்தில் நின்று கடைக் கண்ணுல் ஆரமரப் பார்த்துவிட்டு வணக்கம் ஒடுக்கமாய் வந்து தன் புருஷனை நாலுதரம் ஸேவித்தாள். உடனே தகப்பனுரை யும் தாயாரையும் ஸேவித்துவிட்டுத் தன் புருஷன் எடுத்துக்கொ டுத்த தாம்பாளத்தை வாங்கிக்கொண்டு போய்த் தன் தாயாரிடம் கொடுத்தாள். மாலைப்பொழுதாகையால் அப்பொழுதுபெண்மணிக் குத் தலைவாரிப் பின்னவிடப்பட்டிருந்தது. தாயார் புஷ்பச்செண்டு பெரிதாயும் நல்லவாஸனையுள்ளதாயும் நல்ல ஜாஜியாயு மிருந்த படியால் பெண்மணியின் தலையில் அந்தப் புஷ்பத்தை நிறைய வைத் துச்சூட்டினுள். தானும் கொஞ்சம் எடுத்து வைத்துக்கொண்டாள். மாப்பிளை வந்ததைப் பார்க்கவந்த அக்கம் பக்கம்ஆத்துப்பெண் குழந்தைகளுக்கும் பெண்டுகளுக்கும் புஷ்பத்தோடு வெற்றிலை பாக்கு பழம் கொடுத்தாள். பிறகுஎல்லோரும் தங்கள்மனைகளுக்குப் போய்விட்டார்கள். பெண்மணியின் தோழிகளெல்லாம் பெண் மணியிடம் வந்து கேலிபண்ணினுர்கள். 'அடி எங்களை இனிமேல் சட்டைபண்ணமாட்டாய். உன் யஜமான் வந்துவிட்டார். இனி உன்னை விட்டு அவர் பிரிய மாட்டார். நாங்களெல்லாம் இலவு காத்தகிளிகள் தாம்' என்றுர்கள். 'என்னடி அம்மா நீங்களெல்லாம் எப்பொழுதும் தாயாராத்திலேயே இருப்பதானுல் நானும் அப்படி யேஇருப்பேன். நீங்கள் இப்போது வாய்பதட்டமாய் மட்டும் பேசலாம். லோகத்துவழக்கப்படிதானே நாமிருக்கவேணும். எனக்கோதாயார் தகப்பனுரைவிட்டுப்பிரியவே மனமில்லை நான் என்ன செய்யட்டும். நான் எங்கேபோக நேரிட்டாலும் எத்தனை நாள் ஆய்விட்டாலும் உங்களை எல்லாம் மறப்பேனு. பாலிய ஸ்நேகத்தைவிடப் பெரிசு உண்டோ' என்று பெண்மணி பதில் சொன்னுள். புருஷனேடே கூடப்போகப் பெண்மணிக்கு இஷ்ட மிருக்கிறதை அவள் தாயார் இந்தவார்த்தைகளாலறிந்து கொண்டு பெண்மணியைப்பார்த்து 'அடி என்கண்ணே! நீ உன்அகமுடையா னேடே போய்விட்டால் நான் எப்படி சகிப்பேன். நீஒருநாழி அய லகத்துக்குப் போய் விட்டால் நானும் உன் அண்ணுவும் வருத்தப் படுவது உனக்குத்தெரியாதா. உன்னைப்போகச்சொல்லிவிட்டு நான்

என்ன செய்வேன். என் கைவேலைக்கு ஒருவருமில்லையே. நீ இது வரை எனக்குச் செய்துவந்த கைவேலையை யார் செய்வார்கள். என் கண்மணியே, நீ அதிர்ஷ்டசாலியாவது நிச்சயமானாலும் என் கண்ணெதிரே உன்னை நான் எப்போதும் பார்த்துச்சந்தோஷிக்க வழியில்லையே. உன் அண்ணா உன்னை இப்போ அனுப்பவேண்டாம் என்கிறார். உன் ஆத்தக்காரர் நோக்கமோ உன்னை விட்டு விட்டுப் போவதாகக் காணப்படவில்லை. என்ன சொல்கிறாய்' என்று கேட்டாள். 'என்னடி அம்மா எல்லாம் தெய்வம் செய்கிற காரியம். நாம் நினைக்கிறது ஒரு விதம் நேரிடுகிறது ஒரு விதம். உன்னையும் என் அண்ணாவையும் விட்டுப்பிரிந்து மேற்குச் சீமைக்கு நான் போவதனால் என் மனது சகிக்குமா. எனக்குத் தூக்கம் வருமா. போது போமா. கூட்டிலடைத்த கிளிபோல வீட்டிற் குள்ளே அடைபட்டிருப்பேனே. கலியாணம் நடந்தபோ திருந்த தைவிட இப்போது எனக்குத் துக்கம் பொறுக்கக்கூடவில்லை. சாந்தி முகூர்த்தமும் கிட்டிப்போச்சே. உன்னைப் பிரிந்துவிடு வேனேயானால் ராத்திரி தூக்கம் வருமா. ராத்திரி அம்மாவென்று நான் கூப்பிட்டால் உடனே கட்டி யணைத்துக் கொள்வாயே. நானும் கவலையற்றுத் தூங்குவேனே. இனிமேல் அம்மா எனக்கு இன்னது செய்கிறதென்று தோணவில்லையே. எப்படியாவது உன் மாப்பிள்ளையை மூன்றுமாத காலத்திற்காவது இங்கேயே விட்டு விட்டுப் போய் அப்புறம் வந்து அழைத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லியனுப்பிவிடு. பழகுகிறவரையில் கொஞ்சம் விட்டுத் தான் பிடிக்கவேண்டுமென்று சொல்லு. நீயும் கொஞ்சநாளைக்குக் கூடவந்திருந்து பழக்கிக் கொடுத்துவிட்டு வருவதாய்ச் சொல்லு. என்னை வீட்டைவிட்டுத் தள்ளிவிட உனக்கு இஷ்டமானால் உன் மாப்பிள்ளையுடன் என்னை அனுப்பிவிடு. இல்லாவிட்டால் எப்படி யாவது உன்னாலான தந்திரம் பண்ணி என்னை இங்கே மூன்று மாஸகாலம் நிறுத்திக்கொள்' என்றாள்.

பெண்மணியின் மனோநிலையைத் தாயாருள்ளபடியே யறிந்து கொண்டாள். ஆனாலும் பெண்களுக்குச் சாந்தி முகூர்த்தம் ஆய்வி ட்டால் போக இச்சையினாலே புருஷனிடம் பத்தி மிகுவது ஸகஜமானதால் ஒருவேளை பெண்மணியின் அபிப்பிராயம் மாறிவிடுமென்று எண்ணினாள். தாயார் பெண்மணியின் நிலையிலே முதலிலே

யிருந்து விட்டபிறகு தன் புருஷனிடம் அன்பு கொண்டவளான படியால் அப்படி எண்ணினாள். புருஷன் பெண்சாதிகள் மனசு ஒருவழிப்பட்டால் தான் அப்படி உள்ளன்பு உதிக்குமென்றும் எண்ணினாள்.

பிறகு விளக்குவைத்ததும் மாப்பிள்ளை மாமனார் பெண்மணியின் பாட்டனார் எல்லாரும் போஜனம் செய்தார்கள். பெண்மணியோ சாப்பாட்டறையின் கிட்ட நாடவேயில்லை. கூடத்திலேயே நின்றுகொண்டாள். பிறகு பெண்மணியும் தாயாரும் சாப்பிட்டார்கள். மாமனாரும் மாப்பிள்ளையும் வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு பெண்மணியுந் தாயாருமாக வீட்டு வேலைகளையெல்லாம் பார்த்துவிட்டு உள் பார்த்து மூடிவிட்டு பாலுக்கும் புரை குத்திவிட்டு அரங்கில் படுத்துக்கொண்டார்கள். மாப்பிள்ளையும் மாமனாரும் கூடத்தில் படுத்துக்கொண்டார்கள். பெண்மணியும் அவள் தாயாரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து தூங்கிவிட்டார்கள். கோழி கூப்பிடுமுன் விடியற்காலம் வழக்கம்போலெழுந்து வீட்டுவேலை செய்தார்கள். மாப்பிள்ளையும் மாமனாரும் காலையில் எழுந்து குளத்திற்கு நேரே ஒரு புறமாகப் பகிர்த்தேசத்திற்குப் போய்விட்டுக் கைகால்களை அலம்பிக்கொண்டு பிறகு தந்தாவனத்தை முடித்துக்கொண்டு வந்தார்கள். இதற்குள் வீட்டு வேலைகள் முடிந்துவிட்டன. பெண்மணியைப் பாத்திரங்களைச் சுத்திசெய்து வரும்படி கொல்லையிலுள்ள கேணிக்கு அவள் தாயார் அனுப்பிவிட்டாள். பெண்மணியின் தகப்பனாரும் பாட்டனாரும் வயல் வெளிகளைச் சுற்றிப்பார்த்துவரப் போய்விட்டார்கள். மாப்பிள்ளை கூடத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு புஸ்தகம் படித்துக்கொண்டிருந்தார். யாரும் வந்து ஒட்டுக்கேட்கா திருக்கும்படி மாமியார் இடைக்கட்டுக் கதவைச் சங்கிலி போட்டுவிட்டாள். பிறகு மாப்பிள்ளையிடம் பத்தடிக்கப்பால் நின்றுகொண்டு மாமியார் பின் வருமாறு மெதுவாகவும் தந்திரமாகவும் பேசினாள். 'மாப்பிள்ளையே! பெண் உம்மிடம் பயப்படுகிறாள். அவள் நல்ல புத்திசாலியானாலும் ஒன்றுமறியாத குழந்தை. என்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்கிறாள். அவள் உள்ளே வந்தவுடனே அவளை மடைப்பள்ளியில் வேலைபார்க்கச் சொல்லிவிட்டு நான் கொல்லையில்

கேணிக்குப்போய் வருகிறேன். அதற்குள் நீர் அவளிடத்தில் பிரிய மாய்ப்பேசி உம்மிடத்தில் பிரியம் வரும்படி பண்ணிக்கொள்ளும். நீர் கூப்பிட்டுப் பேசினால் மெள்ள அசல்வீட்டுக்குக் கேட்காமல் பதில் சொல்லும்படி சொல்லிவிட்டுப் போகிறேன்' என்றாள். மாமியார் வார்த்தையை மீறக்கூடாதென்று மாப்பிள்ளையும் அப்படியே ஆகட்டுமென்றார். மாப்பிள்ளை எப்போ ஸமயம் நேருமோவென்று எண்ணிக்கொண்டிருக்கையில் மாமியார் வார்த்தை பாலில் பழம் நழுவி விழுந்ததுபோலாயிற்று. இத்தருணத்தில் பெண்மணி பாத்திரங்களைச் சுத்திபண்ணிக்கொண்டு வந்துவிட்டாள். தாயாரவளுடனுள்ளே அவைகளையெல்லாம் வாங்கி வைத்துவிட்டு அவளைப் புறக்கடைத் தாழ்வாரத்துக் கழைத்துப்போய் 'அடி கண்ணே, நான் சொல்வதைக் கேளு. நீ அடுப்பை மூட்டிக்கொண்டிரு. நான் புறக்கடைக் கேணிக்குப் போய்விட்டு ஒரு நொடியில் வந்து விடுகிறேன். உன் ஆத்துக்காரர் உன்னைக் கூப்பிட்டாவது உன் கிட்ட வந்தாவது பேசினால் மெதுவாகக் கேட்டதற்கு வணக்கமாய் அடங்கிப் பதில் சொல்லு' என்றாள். 'என்னடி அம்மா ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டால் நான் என்ன செய் வேண்டி. நான் மாட்டேனம்மா. நீயே அடுப்பு மூட்டு. நான் கூட இருக்கிறேன். எனக்குத் தயிரியமில்லை அம்மா' என்றாள். பின்னும் தாயார் சொல்கிறாள். 'நீ பயப்படாதே. கட்டிக்கொண்டால் தான் என்ன! நீ இன்னம் குளிக்கவில்லை. பயம் அதிகமானால் அடி அம்மாவென்று என்னைக் கூப்பிடு. நான் வந்துவிடுகிறேன். உன் ஆத்துக்காரர் பதட்டமாய் ஒன்றும் பண்ணமாட்டார். நீ இனிமேல் அவரிடம் போயிருக்கவேணுமே அவரிஷ்டப்படி நீ இருந்தால்தான் அவர் உன்னிடம் பிரியமாயிருப்பார். அதினால் உனக்கு நல்லதேயொழிய வேறொன்றுமில்லை. உன்னிடத்தில் அதிகப் பிரியமாயிருக்கிறார். முன்னே உனக்கு ஆனைமலை மஞ்சள் மட்டுப்பால் ஏலக்காய் எல்லாம் ஒரு பெட்டியில் வைத்தனுப்ப வில்லையா? இப்போதும் ஒரு பையில் மஞ்சள், மட்டுப்பால், ஜாதிக்காய், ஏலம், சந்தனக்கட்டை, ஊதுவர்த்தி, புனுகு, ஜவ்வாது புதுக்கோட்டை வாஸனைப் பில்லை இவைகளெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்' அவரை நீ அசட்டை பண்ணாதே. என்று நூறுதரம் புத்திமதி சொல்லி மடைப்பள்ளி அறைக்குள்ளே போகும்படி

அனுப்பிவிட்டுக் கூடத்திலிருந்த மாப்பிளேக்கும் ஜாடை காட்டி விட்டுப் புறக்கடைக் கதவைச் சாற்றிக்கொண்டு கொல்லேப்புறம் போய்விட்டாள். பெண்மணி அடுப்புமூட்டத் தோன்ருமல் மடைப் பள்ளிக் கதவின்மூலேயில் ஏக்கம் பிடித்து நின்றுகொண்டிருந்தாள். கதவின் சந்தால் தன் புருஷன் என்ன பண்ணுகிருரென்று பார்த் துக்கொண்டிருந்தாள். பெண்மணியின் முகக்கமலத்தை நேரிற் பார்த்துப் பேசிக் களிக்கச் சமயம் வாய்த்ததென்று களிப்புற்றுப் பெண்மணியின் அருகில் அறைக்குள் அவள் புருஷன் போனன். அவளோ முகம் கொடுக்கவில்லே. மெதுவாக 'என் பயப்படுகிருய், நான் புலியா கரடியா? கிட்ட வந்து உட்காரு. உன்னே நான் இப்போ ஒன்றும் பண்ணமாட்டேன். சாந்தி கழியவில்லே. நான் கேட்ப தற்குப் பதில்மட்டும் சொல்லு' என்ருன். பெண்மணி அருகிற் சென்ருள்; உட்காரவில்லே. 'என் கண்ணே. சாந்தி கழிந்துவிட் டால் உன்னேவிட்டு நான்எப்படிப் பிரிவேன். உன் ஆசைவலேயில் நான் அகப்பட்டுக்கொண்டேன். உன் அழகில் மூழ்கிக்கிடக்கிறேன். கண்ணெடுத்து என்னே நேரே பார். பவளவாய் திறந்து பதில் சொல்' என்ருன். பெண்மணி புத்திசாலியாகையால் புருஷனேப் பார்த்துவிட்டு ஒரு பக்கமாக நின்றுகொண்டு பேசலுற்ருள். 'நதி எங்கே பிறந்தாலும் ஸமுத்திரத்தைத் தான் சேரும். தேன் எங்கே இருந்தாலும் வண்டு தேடிவந்து உட்கொண்டுகளிக்கும. தேனேச் சேர்த்துவண்டுகள் வேருேரிடத்தில் வைத்துண்பதுமுண்டு. உம் மைத்தவிர எனக்குக் கண்ணும் கதியும் வேறுண்டோ? உமது கட்டளேயை மீறமாட்டேன். ஆனல் இதுவரையில் நேர்ந்த பழக் கத்தால் என் தாயாரையும் தகப்பனுரையும் விட்டுப் பிரிய மனம் வரவில்லே. இது நிச்சயம் நிச்சயம்' என்ருள் பெண்மணியின் வசனமிர்தமுண்டு மயங்கின அவள் புருஷன் அவளே எழுந்து நின்று கட்டி முத்தமிட்டுக்கொண்டான். மூக்கோடு முகத்தை அணேத் துக்கொண்டான். பெண்மணி 'அம்மாள் வந்துவிடுவாள். அடுப்பு மூட்டவேண்டுமே' என்ருள். அப்படியே செய் என்று பின்னுமொ ரு முத்தமிட்டுவிட்டுக் கூடத்திற்கு வந்துவிட்டான். பெண்மணி அடுப்பு மூட்டஆரம்பிக்குமுன் தாயார் வந்துவிட்டாள். 'எண்டி அம்மா தாமசமேன்' என்று பெண்மணியைக் கேட்டாள். நடந்த தைச் சொல்லிவிட்டாள். புத்திசாலி நீ தான் என்று ஸந்தோஷி

த்தாள். நான் அடுப்பு மூட்டுகிறேன் நீ உட்காரு. உனக்குப்பழையது போடுகிறேன் என்றாள். நல்ல கட்டித்தயிர் ஒருபடி கேட்டிருக்கிறேன், அடுத்த ஆத்தில் போய் வாங்கிவாவென்று மரவையைக் கொடுத்தனுப்பிவிட்டாள். இவ்விதமாகப்பெண்மணியின் முககமலத்திலோடும் நாட்டமுள்ளவராய்மாப்பிளை ஐந்தாறுநாள் அங்கேயிருந்தார். திருக்குடந்தைச் சம்பந்தியும் சாந்தி முகூர்த்தத்திற்கு முதல் நாள் வந்துசேர்ந்தார். அன்றையதினம் ததீயாராதனம் வெகு செம்மையாய் நடந்தது. மறுநாள் காலையில் உதகசாந்தி விதிப்படி நிறைவேறியது. ததீயாராதனமும் நிறைவேறியது. அக்காலத்தில் கட்டில் மெத்தை சாமான்களையும் பாத்திரம் முதலிய பண்டங்களையும் ஊருகோலம்போல் வீதியிற் கொண்டுவரும் வழக்கமில்லை. சாந்தி முகூர்த்தத்தில் பட்டுப்பாயும் ஜமக்காளமும் தலையணையுந்தான் வாங்குவதுவழக்கம். ஐந்து ஆறு ரூபாய் பெறும்படியான பாத்திரங்கள்தாம் வாங்கப்படும். மாப்பிளை பெண் இவர்களுக்கு வாங்கும் வேஷ்டியும் புடவையும் பத்து ரூபாய்க்குள்படுமேயல்லாது அதிகப்படாது. ராயர் கிராம அதிகாரியாகையால் கட்டில் மெத்தை முதலியவைகள் வாங்கினார். மாப்பிளை லௌகிகத்திலிருப்பதாலும் பெண்மணி அழகில் மிகுந்த சுந்தரியாகையாலும் சாந்திமுகூர்த்த ஜோடிப்புக்கள் விசேஷமாயிருந்தன. பித்தளைக்குடம் செம்பு போகணி சிப்பில் தபலை தாம்பாளம் குளபாத்திரம் சந்தனக்கிண்ணம் குத்துவிளக்கு இவைகள்தாம் பெண்மணிக்கு அப்போதுகொடுத்த சீதனங்கள். அக்கால வழக்கப்படி மரவை ஒன்றும் கொடுக்கப்பட்டது. வேஷ்டியும் புடவையும் பத்து ரூபாய்க்குப்பதிலாக இருபது ரூபாய்க்கு வாங்கப்பட்டன. நிஷேகலக்கினத்திற்குமுன் மாலையில் கிரகப்பிரீதியும் செய்யப்பட்டது.

நிஷேகலக்கினத்தில் பெண்மணியும் அவள் புருஷனும் சயன கிருகத்தில் கட்டிலின்மீதேறி விதி முறைப்படி வேதமந்திரங்கள் ஓதிப் பெரியோர் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட பின்பு கூச்சமின்றி யிருவரும் ரதியும் மதனனும்போலக் கட்டிக்குலாவி முத்தமிட்டு யினியமொழி கூறிக் காமபோக மனுபவித்தார்கள். மறுநாட் காலையில் பல தானமும் கொடுக்கப்பட்டது. பெண்மணியும் அவள் புருஷனும் தாய் தந்தையர்களையும் பெரியோர்களையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்றார்கள். குடந்தைச் சம்பந்தி

யும் மூன்றுநாள் வரைக்கும் ராயரின் இஷ்டத்திற்காக இருந்தார். நான்காவதுநாள் ஆவதற்கு முன்பே பெண்மணிக்குப் புருஷன் மேற் பிரியமுதித்துவிட்டது. பிறகு பெண்மணியும் புருஷனும் குடந்தைக்குச் சென்றார்கள். பெண்மணி தூரதேசம்போவதால் அவள் தயார் தகப்பனர் பாட்டனர் எல்லோரும் சம்பந்தியுடன் குடந்தைக்கு வந்துவிட்டார்கள். மாப்பிளைக்கு ரஜாநாள் முடிய 15 நாள்கள்தா மிருந்தன. ஆராவமுதன் சந்நிதியில்போய் பெண் மணியும் அவள் புருஷனும் பந்துக்களுடன் வலம் வந்து கோம ளவல்லிக்கும் அமுதனர்க்கும் அர்ச்சனைகள் செய்வித்து ஸேவை செய்துவிட்டுத் திரும்பி வந்தார்கள்.

பிறகு நல்லநாள் பார்த்து வண்டி ஒன்று திட்டம்பண்ணிக் கோயம்புத்தூர்ப் பிரயாணத்திற்குச் சித்தம் செய்தார்கள். பெண் மணிக்கோ புருஷன் அன்பொருபக்கம் பெற்றூர்மேல் அன்பொரு பக்கம் இழுக்கவே செய்வதறியாது தயங்கினுள். அவள் பெற்ருே ரும் பாட்டனும் கன்றைவிட்டுப் பிரியும் பசுவைப்போல் வருந்தி ஞர்கள். ஒருநாள் விடியற்காலையில் வண்டியில் பெண்மணியும் அவள் புருஷனும் செல்லப் பின்னே, எல்லோரும் இரண்டுநாழிகை தூரம் வரையில் சென்று வழியனுப்பிவிட்டுப் பெண்மணியை அவள் தாயாரும் தகப்பனும் புத்திமதிசொல்லி வண்டியிலேற்றிவைத்து ஆசீர்வாதம் பண்ணிவிட்டுத் திரும்பிவிட்டார்கள். அன்று மாலை யில் குடந்தையிலிருந்து தங்கள் கிராமம்போய்ச் சேர்ந்தார்கள். பரிசாரகன் வண்டியின் முன்புறம் வண்டிக்காரனுக்கருகில் உட் கார்ந்துகொண்டான். வண்டி 11-வது நாள் மத்தியானம் கோய ன்புத்தூர் போய்ச் சேர்ந்தது. மறுநாள்காலையில் பெண்மணியின் புருஷன் கச்சேரியில் வேலை ஒப்புக்கொள்ளவேண்டியிருந்தது.

பெண்மணி சுபமுகூர்த்தத்தில் தன் புருஷன் குடியிருக்கும் கிரகத்தில் பிரவேசித்தாள். அப்பொழுது கருடபகவான் வீதியில் வந்து வட்டமிட்டார். எல்லோரும் பார்த்துக் களித்தார்கள். பெண்மணி கிரகத்தில் வந்து நுழைந்த நாளில் பிராமணர்கள் பலர் போஜனம் செய்து தம்பதிகளை வேத மந்திரங்கூறி ஆசீர் வதித்தார்கள்.

(இன்னும் வரும்)

தி. வேங்கடராம ஐயங்கார்.

ஆனந்த மோகன போஸ்.

சீராருங் கலைமதியு முயரறிவு நன்னடையுந் திகழக் கொண்டோன்
ஏராரும் நந்தேசத் தபிமான மிகவுடையோன் ஈசன் றன்பால்
நாராரும் மனங்கலந்த பண்புடையான் நண்புடையான் ஞானி யாவான்
பேராரும் ஆனந்த மோகனபோஸ் எனுமரிய பெருமை யோனே.

சிறந்த மேதாவியாகிய இவ்வள்ளல், அந்தோ! விண்ணுலக வாழ்க்கையை விரும்பினார் என்பதை நினைக்குந்தோறும் நமக்குண்டாகும் துயரப்பெருக்கை இவ்வளவினதென்று அளவிட்டுரைத்தல் ஸாத்தியமன்று. பெரிய புயற்காற்றினா லலைப்புண்டு வழிதப்பியோடும் மரக்கலமொன்று, பாறையில் தாக்கிச் சின்னாபின்னமாகத் தகர்ந்து மூழ்கிப்போகுந் தருணத்தி லிருக்கும்போது அதனை யொருவாறு கரைசேர்க்க வல்ல மதியூகியான மாலுமியையும் திடீரென இழக்க நேரிட்டால் அப்போது அம் மரக்கலத்தி லுள்ளவர்கள் எவ்வாறு மனம் தியங்கித் தத்தளிப்பார்கள்?—அவ்வாறே, W. C. பானர்ஜியும், டயாப்ஜியும் ஆகிய இவ்விரண்டு இரத்னங்களையும் இழந்த நாம், இப்போது உயிரெனச் சிறந்த பரோபகார மூர்த்தியாகிய ஆனந்த மோகன போஸ் என்பவரையும் இழந்து மனந் தத்தளிக்கின்றோம். குன்றின்மேலிட்ட

விளக்காகி யொளிவீசிக்கொண்டிருந்த இப்பெரியோர்கள் இல்லாமற்போகவே நமது தேசம் ஏகதேசம் இருளாற் சூழப்பட்டுப் போயிருக்கிறதென்று துணிந்து சொல்லலாம். அதிசீக்கிர காலத்தில் ஒருவர்பின் னொருவராய் மூவரை யிழக்க நேரிட்டது ஏதோ விபரீதமாகவே தோற்றுகிறது. ஸ்ரீவாணீ விலாஸினீயின் ஆடிமாதத்துச் சஞ்சிகையில் 'சென்றமாதம்' என்னுங் குறிப்பில் பத்திராசிரியர் சுட்டிக் காட்டியபடி இவ்வருஷம் நமக்குப் பெரிதும் ஆகாத காலமோ என்னவோ தெரியவில்லை. இன்றேல் இடி விழுந்தது போலும் இவ்விதமான நஷ்டங்கள் ஒருங்கே ஒருபோதும் நேரமாட்டா. இனியும் இவ்விதமான கொடிய நஷ்டங்களால் நம்மை மனம் நையச்செய்யாமல் கடவுள் கருணைபுரிந்து காப்பாராக.

நமது நாட்டுக்குப், முக்கியமாய் நமது காங்கிரஸ் மகா ஸபைக்கும் நல்லதோர் பற்றுக்கோடாக நின்று எண்ணிறந்த நன்மைகளைச் செய்தவர்களான மேற்கூறிய இம் மூவர்களுள்ளும் ஆனந்த மோகன போஸ் என்பவரிடத்தில் சிரேஷ்டதமமான அநேக நற்குணங்கள் விளங்கிக் கொண்டிருந்தன. நல்லோர்களாற் கொண்டாடப்படுவதும் ஒருவனை மிகவும் மேம்பாடடையச் செய்வதுமாகிய அடக்கம் என்னும் உயர்ந்த குணம் இவருக்கே யுரித்தாகி யிருந்தது. "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற—மலையினு மாணப் பெரிது." என்ற திருக்குறளுக்கு இவரையே நல்ல நிதர்சனமாகக் காட்டலாம்—கல்வி கேள்விகளாற் சிறப்புடைய விவர்க்கு இப் பணிவு என்னுங் குணம் உண்மையில் ஒரு அரிய பூஷணமாகவே விளங்கிற்று. திடமான தெய்வபக்தியும், பகவதாராதனப் பிரியமும், பயனையெதிர்பாராது தம்மா லியன்றவளவுக்குப் பரோபகாரம், புரிதலுமாகிய ஏனைக் குணங்களும் இவர்பால் நீங்காமற் குடிகொண் டிருந்தன. தெளிவான மதியுடைமையில்

இவர் எப்படி யாவரினும் முதன்மைபெற்று விளங்கி வந்தாரோ அப்படியே சிறந்த குணங்களை யுடைமையிலும் இவர் முதன்மைபெற்றுத் தோன்றுவாராயினர். இவர் புரியும் பிரசங்கங்களில், மற்றத் தேசாபிமானிகள் புரியும் பிரசங்கத்திலும் விட, கடவுளைக் குறித்துக் கூறப்படும் விஷயங்கள் அதிகமாகவே காணப்படும். ஒற்றுமைபென்பதை நம்மவரெல்லாங் கைக்கொண் டொழுக வேண்டுமென்பதாகவும், அற்பமான வித்யாசங்களை யெல்லாம் பாராட்டாம லொழித்துப் பெருந்தன்மையாய் நடக்க வேண்டுமென்பதாகவும் இப்படிப் பலர் பலவிதமாக உபந்நியசித்து வாராநிற்க, இவர், அன்பின் பெருமை யித்தகையதென்பதை நன்றாக ஒவ்வொருவர் மனத்திலும் வேரூன்றிப் பதியுமாறு விளங்க உபந்நியசித்து — ஜன்மபூமி யிடத்திலும், இப் பூமியிலுள்ளவர்க ளிடத்திலும் உள்ளபடியே யன்பு பாராட்டல் வேண்டுமென்று வற்புறுத்திக் கற்பிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தேசாபிமானம் என்பது இவர்பால் இயற்கைக் குணமாகவே காணப்பட்டது. இவரவ்வளவு சுதேசாபிமானத்தில் பற்றுள்ளவர்கள் வேறு எவரு மிருந்திலரென்றே சொல்லலாம். சென்னையிற் கூடிய 14-வது இந்தியன் நாஷனல் காங்கிரஸிற்கு இவர் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த காலத்தில் புரிந்த பிரஸங்கமானது அச்சபையோர் யாவரையும் மனமுருகிக்கண்ணீர் சொரிந்து மெய்ம்மறந்து பரவசராய் ஆனந்தக் கடலில் மூழ்கும்படியாகச் செய்தது; என்றால் இவரது பிரஸங்க ஸாமர்த்தியத்தை என்னென்று புகழ்வோம்.

ஆனந்த மோகனபோஸ் கீழபெங்காளத்தில் மைமென்ஸிங்என்னும் ஜில்லாவில் ஜாய்ஸித்தி என்னும் ஒரு சிறு கிராமத்தில் 1847-ம௵ ஆகஸ்ட்டுமாதம் பிறந்தார். இவரது பிதாவாகிய பாபு பத்மலோசன போஸ் என்பவர்

அந்த ஜில்லாவில் கவர்ண்மெண்டு உத்தியோகத்திலிருந்து வந்தார். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற பழமொழிக் கிணங்க இளமை தொட்டே இவரிடத்தில் அநேக நற்குணங்கள் காணப்பட்டன. எதையும் எளிதாகவும் விரைவாகவும் கிரஹிக்கின்ற இவரது ஸூக்ஷ்ம புத்தியைக்கண்டு அதிசயித்த யாவரும் 'அதி சீக்கரத்தில் இவ்வாலிபன் ஒரு சிறந்த மேதாவியாகி மேன்மையை யடைவான் என்பதிற் சிறிது மையமில்லை' என்று சொல்லிப் பாராட்டுவார்கள். இவர் அதிபால்யமாகிய 9-வது பிராயத்தில் மத்திய சுதேசபாஷா பரீக்ஷை யென்பதிற்றேறி உயர்ந்த உபகாரச் சம்பளம் (Scholarship) பெற்றுப் பிரவேச பரீக்ஷைக்குப் படித்து 1862-ம் வருஷம் அதாவது தமது 15-வது பிராயத்தில் அப் பரீக்ஷயிற்றேறி முதல்தர உபகாரச் சம்பளம் பெற்று யாவராலும் கொண்டாடப் பெற்றார். இவரது மேற்படிப்பும் இவ்வாறே கொண்டாடத்தக்கதா யிருந்தது. மத்தியதரப் பரீக்ஷையில் முதலாகத் தேறி 1866-ஸு பி. ஏ. பட்ட பரீக்ஷயில் அச் சர்வகலாசங்கத்தில் முதலானவராகத் தேறி எல்லாருடைய புகழ்ச்சிக்கும் நன்கு மதிப்புக்கும் விஷயமாயினர். எம். ஏ. பரீக்ஷயில் கணித சாஸ்திரத்தில் முதல்வகுப்பில் முதல் முதலாகத் தேறியவரும் இவரே. இவர் கணித சாஸ்திர பரீக்ஷயில் விடையளித்த பேராற்றலைக் கண்டு மிகவும் வியப்படைந்து வைஸ் சான்ஸலராகிய ஸர் ஹென்றி எஸ். மெயின் என்பவர் ஆக்ஸ்வோர்டு, கேம்பிரிட்ஜ் என்னு மிடங்களிலுள்ள மாணுக்கர்களுங் கூட ஆனந்த மோகனபோஸைப் போல விடையளிக்க மாட்டார்கள் என்றார். இவர் கலாசாலையை விட்டவுடன் ப்ரேம் சண்ட் ராய் சண்ட் என்பவரது உபகாரச் சம்பளமாகிய 10,000 ரூபாயைப் பெறுவதற்காக மற்றைய வித்யார்த்திகளோடும் போட்டி போட்டுத்

தாமே யப்பரிசைப் பெற்று ஜயமடைந்தார். பிறகு சில காலம், இஞ்சினீயர் காலேஜில் கணித வித்யா உபாத்தியாயராகி விசேஷ கீர்த்தியை யடைந்து, 1870-ம் ஹூ பாபு கேஷப் சண்டர் ஸென் என்பவரோடு கூட இங்கிலாந்துக்குச் சென்று அங்கே கேம்பிரிட்ஜில் கிறைஸ்டு காலேஜில் சேர்ந்து படிக்கலாயினர். அச்சர்வகலாசங்கத்தில் மூன்று வருஷகாலம் சாஸ்திரப் பயிற்சிசெய்து மிகப் பிரஸித்தராகி விளங்கவே, இவருடைய புத்தி விசாலத்தையும் சீரிய ஒழுக்கங்களையும் வியந்து இவரை, கேம்பிரிட்ஜ் யூனியன் என்னும் ஸபைக்கு அக்கிராஸனாதிபதியாகத் தெரிந்தெடுத்தார்கள். பின்னர் 1874-ஹூ இவர், கணித சாஸ்திரத்தில் ராங்கிலர் ஆகி இந்தியர்களாற் பெரிதும் கொண்டாடப்பட்டார். முதன் முதலாக இந்த ராங்கிலர் என்னும் பட்டத்தைப் பெற்றுப் புகழடைந்த இந்தியர் இவர்தாம். சில மாதங்களுக்குப்பின் இவர் பாரிஸ்டர் பட்டத்தையும் பெற்று 1874-ம் ஹூ இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்.

விடாமுயற்சியும், உழைப்பும், கூரியமதியுமுடைய இவர் கல்கத்தாவிலேயே யிருந்திருந்தால் மற்றை யெல்லா நியாய வாதிகளையும் பார்க்க அதிகமாகப் பேரும் புகழும் பெற்றிருக்கலாம். எனினும், இவருக்குத் தாம் வக்கீலாக வந்தது முதற்கொண்டே வெளியிடங்களுக்கே போகவேண்டுமென்ற எண்ணம் மிகுந்திருந்தது. இதில் இவர் ஏராளமாகப் பொருள் சம்பாதித்துப், பெரும்பாகமான திரவியத்தை ஆஸாம் தேயிலைக் கைத்தொழிற்சாலையிற் போட்டிருந்தார். கல்கத்தா ஹைகோர்ட்டில் ஒரு சமயம் ஒரு கிரிமினல் நடவடிக்கையில் குற்றவாளியை விடுவிக்கவேண்டி யிவர் பேசிய உபந்நியாஸத்தைக் கேட்டு அக்காலம் அந்தக் கோர்ட்டில் நீடித்த நாளாகப் பயிற்சி

செய்துவந்த சிறந்த வக்கீலாகிய மிஸ்டர் ஜான். டி. பெல் என்பவர் தாம் புரிந்த மற்றொரு பிரசங்கத்தில் 'இப்படிப் பட்ட பிரசங்கம் நான் இதுவரைக் கேட்டதில்லை' என்று அதிசயித்துக் கூறினர். இவருடைய வக்கீல் ஸாமர்த்தியம் இன்னதாக இவர் கல்விச் சிறப்பையும் ஒரு சிறிது இங்கே கூறுவோம்.

பெரியபெரிய வித்தியாபட்டங்களையெல்லாம் வீணே சுமந்துகொண்டு கல்வியை அபிவிர்த்தியடையச்செய்யும் விஷயத்தில் நோக்கம் வைத்துச் சிறிதும் பாடுபடாமல் பணவருவாயுள்ள தங்கள் சொந்த வேலையையே கவனித்துக்கொண்டு காலத்தைக் கழிக்கும் ஏனையோர்களைப் போல நமது ஆனந்த மோகன போஸ் இருக்கவில்லை. வக்கில் வேலையும், தேயிலைக் கைத்தொழிற் சாலை விஷயமான வேலையும் இவருக்கு மிகுதியும் உண்டென்றாலும் இவர் கல்வி விஷயத்தில் மிகவும் ஆஸக்தி யுடையவராய் அதற்காகத் தம்மா லியன்ற வளவுக்கு விசேஷமாக உழைத்துவந்தார். இவரை வித்யார்த்திகளுடைய மனமொத்த தோழர் என்றும், அறிவுமிக்க தத்துவோபதேசகர் என்றும், அடக்கிபாளுந் தலைவரென்றும் சொல்வது வழக்கம். ஏனெனில், மாணுக்கர்கள் சம்பந்தமான எந்த விஷயங்களையும் இவர் விசேஷ அபிமானங்கொண்டு சீர்திருந்தச் செய்வார். இவர் 1877-ம் ஞு சர்வலாசங்கத்தில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். மறு வருஷம், அதாவது இவர் முப்பதிரண்டு வயதாயிருக்கும் போதே ஸிண்டிக்மெம்பராகவுந் தெரிந்தெடுக்கப்பட்டார். அக்காலை இவர் பொதுவாகக் கல்வி விஷயமாக எவ்வளவோ சீர் திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று எடுத்துக் காட்டினர். அவற்றிலொன்று கல்கத்தா சர்வகலா சங்கத்தை ஒரு கற்பிக்கும் சர்வகலா சங்கமாகத் திருப்ப

வேண்டுமென்பதே. இதற்காக இவர் வெகுதூரம் மன்ருடிச் சண்டையிட்டும் முடிவிற் பயன்படாமற்போயிற்று. என்ருலும், பிரவேச பரீக்ஷைக்கு இத்தனை வயதிற்குள் தான் போகவேண்டுமென்று கால நிர்ணயமிட்டிருந்தது தப்பென்று நிரூபித்து அச் சட்டத்தை விலக்கினர். பிரேம் சண்ட் ராய் சண்ட் உபகாரச் சம்பளத்தைப் படித்து வெற்றியடைந்த மாணுக்கர்களுக்குக் கொடுப்பது சிறப்பில்லையென்றும், அதைவிட, மேலே படிக்கவேண்டுமென்னும் விருப்பமுடையவர்களுக்கே கொடுப்பது சிறப்பாகுமென்றும் சொல்லி யப்படியே மாற்றினர். கல்வி விஷயத்தில் இவர்பால் கற்ருேர்கள் வைத்திருந்த நன்கு மதிப்பு இவ்வளவினதென்று சொல்லுதல் ஸாத்தியமில்லை. இவரது இணையிலாக் கல்வி யாற்றலைக்கண்டு அடங்கா மகிழ்ச்சிகொண்டவரான மாட்சிமை தங்கிய ரிப்பன் பிரபு இவரை 1882-ம் ஞு ஏற்பட்டபிரபலமான எடுகேஷனல் கமிஷனுக்குத் தலைவராக இருக்கும்படி பிரார்த்தித்தார். இவர் அவ்வேண்டுகோட்கிணங்கி அவ்வேலையை யங்கீகரியாமல் மறுத்துவிட்டார். ஏனெனில், தாம் தலைவராயிருந்தால், சுதேசி யென்கிற காரணம்பற்றிக் கமிஷனுக்குள்ள கவுரவத்தையே குறைத்துவிடுவார்களென்பது இவருக்கு நன்ருகத் தெரியும். இதனினும் பெருந்தகைமை வேறுண்டோ? கேவலம் சர்க்கார் உத்தியோகத்தையே பெரிதென்றெண்ணி அவ் வுத்தியோகத்திற்காகவும், அதனுல்வரும் பெருமைக்காகவும், அவ்வுத்தியோகத்தர்களது தயவுக்காகவும் எதிர்நோக்கித் தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்ள முயல்பவர்களுக்கு நமது ஆனந்த மோகன போஸின் இச் சரித்திரம் ஏற்றவாறு இடித்துப் புத்தி புகட்டுமென்றே நாம் நினைக்கின்ருேம். இங்ஙனம் சபாநாயகராக விருப்பதைமட்டும் வேண்டாமென்று திரஸ்

கரித்தாரேயொழிய அந்தக் கமிஷன் ஸம்பந்தத்தைவிட்டு விடவில்லை. அதில் அங்கத்தினராக விருந்து ஸர். W. ஹண்டர் முதலானோர்களுக்கு மிகுந்த உதவிபுரிந்தார். மேலும், இவர் 1880-ம் ௵ பிரவேச பரீக்ஷைக்குப் போகும் வகுப்புவரையிலுமுள்ள ஸிட்டி ஸ்கூல் என்னும் ஒரு கலாசாலையை யேற்படுத்தி நல்ல கல்வித் திறமையும், ஒழுக்கமும், போதனாசக்தியும், விடாமுயற்சியுமுள்ள சிறுவர்களான உபாத்தியாயர்களை நியமித்து நன்கு நடத்திவந்தார். இந்தக் கல்விச்சாலை விஷயமாக இவர்கொண்ட சிரத்தைக்கும் செய்த நன்மைக்கும் ஓர் அளவில்லை. முதலில் ஒரு சிறு கட்டடத்தில் இருந்த இந்தக் கல்விச்சாலை வரவரப் பிரஸித்தி யடைந்து தனக்கு இணையில்லை யென்னும்படி விருத்தியாகி இப்போது ஸிட்டிகாலேஜ் என்று சொல்லப் படுகிற உயர்தர வித்யாசாலையாகி மேம்பாடடைந்திருக்கிறது. இவ்வளவுக்கும் இம்மகானே காரணம். தவிர, இவர் 1876-ம் ௵த்தில் ஒரு பெண் பாடசாலையையும் ஸ்தாபித்து அதன் செலவுக்கெல்லாம் தம் கையிலிருந்தே கொடுத்துக்கொண்டு வந்தார். அக்கலாசாலை இப்போது கல்கத்தாவில் பேத்தூன் காலேஜ் என்பதோடு சேர்க்கப் பட்டிருக்கிறது. இவைமாத்திரமேயல்ல. இப்போதும் நன்னிலைமையி லிருந்துகொண்டு நம்மவர்க்குப் பலவிதமான ஸௌகர்யங்களைச்செய்துவருகின்ற "பிரிடிஷ் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்" என்பதை நமது நாட்டுக்கு மற்றொரு தலைவராகிய பாபு ஸுரேந்திர நாத் பானர்ஜி யென்பவரோடு முதல்முதல் ஸ்தாபித்தவர் இவர்தாம். இச் சங்கத்திற்கு இவரே முதலெடுப்பில் காரியதரிசியாக விருந்து கணக்கிடற்கரிய வுபகாரங்களை யிச்சங்கத்தின் மூலமாக நமக்கும் நமது நாட்டிற்கும் புரிந்திருக்கின்றார்.. இதுவுந்தவிர மாணுக்கர்களுக்கு நல்ல விவேக முண்டாக

வேண்டுமென்னுங் கொள்கையோடு 'மாணவர் சங்கம்' என்பதை ஸ்தாபித்து அதற்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கின்றார். சுருங்கச்சொல்லின் "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு-மாடல்ல மற்றையவை." என்பதை உள்ளபடி கைக்கொண் டொழுகிப் பெருமை பெற்றவர் இந்த ஆனந்த மோகன போஸ் ஒருவரேதாம்.

நமது தேச விஷயமாகவும் மத விஷயமாகவும் இவருக்கிருந்த ஊக்கம் அல்ப ஸ்வல்பமானதன்று. கல்வி விஷயத்தில் எவ்வளவு சிரத்தை யிருந்ததோ அவ்வளவு சிரத்தை இவருக்கு இவைகளிலு மிருந்தது. இவர் பங்காள சட்ட நிரூபண சபையில் 1886-ம் ௵ அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். திரும்பவும் 1895-௵ இரண்டாமுறையாக கல்கத்தா சர்வகலா சங்கத்தின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்விரு முறையிலும் இவர் செய்த நற்காரியங்கள் அபரிமிதம். மேலும் முனிசிபல் கமிஷனராக விருந்தபோதும் பற்பல நன்மைகளைச் செய்து 'சுதேச இந்தியர் சங்கம்' என்பதை நிலை பெறும்படி ஸ்தாபித்தார். மத விஷயத்திலோவெனில், இவருக்கிருந்த ஊற்றம் மற்றெவருக்குமே யிராது. கேஷப் சந்திர ஸென் என்பவரது சிஷ்யராகி பிர்ஹ்ம ஸமாஜத்தில் சேர்ந்து அம்மதக் கோட்பாடுகளுக் கிணங்க நடந்துவந்தார். எல்லாம் வல்ல கட்வு ளொருவ ருண்டென்றும், அவரை எப்போதும் பஜித்துக்கொண்டு அவரது கட்டளைக்குப் பணிந்து பயத்துடன் ஒவ்வொருவரும் ஒழுக வேண்டுமென்றும், ஜாதி யாசாரங்கள் வீண்கலகத்திற்கும் விரோதத்திற்குமே காரணமாமென்றும், இவ் வீணன வேற்றுமைகளாற் பயன் சிறிது மில்லையென்றும் உறுதியாகக்கொண்டு சமயம் வாய்த்தபோதெல்லாம் தமது ஸித்தாந்தத்தை உபந்நியசித்து வாலாயினர். 1876-ம்

ஹூத்தில் ஒரு பிர்ஹ்ம ஸமாஜத்தை ஸ்தாபித்து அடிக்கடி பிரஸங்கங்கள் புரிந்தும் புரிவித்தும் அந்த ஸமாஜத்தைப் பரிபாலித்து வந்தார். தானதர்மங்களைச் செய்வதில் இவர் மிகுந்த தாராள மனமுடையவர். பெரியோர்பாற் பணிவும், ஏழைகள்பால் இரக்கமும், குழந்தைகள்பால் வாஞ்சையும், மாணாக்கர்பால் அபிமானமும், ஒத்தவர்கள் பால் நட்பும், ஈசுவரன்பால் பயபக்தியும், இவைபோன்ற பிறநற்குணங்களுமுடையவராகிச்சாந்த புருஷராக விளங்கியதால் இவரை யாரும் 'போஸ் மகான்'என்றே சொல்லி வரத் தலைப்பட்டார்கள். இவ்வளவுக்கும் இவரை மேம் படுத்தியது எது? இவரது அபாரமான உழைப்பேயாகும். பெயர்போன பண்டிதராகிய டாக்டர். பி. ஸி. ராய் என்பவர் "ஆனந்த மோகன போஸ் இடைவிடாமல் 18-மணி நேரம் வேலை செய்வார். இதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்" என்று சிலாகித்திருக்கின்றார். திருவள்ளுவ நாயனார் கூறிய "இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்—துன்பந் துடைத்தூன்றும் தூண்." என்னும் அமுத வாக்கியத்தை மேற்கொண்டு ஒப்பிலாப் பாடுபட்டதனாலன்றோ இம்மகான் அவரைச் சார்ந்திருந்த நம்மவர்க்கெல்லாம் ஒரு பற்றுக்கோடாக நின்று வேண்டுங்காலத்தெல்லாம் உதவி புரிய வல்லராயினர்.

இவர் திரும்பவும் 1897-ம் ஹூ இங்கிலாந்துக்குச் சென்றபோது இந்தியர்களாகிய நம்மவர்களது குறைகளையெல்லாம் எடுத்து முறையிட்டுக் கூறி அவற்றைப் பரிகரிக்கும்படி அளவிறந்த பாடுபட்டிருக்கிறார். அப்போது இவர் செய்த பிரஸங்கங்கள் அனைத்தும் கேவலம் கல்லாயிருப்பினும் உருகும்படி செய்ய வல்லனவா யிருந்தன. இவைகளைப்பற்றியும் இவர் காருண்யத்தைப் பற்றியும் ஹென்றி பாஸேட் என்பவர் மிகக் கொண்டாடிப் பேசி

யிருக்கின்றார். அவற்றை யிங்கே யெழுதல் அஸாத்திய மென விடுக்கின்றோம். இப்படியாக இவர் பொது நன்மைக் குழைத்துக் கீர்த்தியோடும் இந்தியாவுக்குத் திரும்பும்போது இவர் வருகையை நம்மவர்கள் கொண்டாடிய திறத்தை யென்னென்று சொல்வது? ஸ்ரீராமன் வருகையைக் கண்ட அயோத்தியாபட்டணத்தவர்களாக வே ஸந்தோஷித்தார்கள்.

1898-ம்௵ நடந்த 14-வது இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கு இவரை ஸபாநாயகராகக் கோரினார்கள். இவரும் சென்னைவாசிகளின் கோரிக்கையை யங்கீகரித்து மேற்கூறிய ஸ்தானத்தை வகித்துக்கொண்டார். இதற்குமுன் பலபிரமுகர்கள் இந்த ஸ்தானத்தை வகித்தார்கள் என்பது மெய்யே. எனினும் இவரவ்வளவு சென்னைவாசிகளை மகிழ்வித்தவரும், ஆனந்தக்கண்ணீர் சொரிந்து மனமுருகச்செய்தவரும் மற்று எவருமிலர். இவரது வாயிலிருந்து பெருகும் வசனாமிர்தத்திற்கு எதுவுமே நிகரற்றது. இவரது வார்த்தைகளைப்பற்றிப் புகழ்தற்கு யாருமே அசக்தராவார்; ஆகையால் தெய்வப்புலமைக் கவிச்சக்கிரவர்த்தியாரது "செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" என்னும் வார்த்தைகளைக் கொண்டுதான் நாம் புகழவேண்டியிருக்கின்றது. இவர் உபந்நியாசங்களெல்லாம் 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது—சொல்லுதல் வல்லார்ப் பெறின்."—என்றபடி யாரும் உடனே யேற்றுச் செய்யும்படி மிகவினிமையாகவும், ஒன்றோடொன்று பொருத்தமுடையனவாய்க் கோவையாகவும், எளிதில் நெஞ்சில் தைக்கும்படி அர்த்தபுஷ்டி யுள்ளனவாகவும், தெளிவாகவும், கல்வியழகு செறிந்தனவாகவுமிருக்கும். சென்னையில் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தகாலத்தில் இவர் காலஞ்

சென்ற சிறந்த ராஜதந்திர நிபுணராகிய கிளாட்ஸ்டனைப் பற்றிச் சொன்ன அரிய விஷயங்கள் ஒருபோதும் நம் நெஞ்சத்தைவிட்டு அகலக் கூடியனவல்ல. காலஞ்சென்ற அப்பெருந் தன்மையோராகிய கிளாட்ஸ்டன்என்பவர்க்கு மதவிஷயமாக விருந்த கொள்கைகள் நமது போஸ் என்பவருக்கு அத்யந்தம் திர்ப்திகரமாகத் தோற்றியிருந்தன; ஆதலால் அவரைப்பற்றி அனுதாபத்தோடும் மனவுருக்கத்தோடும் புகழ்ந்து சொன்ன அத்யற்புதமான பிரஸங்கம் நாளைக்கும் வியப்போடு கேட்கத்தக்கதாகவே யிருக்கும். மேலும், இம்மகான் 'ஜன்ம பூமி' என்னும் விஷயமாகப் பொழிந்த பிரஸங்கமாரியானது அங்கு வந்திருந்த யாவர் மனத்தையும் ஒரேகாலத்தில் உற்சாகப்படுத்தியது. இவர் "சகோதரர்களே, இந்தியாவானது வாழுகிற ராஜ்யமாக விளங்குமா? அல்லது நாளடைவில் நசித்துப்போகிற ராஜ்யமாகத்தான் இருக்குமா?" என்று இரங்கிக் கூறிய போது எத்தனை கல்நெஞ்சமா யிருந்தாலும் பாகாய் உருகியோடியிருக்குமென்றே சொல்லலாம். உண்மையாகவே அநேகர் கண்ணீர் வடித்து அழத் தொடங்கிவிட்டார்கள்.

இப்படியாக ஆனந்த மோகன போஸ் முக்கியமான எல்லாத் துறைகளிலும் பிரவேசித்து மிக முயன்று பல விதமான அநேக நன்மைகளைச் செய்துகொண்டு வரவே இவரது தேகாரோக்கியம் நன்னிலையி லில்லாமற் கெட்டுப் போய்விட்டது. ஆகையால் இவர் வெளியில் வந்து முன் போல ஒன்றுஞ்செய்ய இயலாதவராய்ப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். இந்நிலையிலும் இவர் கடைசியாகப் புரியவேண்டிய காரியமும் ஒன்றிருந்தது. "ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை யகத்ததோ புறத்ததோ அறியேன்" என்றபடி யுயிரெல்லா மொடுங்கிப் பரலோகத்தில் ஆனந்த நிலையையே யெதிர்பார்த்துக்கொண்டிருந்த ஸர்வ

ஜன ஸமூகிர்த்தாகிய இவ் வானந்த புருஷர் தம்மை யொரு கட்டிலிற்போட்டுத் தூக்கிக்கொண்டு வரச்செய்து, பெங்காளிகள் எப்போதும் நகமுஞ் சதையும்போல ஒட்டி வாழும் ஐக்கிய புருஷர்களென்றும், வைஸிராய் இவர்களைப் பிரித்துவிட நினைக்கும் அடாத பிரயத்தனம் நிஷ்பிரயோஜனமே யென்றுந் தெரிவிக்கும்பொருட்டுக் கட்டுவதாகத் தீர்மானித்திருந்த "பெடேரேஷன் ஹால்" என்னும் கட்டடத்திற்கு அஸ்திவாரக் கல்லை நாட்டுவதற்காக வந்தார். என்ன ஊக்கம்! என்ன அன்பு! என்ன சுதேசாபிமானம்! தாய்வரக் கண்ட இளங் குழந்தைகளைப் போலத் தமது வருகையால் மனங் களித்த லக்ஷக் கணக்கான ஜனங்களைப் பார்த்து இவர் வெகு தூரம் பேச வேண்டுமென் றெழுந்திருக்க முயன்றார். ஐயோ! என் செய்வார் பாவம்! எழுந்திருக்க முடியவில்லை. இருந்தபடியே பேச முயன்றார். பேசவும் முடியவில்லை. பின்பு பிறரைக்கொண்டு தமது பேச்சைப் படிக்கும்படி செய்தார். தமது அரிய வாழ்நாட்களை யெல்லாம் பொது நன்மைக்காகப் பாடு படுதலிலேயே பயன் பெறச் செலுத்தி அசக்தியடைந்து, நோயுற்றுத், தேகம் மெலிந்து, எழவும் பேசவும் முடியாத ஸ்திதியில் குற்றுயிராய்க் கிடக்கிற இந்தத் தள்ளாத மகாபுருஷன், நம் நாட்டுக்கு ஒரு கேடு வந்துவிட்டதெனக் கேட்கத் தரியாமல் தம்மைத் தூக்கிக்கொண்டுவரச் சொல்லியாவது கட்டிலிற் கிடந்தபடியே ஆறுதலாகச் சில வார்த்தைகள் பேச முயன்றதையும், இயலாமற்போகவே மன வருத்தத்துடன் இரக்கமுற்று அமைந்ததையும் பார்க்கப்பார்க்க அங்கே கூடியிருந்த ஜனங்களுக்கு அடக்கக்கூடாதபடி இவ்வளவு தான் துக்கம் மேலிட்டிருக்கு மென்பதை நமது நேயர்களே ஊகித்தறிந்துகொள்ளக் கடவார்கள்.

இக் கருணை வள்ளலைபபற்றிக், கடைசியாக மயான பூமியில் ஸுரேந்திர நாத் பானர்ஜி, “மன்னுயிர்களி லெல்லாம் மிகச் சிறந்ததும், மிகப் பெருமை பெற்றதும், மிகப் பரிசுத்தமானதும் எதுவோ அது இங்குக்கிடக்கின் றது” என்று ஸாரமான இந்த வார்த்தைகளை நெஞ்சங் குழைந்து அங்கலாய்ப்புடன் கண்ணீர் பெருகக் கூறிக் கதறினர். இவ்விதம் யாவராலும் புகழ் படைத்த இவ ரன்றோ என்று மிருப்பவர்.

சுயநலம் பாராட்டாமல் உலகிற்கே யுழைத்து அன் பாகவும், பணிவாகவும், இரக்கமுள்ளவராகவும் தமது காலத்தைச் செலுத்திவந்த ஆனந்த மோகன போஸின் வியோகம் நம்மவர்களனைவருக்கும் பெரிய துக்கத்தையும் பெரிய நஷ்டத்தையும் உண்டுபண்ணுவ தாயிற்று. இத் தகைய தெய்வபக்தியுள்ள மிகவும் பரிசுத்தமான மஹான் கிடைப்பது எக்காலத்திலும் துர்லபமே.

வேலவன்..

வெண்பா

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா—யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுளையாயென் னுள்ளத் துறை.

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றந்
துளைத்தவே லுண்டே துணை.

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தரும்.

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சு முகந்தோன்றி லாறு முகந்தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேறோன்று—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும்.



ஸுப்ரஹ்மண்யஸ்வாமி கோயில், தஞ்சாவூர்.

सुब्रह्मण्यपञ्चरत्नम्

ओंकारनगरस्थं तं निगमान्तवनेश्वरम् ।
नित्यमेकं शिवं शान्तं वन्दे गुहमुमासुतम् ॥ १ ॥

वाचामगोचरं स्कन्दं चिदुद्यानविहारिणम् ।
गुरुमूर्तिं महेशानं वन्दे गुहमुमासुतम् ॥ २ ॥

सच्चिदानन्दरूपेशं संसारध्वान्तदीपकम् ।
सुब्रह्मण्यमनाद्यन्तं वन्दे गुहमुमासुतम् ॥ ६ ॥

स्वामिनाथं दयासिन्धुं भवाब्धेस्तारकं प्रभुम् ।
निष्कलङ्कं गुणातीतं वन्दे गुहमुमासुतम् ॥ ४ ॥

निराकारं निराधारं निर्विकारं निरामयम् ।
निर्द्वन्द्वञ्च निरालम्बं वन्दे गुहमुमासुतम् ॥ ५ ॥

ஓர் குழந்தையும் ஓர் மஹானும்.

முன்னொரு காலத்தில் எல்லா வேதங்களிலும் நன்கு தேர்ச்சி யடைந்த மஹரிஷி ஒருவர் இருந்தார். அவருக்குப் பகவானைப் பரிபூரணமாக அறியவேண்டுமென்னுமவா மிகவும் மேலிட்டிருந்தது. அவ்வவாவை வேதங்களினாலாவது சாஸ்திரங்களினாலாவது திருப்தி செய்து கொள்ள முடியவில்லை. அவைகளினால் ஒரு வித உதவியுமில்லாமலிருந்தது. ஆதலால் அவர் மனுஷ்ய ஸஞ்சாரமே யில்லாத வெகு தூரத்திலுள்ள தனிமையான ஓரிடத்திற்குப் போய் அங்கு ஓர் ஆசிரமத்தைக் கட்டி அதிலிருந்து கொண்டு பகவானைப் பற்றிய பரிபூரணமான அனுபவ ஞானத்தை அடைவதிலேயே ஊக்கமாயிருந்தார். இவரது ஆசிரமம் கடற்கரைக்குச் சற்றுத் தூரத்திலிருந்ததால், கடல் மிகவுங் கொந்தளிப் பாயிருந்தாலல்லது அலை வீசு மோசை இவர் காதிற்படாமலிருந்தது. நாலு பக்கமும் எங்குப்பார்த்தாலும், சாந்தமும் அமரிக்கையுமாகவிருந்தன. இத்தகைய அமைதியான இடத்தில் ராகத்துவேஷாதிகளை ஜயித்த இம்மஹான் இராப்பகலாகத் தமது மனத்திலுள்ள ஒரே அபீஷ்டத்தையே நிறைவேற்றிக் கொள்ள யத்தனித்தார். ஆனால் நாட்களும் மாதங்களுங் கழிந்தனவே யொழிய இவர் பகவானைப்பற்றி யொன்றுந் தெரிந்து கொள்ள வில்லை. வருஷங்களும் ஒன்றன்பின் னொன்றாய்ச் சென்றன. இந்த விடா முயர்சியும் ஊக்கமுமுள்ள சந்நியாசியோ, பூர்வ ஸ்திதிக்கு ஹானி

யின்றியிருந்தார். இவர் யௌவனமெல்லாம்போய் ரோமங்களும் வெளுக்க வாரம்பித்தன. இன்னும் இவரது ஞானம் முன்போல வேதானிருந்தது. ஒருநாள் இவர் மிகவருத்தத்துடன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு ஸமுத்திரக்கரையினோரமாக உலாவிக்கொண்டிருந்தார். தமது பிரயத்தனங்களெல்லாம் வியர்த்தமாய்ப் போய் விட்டபடியால் இனிப் பிரயத்தனப் படாமலே யிருந்து விடலாமாவென்றும் ஆலோசித்தார்.

அச்சமயத்தில் அவர் முன்பாகச் சற்றுத் தூரத்துக்கப்பால் ஒரு சிறுபையன் ஜலத்தினோரமாக ஏதோ நிரம்ப வேலையாயிருப்பவனாக அவருக்குத் தென்பட்டான். அவன் ஒரு செம்படவன் குழந்தையாயிருக்க வேண்டுமென்றும், தகப்பன் கட்டுமரமேறிக் கடலில் மீன் பிடிக்கப்போன பொழுது குழந்தையைக் கரையில் விட்டுப் போயிருக்கவேண்டு மென்றும், இருந்த போதிலும் இச்சிறு குழந்தையை இக்கடற் கரையில் பார்த்தும் தனியே விட்டுச் செல்வது சரியல்லவென்றும், எண்ணிக்கொண்டு அக்குழந்தையினருகிற் சென்றார்.

அக்குழந்தையோ வெனில் அவரது வரவைச் சற்றேனும் கவனியாமல் தனது சிறியகைகளாற் சமுத்திரத்திலுள்ள ஜலத்தை வெகு பரபரப்புடனெடுத்து மணலிலெறிந்து கொண்டிருந்தது. இக்காரியத்தைக் கொஞ்சங்கூட இடைவிடாமல் மிகவும் சுறுசுறுப்பாக அக்குழந்தை செய்தது.

இப்புதுமையான காட்சியைக் கண்டதும், அம்மஹானுக்குண்டான ஆவலுக்கோ எல்லையில்லை. உடனே அவர் அக்குழந்தையைப் பார்த்து "நீ யாரப்பா? எதற்காக இந்தஜலத்தை யிம்மாதிரி யிறைக்கிறாய்? உன் தகப்பனுரெங்கே போயிருக்கிறார்?" என்று இவ்வாறாகப் பலகேள்விகள் கேட்டார். இவை யொன்றுக்காவது அக்குழந்தைக்குப் பதிற்சொல்ல சாவகாசமில்லை. அந்தச் சிறிய அழகிய குழந்தையானது நிஷ்பிரயோஜனமான காரியத்தில் அவ்வளவு ஊக்கத்துடனிருந்தது. கடைசியில் அந்த மஹான் தமது கேள்விகளால் அக்குழந்தையை மிகவும் தொந்தரை செய்த பொழுது அக்குழந்தையும் ஸகிக்கமுடியாமல் அவரை ஒரே தடவையில் அடக்க வெண்ணிப் பின் வருமாறு பதிற் சொல்லிற்று:— ஐயா

16.2006

எனக்கு உங்களோடு பேசுவதற்குச் சாவகாசமில்லை. நான் இந்த ஸமுத்திரத்தின் இவ்வளவு ஜலத்தையுமிறைத்து இதை வற்றடிக்க வேண்டுமென்பதுங்களுக்குத் தெரியவில்லையா." இதைக் கேட்டதும் அம்மஹரிஷிக் குண்டான ஆச்சரியத்திற் கோர் அளவில்லை. "அடே சிறு பயலே, உனக்கென்ன பயித்தியமா? கரையில்லாத இந்தச் சமுத்திரத்தை முழுமையும் வற்றடிக்க வேண்டுகிறாயே. இவ்வுலகத்திலுள்ள ஸமஸ்த ஜீவப்பிராணிகளும் ஒருங்கு சேர்ந்தாலும் இக்காரியத்தைச் செய்ய கொஞ்சமும் யத்தனிக்க மாட்டார்களே" என்று சொன்னார். அதற்கு அந்த கந்தருவன் போன்ற அழகிய குழந்தை ஓர் விஷமப்பார்வையுடன், "ஏனையா, பகவானுடைய எல்லையில்லாத மஹிமையை யறிந்தனுபவிப்பது உமக்கு ஸாத்தியமாயிருக்கும் போது, இந்த எல்லையுள்ள ஸமுத்திரத்தை வற்றடித்து அதிலொளிந்து கிடக்கின்ற வஸ்துக்களை யறிவது எனக்கு அஸாத்தியமா?" என்று சொல்லிக்கொண்டே. எதிரில் நின்ற அக்குழந்தை திடீரென அந்தர்த்தான மாகிவிட்டது.

ஆனால் அதனுடைய இனிமையான வார்த்தைகள் அவருடைய ஹிருதயத்தில் நன்கு பதிந்து, செவிகளிலெப்போதும் ஒலித்துக் கொண்டு அவருக்கு வாசாமகோசரமான ஆனந்தத்தை உண்டாக்கின. அன்று முதல் அவர் தமது விருதாவான நடத்தைகளையெல்லாம் நிறுத்திப் பகவானை அறிய விரும்பாமல் பகவானிடம் பக்தியுடனிருந்தார். பின்பு அவர் பெரிய பக்தராய் தாமபேக்ஷித்துக் கதறும் பொழுதெல்லாம் அக்குழந்தை தமக்கு முன்னிலையிற் பிரஸன்னமாகிக் குதித்து விளையாடி மிகவுமினிமையான மழலைச் சொற்களால் தம்மை சந்தோஷப் படுத்தியதால் அதைக் கண்டு "நீதான் என்னுடைய தெய்வம். என் கண்ணே! நான் உன்னைக் கடைசியாகக் கண்டுபிடித்து விட்டேன்" என்று கதறிக் கொண்டு ப்ரஹ்மானந்தத்தை யனுபவித்தார்.

புத்தக வரவு.

வால்மீகிராமாயணக் கிளைக்கதைகள்:—இவ் வசன நூல் சென்னை ஸெண்ட் தோம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் தி. வேங்கடராம ஐயங்கார் இயற்றியது. இவரை நமது நேயர்கள் நன்றாக அறிவார்கள். இதில் பாலகாண்ட அயோத்தியாகாண்டக் கிளைக்கதைகள் மட்டுங் கூறப்பட்டிருக்கின்றன. மற்றைக் காண்டத்துக் கிளைக்கதைகளும் சீக்கிரத்தில் வெளிவருமென்று எதிர் பார்க்கின்றோம். வால்மீகிராமாயணக் கிளைக்கதைகள் எனப் பெயரிடப்பட்டிருப்பினும் கம்பராமாயணப் பாக்களையே பெரும்பாலும் தழுவிப் போகின்றனர். கூடியவரையில் இனிய செந்தமிழ் நடையிலமைந்துள்ளது. சிவபிரான் நெற்றிக்கண்ணைக்கொண்டு திரிபுரத்தை யெரித்தாரென்பதும், விசுவாமித்திர முனிவர் பலை அதிபலை யென்னு மந்திரங்களை ஸ்ரீராமனுக்கு மட்டும் உபதேசித்தா ரென்பதும் இன்னும் இவைபோன்ற சில விஷயங்களும் அங்கங்கே மாறுபடக் காண்கின்றோம். இதில் சிற்சிலவிடங்களில் காணப்படும் சொற்பிழைகளை யாசிரியர் கவனித்து அடுத்த பதிப்பிற் களைந்து விடுவாராக. இந்நூல் மிக்க எளிய நடையிலெழுதப்பட்டிருப்பதால் பெண்பாலார்க்கு மிகவும் பயன் படுமென்று நம்புகின்றோம். கிரௌன் 16-பக்கங்கொண்ட பாரத்தில் 140 பக்கங்களுள்ள இந்நூல் சென்னை ஸ்ரீநிவாசவரதாசாரியார் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. விலையணா எட்டு.

*
* *

பிர்ம்மஞான பத்திரிகை:—இப்பத்திரிகையின் 4-வது சஞ்சிகை வரப்பெற்றோம். முதல் மூன்று சஞ்சிகைகளும்

கையிலெடுக்கவும் யோக்கியமில்லாமல் அத்தனை சீர் கேடாக அச்சிடப்பட்டிருந்தமையின் யாம் அவற்றைப் படித்திலோம். இச்சஞ்சிகை ஒருவாறு பார்க்கக் கூடிய மாதிரியாக அச்சு நன்றாக இருக்கிறது. உள்ளுறையான விஷயங்களோ, சொற்குற்றங்கள், இலக்கணக்குற்றங்கள், பொருட்குற்றங்கள், முதலியன நிரம்பி இருக்கின்றன. சமாசாரப் பத்திரிகையாயின் யாம் இவற்றைப் பொருட்படுத்தோம். முக்கியமான மதவிஷயத்தைப் பற்றிய தாகக் காணப்படுதலின் நன்கு ஆராய்தல் ஆரியராகிய நமக்கு இன்றியமையாக் கடமையாயிற்று. முற்கூறிய பிழைகட்கு ஒவ்வொரு பக்கமும் இடமாகுமென்பது ஒரு முறை மேலாகப் பார்ப்பவர்கட்கும் நன்கு விளங்கும். விஷயதானஞ் செய்தவர்களில் பலர் தக்கவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகவே பிழை பத்திராசிரியரின் கவனக்குறைவென்றே சொல்லுதல் பொருந்தும். சுருங்கச் சொல்லின் வடமொழியில் நன்கு பயின்ற பெரியோர்களே மதவிஷயமான பத்திரிகைகளை வெளியிடற் குரியராவர் என்பது நம் அபிப்பிராயம்.

*
* *

சற்குணதீபன்:—இக்கதை பி. மணமங்களரவர்களால் இயற்றப்பட்டதெனத் தெரிகிறது. சங்கடந்தீர்த்த சதுரன் கதையென மற்றோர் பெயருமுடைய இச்சிறிய நூல் இனிய நடையில் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் நட்பைப்பற்றிக் கூறிய பாகம் நன்றாக இருக்கிறது. மற்றும் சிற்சில பகுதிகள் இடையிடையே யழகாகக் காணப்படுகின்றன. இதன் விலை அணா 8. காகிதமும் அச்சும் திர்ப்திகரமாக இருக்கவில்லை. இது பொதுவாகத் தமிழ்ப் புத்தகங்கட்கே யேற்பட்ட இலக்ஷணம்போலும்.

*
* *



கடைசியாக கீழ பெங்காளத்து லெப்டினண்டு கவர்னராகிய ஸர். பி. புல்லர் தமது வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டு மிக்க மன வருத்தத்துடன் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். இதனால் பெங்காளப் பிரிவினையைப்பற்றிய அமளி அடங்கிவிடுமென்று நாம் கருதக் கூடாது. ஏனெனில் புல்லர் கீழ பெங்காளத்தில் நடத்திவந்த அநீதிகளால் அவரிடத்தில் ஜனங்களுக்கு வெறுப்புண்டாயிற்றேயன்றி பெங்காளப் பிரிவினைக்கும் அவருக்கும் யாதொரு ஸம்பந்தமுமேயில்லை. ஆதலால், பெங்காளத்திலுள்ளவர்கள் மேற்படி பிரிவினையை ரத்து செய்ய வேண்டுமென்று அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை ஓயாமற் செய்துவருவார்களென்பது நமது துணிபு. இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மார்லி பிரிவினை 'தீர்ந்துபோன விஷயம்' என்று பார்லிமெண்டு மஹாஸபையில் எவ்வளவுதான் சொல்லிய போதிலும் இங்கு அது வாஸ்தவத்தில் தீர்ந்துபோன விஷயமாகத்

தோற்றவில்லை. மிஸ்டர் மார்லியினுடைய முந்திய சரித்திரத்தையும் அவருடைய பழக்கங்களையும், புத்தகங்களையும் நன்கு அறிந்த நமக்கு அவர் இதுகாறும் இது விஷயத்தில் சும்மா இருப்பது மிகவும் ஆச்சரியமாகவேயிருக்கிறது; என்றாலும், இவ்விஷயத்தை அவருக்குத் தெளிவுற எடுத்துச்சொன்னால் அவர் உடனே இதைச் சீர்திருத்துவார் என்கிறமட்டில் நிச்சயமே. இங்கிலாந்துக்குச் சென்ற நமது தலைவர்களான கோகலே, டட் முதலியவர்கள் அவருக்கு இவ்விஷய முழுமையும் நன்றாகச்சொல்லியிருப்பார்களென்பதில் தடையில்லை.

ஸ்ர். பி. புல்லர் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுப்போன காட்சி மிகவும் பரிதபிக்கத் தக்கதாகவே யிருந்தது. அவரைப் பம்பாய்த் துறைமுகத்தில் வழியனுப்புவதற்காக வந்திருந்த சில மகமதியர்களை நோக்கி அவர், "இது அழுவதற்கேற்ற காலம்; இது ஒரு துக்ககரமான சமயம்". என்று சொன்னதாகக் கேட்கும்பொழுது மிக்க வருத்தமாக இருக்கிறது. இந்தியாவில் ஓரிடத்திலாவது இவருக்காக அனுதாபப்படவில்லை. சில மகமதியர்கள் மட்டில் இவரது பிரிவை யாற்றமாட்டாமல் மிகவும் வருத்தப்பட்டு ஸபைகள் கூடி கவர்ண்மெண்டுக்குத் தந்திமுதலியவைகள் கொடுத்ததாக அவ்விஷயத்தை மிகப் பெரிதாக்கிச் சில இங்கிலீஷ் பத்திரிகைகள் மிகவும் பிரமாதப்படுத்தியது வாசிப்பதற்கு வெகு வேடிக்கையாக இருந்தது. இச் சமயத்தில் இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் சண்டையுண்டாக்கிவிட வேண்டுமென்று பலர் பிரயத்தனப்படுகிறார்கள். ஆனால், இரு திறத்தாருள்ளும் முதன்மையானவர்கள் ஒருவரையொருவர் நன்கறிந்திருத்தலால் இவ்விந்தியா இருவருக்கும் பொதுவான சுதேசமென்பதையும், இருவரும் ஒருங்கு சேர்ந்து ஸகோதர

பாவத்துட னுழைத்தால்தான் தேசத்திற்கு நன்மையுண் டென்பதையுந் தத்தமக்குச் சேர்ந்தவர்களுக்கு நன்குப தேசித்து முன்னிலுமதிகமாக ஒத்து வாழும்படி செய் வார்களென்பதே நமது கோரிக்கை.

ஃ ஃ ஃ

மிஸ்டர் கோகலே இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்து விட்டார். இவர் அவ்விடத்தில் நமது தேசத்திற்காகச் செய்திருக்குமுதவி பலவென்றும் அவைகள் காலக்கிரமத் தில் வெளிவருமென்றுந் தெரியவருகிறது. ஸர். வில்லி யம் வெட்டர்பர்ன் முதலியவர்கள் இவர் செய்துவந்த வேலையைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசுகிறார்கள். இவர் மிஸ்டர் மார்லியுடன் பல ஸமயங்களில் தனித்துப் பேசிக் கொண்டிருந்ததாகவும் அச்சமயங்களில் நமது தேசத் தைப்பற்றிய பல விஷயங்களை அவருக்குத் தெரிவித்ததா கவுங் கேட்க மிகவும் ஸந்தோஷிக்கிறோம். மிஸ்டர் மார்லி தமது ஸபையில் இவரை ஓரங்கத்தினராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு இவர் தம்மைவிட மிஸ்டர் டட் மிகுதியுந் தகுதியானவரென்று சொன்னதாகவும் ஒரு வதந்தி. அது உண்மையாக இருக்கவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை. மிஸ்டர் கிளாட்ஸ்டனுடைய சிஷ்யரான மிஸ்டர் மார்லியினுடைய் நாளில்தான் இந்தியாஸபையில் ஓர் இந்தியர் முதல்முதல் அங்கத்தினராக வேண்டும்.

ஃ ஃ ஃ

ருஷியாவின் தற்கால நிலைமையை வர்ணிப்பதற்கு நமது பாஷையில் சரியான வார்த்தைகள் கிடைக்கவில்லை. புத்தியும், பூததயையும் அவ்விட முள்ளவர்க ளிடத்தி லிருந்து விடை பெற்றுக்கொண்டு போய்விட்டனபோல் தோன்றுகின்றன. அத்தேசத்தில் பயமேதான் இப்போது அரசாளுகிறது. அங்குள்ள பயத்துக்கும், குழப்பத்திற்

கும் ஸமானமாக வேறொன்றையும் சரித்திரத்திலிருந்து கூட எடுத்துரைக்க முடியாது. அரசனாகிய ஸார் (Czar) இருக்குமிடந் தெரியவில்லை. எங்குப்பார்த்தாலும் குத்துங் கொலையுமாகத்தா னிருக்கிறது. பிரதிதினமும் வருந் தந்திகள் ஒவ்வொன்றும் புதிது புதிதாகக் குழப்ப சமாசாரத்தைக் கொண்டுவருகின்றனவே யல்லாது ஒழியும் மார்க்கத்தைக் காணோம். இதன்முடிவு என்ன ஆகுமோ தெரியவில்லை. ஒன்று மட்டில் நிச்சயம். அங்குள்ள ராஜாங்கத்திலோ அல்லது ஜனங்களுக்குள்ளோ தகுந்த தலைவர்க ளில்லை. தன்னைத்தானே பிரமுகனாகச் சொல்லி கொள்ளும் ஒவ்வொருவனும் மனுஷ்யரூபமான மிருகந் தானென்பதில் தடையில்லை. அவ்விடத்தி லிப்பொழுதுள்ள குழப்பமும் ரத்தக்களரியும் நமது புராணத்தில் கூறப்பட்டிருக்கும் நரகத்தி லுளவோ என்பது நமக்கு ஸந்தேகம். ஐரோப்பாவி லுள்ள மற்றைய தேசத்தரசர்களாவது இதிற் பிரவேசித்துச் சீர்ப்படுத்தினார்களே யானால் மேல்நாட்டு நாகரிகத்திற்கு நன்றாயிருக்கும். அன்றேல் மேல்நாட்டு நாகரிகத்தின் பெருமை வீண் பெருமையே.

* * *

இச்சஞ்சிகையின் மற்றொரு இடத்தில் ஆனந்த மோஹன போஸைப்பற்றி விஸ்தாரமாக எழுதியிருக்கிறோம். இம் மகானுபாவனைப்பற்றி எத்தனை யெழுதினாலுந் தகும். இவர் பல துறைகளிலுமிறங்கி நமக்காக வெகு பாடுபட்டிருக்கிறார். ஒவ்வொன்றையும் விரித்துச் சொல்வதானால் மிகவும் பெருகும். இவரது மஹிமையைக் கொஞ்சமேனும் அறிய விரும்புமவர்கள் இவர் செய்திருக்கும் பிரசங்கங்களில் ஒன்றையாவது வாசிக்கவேண்டும். அதைத் தமிழில் மொழிபெயர்த்துப் போடுவது அஸாத்தியம்.



குண்டுணி குப்புசாஸ்திரிகள்.

சதுர்வேத மங்கலம் என்னும் ஒரு கிராமத்தில் வெகுநாளைக்கு முன் குப்பு சாஸ்திரி யென்பதாக ஒருவர் இருந்தார். இவர் நன்றாக வேதாத்தியயனம் பண்ணினவர். காவியம் சாஸ்திரம் ஒன்றும் படித்ததில்லை. இவர் இந்த அத்தியயனப் படிப்பை வைத்துக்கொண்டு எல்லாந் தெரிந்தவராக நடித்துக் குருட்டுப்பாடம் செய்திருந்த இரண்டொரு சுலோகங்களைச் சொல்லிக்கொண்டு ஸகலகலாவல்லவராக வழங்கிவந்தார். கட்டுக்கட்டாகப் போடும் விபூதியையும் ருத்திராக்ஷ மாலையையுங் கண்டால் யாருமே மலைத்துவிடுவார்கள். முக்கியமாய் வீட்டிலுள்ள பெண்டுகளுக்கு இவரிடத்தில் நல்ல வைதிகரென்று தேவதா விசுவாசம். இவரைத் தவிர வேறு எவரையும் பிராமணார்த்தம் சொல்லமாட்டார்கள். இவரும் தம்மை யாராவது நிமந்திரணத்திற்குச் சொல்லிவிட்டால் காலையிலேயே அவர்கள் வீட்டுக்குப் போய்க் கடைக்குப் போக வேண்டிய வரவேண்டிய காரியங்களை யெல்லாம் பார்த்துவருவார். சுருங்கச் சொல்லின் சதுர்வேத மங்கலத்தில் குப்பு சாஸ்திரி யில்லாமல் ஒரு வைதிக காரியமும் நடவாது. சாஸ்திரிகளும் பிரா

மணார்த்தம் சாப்பிட்டும், ஜோதிஷஞ் சொல்லியும், கலியாணத் தாகு செய்தும், ஈட்டுக்குப் பணங்கொடுத்தும், தானங்கள் வாங்கியும் இப்படியாகப் பல வழியாலும் நிரம்பப் பணம் ஸம்பாதித்து விட்டார். இவருக்குப் பணம் சேர்ந்ததற்கு முக்கியமான மற்றொரு காரணமுமுண்டு. அது என்னவென்றால், அவ்வூரில் ஒரு பெரிய மனுஷியாள் வீட்டுப் பையன் ஒரு பூனைக்குட்டியைத் தெரியாத்தனமாகக் கொன்றுவிட்டான். அதைக்கண்டு இந்தக் குண்டுணிக் குப்பு சாஸ்திரி (இவர் அங்கே நடந்ததை யிங்கே சொல்லி இங்கே நடந்ததை யங்கேசொல்லிக்கலகம் உண்டுபண்ணி வந்ததால் குண்டுணிக் குப்பு சாஸ்திரி யென்று சொல்வது வழக்கம்.) பெரிய கலகத்தை யுண்டுபண்ணி ஸ்வர்ணத்தினு லொரு பூனை பண்ணித் தானம் பண்ணினாலல்லாமல் தோஷம் போகா தென்று சாதித்தார். பெரிய மனுஷ்யரா யிருப்பதாலும், ஊரார் கலகம் பண்ணினதாலும், சாஸ்திரியிடத்தில் நம்பிக்கை யிருந்தாலும் அப்படியே தங்கத்தாற் பூனை பண்ணி இந்தக் குப்பு சாஸ்திரிக்கே தானம் பண்ணினர். இதைப் பார்த்தார் சாஸ்திரியார். இது நல்ல வழியா யிருக்கிறதப்பா. பதினைந்து நாழிகை வரையிலும் பட்டினி கிடந்து இராச்சோறு மில்லாமல் பிராமணார்த்தஞ் சாப்பிட்டுக் கால் ரூபாய் சம்பாதிப்பதிலும் இந்த மாதிரி 5 வருஷத்திற்கு ஒரு தானம் வந்தாற் போதுமேயென்று தூராலோசனை பண்ணினர். உருசி கண்டவர் விட்டுவிடுவாரா? அன்று முதல் அவன் அதைப் பண்ணினன் இவன் இதைப் பண்ணினன் என்று கலகத்தை மூட்டிவிட்டுப் பிராயச்சித்தம் பண்ணும்படி யடித்துப் பணம் பறித்துவந்தார். ஒரு நாளாவது சதுர்வேத மங்கலத்தில் பிராயச்சித்தம் நடக்காத நாளே கிடையாது. சாஸ்திரியும் பந்தகத்தின்பேரில் பணங் கொடுத்து நாணயஞ் செய்யத் தலைப்பட்டு விட்டார்.

இப்படியிருக்க ஒரு நாள் சாஸ்திரியின், ஒரே குமாரனான சுப்பு என்பவனும் இன்னும் நான்கு சிறு பையன்களுமாய் ஊருக்கு வெளியே விளையாடப் போய் அங்கே ஒரு நாயைப்பிடித்துக் கட்டி அதன் பாலைக் கறந்து சாப்பிட்டுவிட்டார்கள். இந்தச் சங்கதி யெப்படியோ ஹரிஹர ஐயருக்கு எட்டிவிட்டது. இவரோ மகா புத்திசாலி. குப்பு சாஸ்திரிகளைக் கண்டால் வெட்டிப் போட

வேண்டுமென்று வெகு நாளாகவே கறுவிக்கொண்டிருந்தார். சமயம் வாய்த்தபடியால் இன்னும் ஐந்தாறு தகுந்த மனுஷ்யாளையும் அழைத்துக் கொண்டு சாஸ்திரிக ளிருக்குமிடத்திற்குப் போய், "சாஸ்திரிகளே! சாஸ்திரிகளே! ஒரு பெரிய அக்கிரம மல்லவா நடந்துபோய்விட்டது. பண்ணை இராமையர் கடைசிப் பையன் கிட்டுவும் இன்னும் இரண்டொருவனுஞ் சேர்ந்து நாய்ப்பாலைக் குடித்துவிட்டார்களாம். இதெற்கென்ன செய்யலாம். தாங்கள் தாம் ஒரு விதாயம் செய்யவேண்டும்" என்றார். இதைக் கேட்டதும் குப்பு சாஸ்திரிக்குண்டான ஆனந்தத்திற்கு ஓர் அளவில்லை. இராமையரோ 10 லக்ஷத்துக்குள்ளவர். தகுந்த புள்ளி. இந்த ஸமயம் நல்ல போடாகப் போட்டால் நன்றாகக் கறக்கலாமென்று எண்ணினர். மனத்திற்குள்ளேயே பணம் வந்தால் அதை நிலம் வாங்கலாமா? வட்டிக்கு வெளியில் விட்டுவைக்கலாமா? அப்படிக் கொடுப்பதானால் யாரிடம் கொடுக்கலாம் என்று இப்படி நீள யோஜித்துவிட்டார். சற்றுநேரங் கழித்து 'நான் என்னத்தைச் சொல்லுவேன். சொல்லுகிறதற்கு மனம் வரவில்லையே. இப்படியும் பயல்களுண்டா? குழந்தைகளா லக்ஷணமா இல்லாமல் இப்படியெல்லாம் அநர்த்தத்தை விளைத்துவிட்டார்களே. குழந்தைகளோடு போகிற காரியமாகவா இருக்கிறது. ராமையர் நல்ல பிராணி. தர்மாத்மா. அவர் ஞானமென்ன? அனுஷ்டானமென்ன? ஒரு நாள் பிராத ஸ்நானந் தப்பி யிருப்பாரா? ஒரு வேளை பூஜை தவறினதுண்டா? அவருக்கு இப்படிப்பட்ட பிள்ளை பிறக்க வேண்டாம். பையனும் அப்படிப் போகமாட்டானே—ஏதோ, இல்லையா, இருக்கிற பையன்கள் கெடுத்துவிட்டாப்போ லிருக்கிறது. என்ன செய்யலாம்." என்று வெகுவாய்த் துக்கித்தவர்போலபிநயித்துப் பிரமாதம் வந்துவிட்டதாகத் தோற்றும்படி உபந்யசித்தார். இதைக் கேட்டதும் ஹரிஹர ஐயர் "இல்லை சாஸ்திரிகளே அப்படிச் சொல்லக்கூடாது. பெரிய மனுஷ்யாள் காரியம் வீணாக ஒரு பையனைக் கெடுத்துவிடலாமா? எப்படியாவது வழிவிடத்தான் வேண்டும்" என்றார். சாஸ்திரிகள்,—"நான் என்ன செய்யலாம்? ரிஷிகளுக்கு வேலை யில்லையோ என்னவோ, எட்டையெழுதிக் கோத்துவிட்டார்கள். அவர்களுக்கென்ன கேடு. ஸம்ஸாரிகளுக்கல்லவா அந்த வருத்தந் தெரியும். சொன்னபடி நடக்

கிறதென்றால் யாரால்தான் முடியும்? என்ன சொல்லி யென்ன, அப்படித்தானே நடக்கவேண்டி யிருக்கிறது." ஹரிஹர ஐயர்,—"என்ன சாஸ்திரிகளே இழுக்கிறீர்கள்; ஏதாவது பளிச்சென்று பரி காரத்தைச் சொல்லுங்கள். வெளிக்கு வருவதற்கு முந்தி ஆச்சு என்று ஒன்றைப் பங்கிடு பண்ணிவிடலாம்."

சாஸ்திரிகள்:—"என்ன! தாங்கள்கூட இப்படிச்சொல்லுகிறீர்களே இதென்ன சாஸ்திரமா விளையாட்டா?"

ஹரிஹரையர்:—"என்னசெய்யவேண்டுமோ அதைச்சொல்லுங்கள் செய்துவிடுகிறோம்."

சாஸ்திரிகள்:—"அதைத்தான் இத்தனை நாழிகையாக யோஜிக் கிறேன். எப்படிச் சொல்லுகிறது என்று மனங் கிடந்து குழம்புகிறது. பெரிய மனுஷ்யா ளாச்சே, என்ன பண்ண லாம். ஒன்றுந் தோன்றவில்லையே. இருக்கட்டும், இன்னும் நாலுபேர் பெரியவர்களைக் கேளுங்கள். (அவர்கள் பக்கத்தில் போகமாட்டார்களென்று சாஸ்திரிக்கு நன்றாகத் தெரியும்.)

ஹரிஹரையர்:—"தாங்க ளிருக்கும்போது இன்னும் யாரவன் பெரியவன்? சாக்ஷாத் சங்கரனாக விருக்கிற தாங்கள்தாம் எப்படியாவது மார்க்கம் பண்ணவேண்டும்."

சாஸ்திரிகள்:—"சொல்லுகிறேன், கோபித்துக் கொள்ளாதேயுங் கள். நான் சொன்னதாகப் பிரஸ்தாபிக்கவும் வேண்டாம். ஏதோ சாஸ்திரத்தி லிருக்கிறதைச் சொல்லுகிறேன். மற் றைப்படி நாம் என்னத்தைக் கண்டுவிட்டோம். எந்த வழி யிலே நம்முடைய பெரியவர்க ளெல்லாரும போனார்களோ அந்த வழியாகத்தான் நாமும் போகவேண்டியது. அவ்வளவு தான் நமக்குத் தெரியும். என்ன? நான் சொல்லுகிறதென்ன? சரியாக விருக்கிறதோ இல்லையோ? இல்லையென்றால் சொல் லுங்கள்; அதனாலே எனக்கொரு மனஸ்தாபமுமில்லை."

ஹரிஹரையர்:—"தாங்கள் சொல்லுகிறது, அது சரியாயில்லாமற் போகவாவது. அது எந்தக்காலத்திலே. சொல்லுங்கள், சொல்லுங்கள், நாழிகை யாகிறது. பிராமணன் இராமையர் பாவம் தவிக்கிறார். நான் போய்த்தான் சாப்பாடு. ஏதா வது மார்க்கத்தைக் காட்டுங்கள்."

சாஸ்திரிகள்:—"மார்க்கதைச் சொல்லி மண்ணாய்ப் போனேன்."

என்னத்தைச் சொல்லுகிறது. நாக்கை யறுத்துவிடும்படியாகச் சொல்லி யிருக்கிறது."

ஹரிஹரையர்:—"அப்படியா, அடா, அடா! குடி கெட்டுப்போகும் போலே யிருக்கிறதே."

சாஸ்திரிகள்:—"அந்த இழவுக்குத்தானே நான் சொல்லமாட்டேனென்று மென்று விழுங்கினேன். கட்டாயம் பண்ணவே ஈசுவரன் தலையில் பாரத்தைப் போட்டுச் சொல்லிவிட்டேன். பின்னை நானென்ன செய்யலாஞ் சொல்லுங்கள்."

ஹரிஹரையர்:—"அது போகட்டும், ஏதாவது பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள இடமிருக்கிறதா பாருங்கள்."

சாஸ்திரிகள்:—"இருக்கிறது. தெரியும். அனுஷ்டிக்கிறதென்றால் முடியாத காரியமாச்சே."

ஹரிஹரையர்:—"முடியும்முடியாது என்கிறதைப்பற்றித் தாங்கள் யோஜிக்கவேண்டாம். புலிப்பாலாக இருந்தாலுங் கொண்டு வந்து விடுகிறேன். பணங் காசுகளுக்கோ வேண்டியது இறகு முளைத்துக் கிடக்கிறது. அது கிடக்கட்டும். பிராயச்சித்தத்திற்கு வழி யிருந்தால் சரேலென்று சொல்லுங்கள்."

சாஸ்திரிகள்:—"அப்பா, நான் சொல்லுவேன். சரிதான் என்று கேட்டால்தான் நல்லதாகப் போயிற்று. 'ஏதோ சாஸ்திரி பணம் பறிக்க வழி பார்க்கிறான். வைதிகனுக்கு என்ன வேலை' யென்று சொல்ல ஆரம்பித்துவிட்டால் அதெல்லாம் நன்றாக இராதல்லவா? இருந்தாலும் கொஞ்சம் லௌகிகத்தையும் அனுசரிக்கவேண்டும். எங்கள் காலமா, மழை பெய் என்றால் பெய்யுமே. இப்போது நாலையும் யோஜித்துத் தானே சொல்லவேண்டும். என்ன? நான் சொல்லுகிறது சரிதானே?

ஹரிஹரையர்:—"அப்படி உங்களை நினைக்கிற பிராணி இந்த ஊரிலேயே யில்லை. நீங்களா நாய்ப்பாலைக் குடிக்கச் சொன்னீர்கள்? உங்களைக் கேட்டால் நீங்கள் சாஸ்திரத்தி லிருக்கிறதைச் சொல்லுகிறீர்கள். செய்தால் செய்கிறான். விட்டால் விட்டுவிட்டுப் போகிறான். உங்களுக்கென்ன எனக்கென்ன ஆகவேண்டி யிருக்கிறது? நல்லதைப் பொல்லாதை நாட்டில் சொல்லத்தான் சொல்லுவார்கள். ஊருக்கே படல்

கட்டிச் சாத்துகிறது ஸாத்தியமா என்ன? அதை விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் சொல்லுங்கள். நான் இருக்கிறேன். எது வந்தாலும் பார்த்துக்கொள்ளுகிறேன்."

சாஸ்திரிகள்:—"தாங்கள் நல்லவர்கள். தங்கள் பாட்டனார் தெரியுமோ, என்னையில்லாமல் ஒரு வைதிக காரியத்தையும் நடத்தமாட்டார். உபாகர்மத்துக்கு மட்டும் 3 ரூபா பிரயோஜனம் பண்ணி வைப்பார்கள். நல்ல மஹான். தங்களுடைய தைரியத்தின்பேரில்தான் சொல்லவேண்டும்."

ஹரிஹரையர்:—"சொல்லுங்கள், அக்கரையில்லே, வரட்டும் பார்த்துக்கொள்வோம்."

சாஸ்திரிகள்:—"தங்கத்தாலே மனுஷ்யன் போல ஒரு பிரதிமையைப் பண்ணி அதன் நாக்கை மந்திரவத்தாக அறுத்துப் பிரதிமையோடு யாராவது ஒருநல்ல பிராமணனுக்குக்கொடுத்து விடவேண்டியது. அவ்வளவுதான். பத்துப் பிர்ம்மண்ணியங்களுக்கு அன்னம் போடவேண்டியது. (எவ்வளவு பணம் வந்தாலும் சாப்பாட்டில்தான் சாஸ்திரிகளுக்குத் திருப்தி. ஏனென்றால், சாஸ்திரியாரின் மனைவி ரஸம் அன்னத்தைத் தவிர வேறொன்றையும் பண்ணாத புண்யவதி. எருமை மாட்டைத் தவிடு பிண்ணாக்குப் போட்டுச் சம்ரக்ஷிக்கவும், புல் லறுத்து வரவும், தயிர் மோர் விற்கவும், சாணி தட்டவும், முட்டை விற்கவும், கொஞ்சம் ஒழிந்தால் பெரிய மனுஷ்யாள் வீட்டு ஸ்திரீகளை நிந்திக்கவுந்தான் போது சரியாகவிருக்கும். சமையல்பண்ணச் சாவகாசமேது. செலவாகும் என்பதுங் கூடத்தான். மாட்டிலிருந்து வந்ததைக்கொண்டு எப்படியாவது ஒரு வங்கிவளை 'பண்ணிப் போட்டுக்கொள்ள வேண்டு மென்பது இந்தப் புண்யவதியின் மனோரதம்.) இதென்ன பிரமாதம்? தானே நடக்கிறது. சொல்லுங்கள். பிராயச்சித்தம் விதிக்கிறது கூடப் பாவமாம். நிரம்பத் தெரிந்தவர்கள்தாம் சொல்ல வேண்டுமாம். என்ன செய்கிறது? தாங்கள் வந்து கேட்கும்போது சொல்லாமல் தீருமா?"

ஹரிஹரையர்:—"வெள்ளியால் பண்ணினால்————"

சாஸ்திரிகள்:—"தொடப்படாது. திரவிய லோபம் பண்ணினோமோ கெட்டது காரியம். முதலாவது, இதற்குப் பிராயச்

சித்தமே கிடையாது. ராமையராச்சே, மேலும் பயல்கள் செய்த காரியமாகவு மிருக்கிறதே. எறத் தாழ இருந்தா லும் சரிக்கட்டிவிடலாமென்று சொன்னேன். குறைக்கவா வது போகவாவது. எங்காவது உண்டா? பாபந்தான் என்ன, லேசானதா? அந்தப் பாபத்தை யேற்றுக்கொள்ளு கிறதென்ன ஸாமானியமா? பாருங்கள், நேற்றைக்குத்தான் காயத்திரி முடிந்தது. தினம் லக்ஷமாக ஒரு மாதமாகப் பண்ணிக்கொண்டு வந்தேன். கிள்ளுக்கீரை வியாபாரமாகச் சொல்லிவிட்டீர்களே. அது ஒரு நாளு முடியாத காரியம்."

ஹரிஹரையர்:—"நல்லது, போய் வருகிறேன்."

சாஸ்திரிகள்:—(சிறிது தூரம் கூடவே போய்) "தங்களுக்குத் தானே, ஒரு வேளை நடப்பதாக இருந்தால், வந்து—உங்க ளுக்குச் சொல்லுவானேன், தெரியுமோ இல்லையோ?"

ஹரிஹரையர்:—"தெரியும், தெரியும், உங்களுக்குத் தான், உங் களைத் தப்பி அப்புறமும் போகுமா?"

சாஸ்திரிகள்:—(சிரித்துக்கொண்டு) "எல்லாம் உங்கள் அன்னந் தான். மறந்துவிட்டேன். யஜ்ஞோபவீதம் வேண்டுமென்று கேட்டீர்களே. ஸ்நாநம் பண்ணுங்கள், எடுத்துக்கொண்டு வருகிறேன்."

ஹரிஹரையர்:—"இன்றைக்கு வேண்டாம். காப்பி சாப்பிட்டு விட்டேன். நாளைக்குக் கொண்டுவாருங்கள்."

ஹரிஹர ஐயர் வீட்டுக்குப் போனதும், சாஸ்திரியார் இந்தச் சமாசாரத்தைத் தமது தர்ம பத்னியுடன் சொன்னால் தம்மை மிகவும் மெச்சுவதோடுகூடக் காலத்தில் கொஞ்சம் நல்லதாகச் சமைத்து, ஸ்வாமி நைவேத்தியத்திற்கென்று விலை. வெண்ணெயில் எடுத்து வைத்திருக்கும் பருத்திக்கொட்டைப் பிரமாணம் வெண் ணெய்யைக் கொட்டைப்பிரக் களவாகவாவது செய்யாளா என்று எண்ணி உள்ளே புகுந்தார். இதற்குமுன் பிராயச்சித்தம் என்றும் வெள்ளியென்றும் பொன்னென்றும் கேட்டுக் கதவின் மூலையில் வந்து பதுங்கிக் கொண்டிருந்த அம்மாள் சாஸ்திரியார் கதவைத் திடீரென்று திறந்ததில் சுவரோடுசுவராக மோதப்பட்டு, "இழவெடு த்த பிராமணா! எதற்காக உள்ளே வருகிறீர்? என்ன வைத்திருக்கி றது இங்கே? ஐயோடி! உடம்பெல்லாம் நண்டலாகிவிட்டது. உன்

பிராயத்தை அடுப்பில் வைக்க. வந்து பாரு. பிராயச்சித்தம் இனிமேல் எனக்குத்தான் பண்ணவேண்டும்" என்று திட்டத் தொடங்கினாள். சாஸ்திரியார் நடுநடுங்கி 'நான் கண்டேனா நீ கதவின் மூலையிலிருப்பதை. நான் ஸாதாரணமாகத் திறந்துகொண்டு வந்தேன். கொஞ்சம் மேலே இடித்து விட்டதுபோ லிருக்கிறது இதற்கு இந்தக் கூக்குரலா?' என்று சொல்லிவிட்டார். வந்துவிட்டதையா கோபம் அம்மாளுக்கு. "உன் கையைக் கட்டையில் வைக்க திறந்தால்தான் என்ன, இப்படியா ? பேயறைகிறது போலவா திறப்பார்கள்?' என்று கிளம்பிவிட்டாள். சாஸ்திரியாருக்கு ஒன்றும் தெரியவில்லை. இவளை யெப்படியாவது வாயடங்கச் செய்ய வேண்டுமென்று கருதி, "கோபிக்காதே, சொல்லுகிறதைக் கேள் வாசலில் யார் பார்த்துவா, ஒரு செய்தி சொல்லுகிறேன்" என்றார். "என்ன செய்தி, நான் பெண்பிறந்து குப்பு சாஸ்திரிக்கு வாழ்க்கைப்பட்டுக் கட்டத் துணி யில்லாமல் தவிக்கிறேனே, அந்தச் செய்திதானே" என்று சொல்லிக்கொண்டே வாயிற்கதவைச் சாத்தப்போனாள். "வா, வா நல்ல செய்திதான், கேளு" என்று சொல்ல, அதற்குள் அம்மாளும் வந்துவிட்டாள். "நமக்கென்னவோ நல்ல தசாகாலம் வந்துவிட்டது. இராமையர் வீட்டில் கிட்டுவுக்குப் பிராயச்சித்தம் பண்ணப்போகிறார்கள். 300 ரூபாய்க்குக் குறையாமல் பற்றலாம். தவிர சாப்பாடும் நல்லதாக 2, 3. நாளைக்குக் கிடைக்கும்" என்றார். "என்ன பிராமணா! உமக்கேன் நன்றி கெட்டுப்போகிறது? நான் இங்கே யென்ன மண்ணையா போடுகிறேன்? நல்ல சாப்பாடு நல்ல சாப்பாடு என்று நாறச் சோற்றையெல்லாம் நீட்டிப் பேசுகிறீரே. இந்த வாய் இருக்கிற மட்டில் நாம் ஒரு நாளும் உருப்படப் போகிறதில்லை. உம்மை விட்டுவிட்டு எங்கேயாவது அக்கடா என்று போயிருக்க வேண்டுகின்றேன். எனக்குக் காலம் வரவில்லை. சுப்புவுக்காகப் பார்க்கிறேன்" என்று சீறினாள். இந்தச் சண்டை சாஸ்திரியார் வீட்டில் அஸாதாரணம். பிராமணார்த்தத்தில் சேர்க் கணக்காக நெய்யை வாங்கி முதனாள் சாப்பிட்டுவிட்டு மறுநாள் அன்னசுத்திக்குக்கூட இல்லாமலிருப்பதானால் யாருக்குத்தான் பொறுக்க முடியும்? சாஸ்திரியார் கண்ணெதிரிலேயே இந்தக் குணவதி ஒவ்வொரு நாளும் வெண்ணெயை யுருக்கி 'இது புத்துருக்கு நெய் காலணா

கூடத்தான் கொடுக்கவேண்டு' மென்று சொல்லிப் பணஞ்சேர்ப் பது வழக்கம். இவருக்கு அதைப் பார்க்க வயிறெரியும். ஒரு நாள் நெய்யளக்கும்போது நாழி தவறி நெய்யெல்லாம் கொட்டிப்போய் விட்டது. அதைப் பார்த்த சாஸ்திரிகள் சும்மா இருக்கப்படாதா? "வயிற்றை பொடுக்கி வாயை பொடுக்கிச் சேர்த்தால் ஆகுமா? அது தான் கொட்டிப்போய் விட்டது" என்றார். உடனே இந்தத் தர்மபத்னி பக்கத்திலிருந்த .... கையி லெடுத்துக்கொண்டு அடித்ததாகவும் சாஸ்திரியார் அதற்காக 10 நாள் வீட்டுக்குப் போகாமல் இருந்ததாகவுங் கேள்வி. ஆகையால் நெய் மோர்ச் சண்டையும், சாப்பாட்டுச் சண்டையும் நடப்பதைப் புதிதாகக் கவ னிக்கமாட்டார்கள் அவ்வூரார். நமக்கும் அதிகமாகப் பிரஸ்தா பிக்கப் பயமா யிருக்கிறது. ஏனெனில் ஒரு நாள் குளத்தங் கரையில் இந்த அம்மாளை "கிழவர் ஆசைப்பட்டால் கொஞ்சங் கட்டித்தயிர் குத்தப்படாதா?" என்று யாரோ தெரியாத்தனமாய்க் கேட்டுவிட்டதற்கு, அப்பா! அப்பா! ஒரு மாதம் வாயோயாமல் வைதிருக்கிருள். நாம் எழுதும் செய்தி தெரிந்தால் நம்மிடத்தி லும் சண்டைக்கு வருவாள் என்று நடுக்கமுண்டாகிறது. ஆகை யால், அச்சண்டையை இம்மட்டோடு நிறுத்திக் கதையைத் தொட ருவோம். எப்படிச் சொன்னாலும் இந்தப் பிடாரி கோபிக்கிறதே யென்செய்வோமென்று மெள்ளத் தப்பித்து வெளியே போகப் பார்த்து 'அதற்காகவா சொன்னேன். இரண்டு நாள் சாப்பாடு கிட்டினல் அதுவும் லாபந்தானே என்று சொன்னேன்.। நீ என்னவோ தப்பர்த்தம் பண்ணிச் சண்டை பிடிக்க வந்துவிட் டாயே யென்று சாந்தப்படுத்தினர். "ஆம், ஊணில் மிகுவது உழ வில் மிகாது என்று சொல்வார்கள். அப்படியெல்லாங் கணக்குப் பார்த்தால்தான் முன்னுக்கு வரலாம். சாப்பிடுகிறதற் கென்ன கணக்கு? எவ்வளவு சாப்பிட்டாலுந்தான் திர்ப்தியில்லை இந்தப் பாழும் வயிற்றுக்கு. அது போகட்டும், பிராயச்சித்தச் செய்தி யென்ன?" என்றாள். மனைவிக்கு மனங்குளிர்ந்த சங்கதி தெரிந்து, இனி இவள் வாயில் அகப்பட இடங்கொடுக்கப்படாது. நம்மையே போட்டு அரைத்துக்கொண்டிருப்பாள் என்று யோஜித்து 'எல்லாம் நான் போய் விசாரித்து வரவேண்டும். வெளியிற்போனல் தெரி யும்' என்றார். "அதற்குள்ளே இங்கே யென்ன? போய்விட்டு

வாரும். சமையல் செய்து வைக்கிறேன்" என்றாள் அப்பாக்கியவதி. அப்போது மணி 12. பட்டப்பட்டினியாக நம்மை விட்டால் போதும் என்று சாஸ்திரிகளும் வெளியே வந்தார்.

சாஸ்திரியார் வெளிப்பட்டதும் ஹரிஹர ஐயரும் வந்து சேர்ந்தார்.

சாஸ்திரிகள்:—"வரவேண்டும், என்ன சொன்னார்கள் என்ன?"

ஹரிஹரையர்:—"சொன்னார், அதிலே———"

சாஸ்திரிகள்:—"குறைக்கிற பேச்சு வேண்டாம். அது முடியாத காரியம்."

ஹரிஹரையர்:—"அப்படியில்லை. இந்தப் பயல்கள்————"

சாஸ்திரிகள்:—"செய்து தான் இருப்பன். இனிமேல் மறைக்க முடியுமோ?"

ஹரிஹரையர்:—"இல்லை சாஸ்திரிகளே, இதற்கு ஒரு விதமாகப் பரிகாரம் பண்ணத்தான் வேண்டும். காரியம் இருக்கிறது. தனித்துச் சொல்லுகிறேன்."

சாஸ்திரிகள்:—"வாருங்கள், வாருங்கள் (இவர்கள் ஹரிஹர ஐயர் கேட்டுக்கொண்டபடி சாஸ்திரியாரை இறக்குவதற்காக வருகிறவர்கள்) நான் சொல்லமாட்டேன். பிராயச்சித்தம் பண்ணித்தான் தீரவேண்டும். அதுவே இரண்டாம் பக்ஷம்."

ஹரிஹரையர்:—"உங்கள் பிள்ளை செய்தால் என்ன செய்வீர்கள்? அப்படித்தான் பார்க்கவேண்டும்."

சாஸ்திரிகள்:—"என் பிள்ளை செய்தாலா, நாக்கையே யறுத்திருப்பேன். என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

ஹரிஹரையர்:—"அவனுந்தான் சாப்பிட்டானும், கேள்விப்படுகிறேன்"

சாஸ்திரிகள்:—"சாப்பிட்டிருந்தால் நாக்கை யறுக்கவேண்டியதுதான்."

ஹரிஹரையர்:—"இருந்தால், என்ன வந்தது. சாப்பிட்டான் என்றுதான் சொல்லுகிறேனே."

சாஸ்திரிகள்:—பரிஹாஸம் பண்ணுகிறீர்கள். இருக்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? வேண்டாம். சும்மா இருங்கள்."

ஹரிஹரையர்:—"அதெப்படி சும்மா யிருக்கிறது? ஆனால், உங்கள் செய்தியும் தெரியாம லிருக்கிறதென்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ?"

சாஸ்திரிகள்:—"என்ன நீங்கள் சொல்லுகிறதொன்றும் தெரி வில்லையே."

ஹரிஹரையர்:—"தெரியுமா? தெரியாமல்தான் இருக்கும். ஊரா ருக்கென்றால் அதைப்பண்ணவேண்டும், இதைப்பண்ணவேண் டும்; காவேரி ஸ்நாநம், கங்கா ஸ்நாநம். என்னடா அப்பா, இப்படியும் பேராசை யுண்டா?"

சாஸ்திரிகள்:—"அதிக வார்த்தைவேண்டாம்; சுப்பு சாப்பிட் டானா? உங்களுக்குத் தெரியுமா?

ஹரிஹரையர்:—"சாப்பிட்டான், சாப்பிட்டான், சாப்பிட்டான். எனக்குத் தெரியும், தெரியும், தெரியும். போதுமா? துணி யைப்போட்டுத் தாண்டச் சொல்லுவீர்களோ? வேண்டுமானா லும் அப்படியே செய்கிறேன்."

இதைக் கேட்டதும் சாஸ்திரியாருக்கு ஆட்டங் கண்டுவிட் டது. எழுந்திருந்து மெள்ளக் கதவைத்திறந்தார். (மூலையில் தர்ம பத்தினி யிருப்பாளோ என்கிற பயம்) உள்ளே போனார். அடியே! அடியே! சுப்புவைக் கண்டையோ? என்று கேட்டார். மெள்ளப் பேசும், தொண்டையைக் காட்டவேண்டாம். எல்லாங் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இரண்டுங் கெட்டான் குழந்தை தானே, சாப்பிட்டிருப்பன். இதற்குக் கேள்வியென்ன வந்தது?" என்று பாய்ந்தாள் பத்தினி. "இருக்கட்டுமே அந்தப் பயலையுங் கண்டு கேட்போமே" என்றார் சாஸ்திரிகள். அந்த மகராஜி, "காணவும் வேண்டாம், கேட்கவும் வேண்டாம். நிஜந்தானும். கேட்டாச்சு. குழந்தைகளெல்லாம் அப்படித்தா னிருக்கும்" என் றாள். சாஸ்திரியார் திரும்பிவந்து "பயலைக் காணேன். வந்ததுங் கேட்கிறேன். கேட்பானேன். நீங்கள் சொன்னால் போதாதா. பொய்யையா சொல்லப் போகிறீர்கள். பிராயச்சித்தம் பண்ணி விட வேண்டியதுதான். எதற்கும் நான் போய் உபய வேதாந்த புரம் ஐயங்காரையும் கேட்டுக்கொண்டு வருகிறேன். தெரியுமோ இல்லையோ, சாமி ஐயங்காரை. நல்ல பிரவசித்தர். தர்ம சாஸ் திரத்தில் அவருக் கீடு கிடையாது. இப்படிப்பட்ட விஷயங்களில் தெளிவாய்ச் சொல்லுவர்" என்று சொல்லிவிட்டு, "சரிதான், கேட்டால் சொல்ல வேண்டுமே. நாய் என்ன நிறமோ? எப் போது சாப்பிட்டானோ? எல்லாந்தெரிந்தால் நல்லது."

ஹரிஹரையர்:—"நாய் கறுப்பாம், நேற்று ஞாயிற்றுக் கிழமை சாப்பிட்டானும். சுள்ளியைப்போட்டு எரித்துக் காய்ச்சித் தான் குடித்தானும்."

சாஸ்திரிகள்:—"நல்லது நான் போய்க் கேட்டுவருகிறேன். சாயங்காலமே வந்துவிடுகிறேன். நாழிகை யானல் அப்புறம் முன்னிருட்டு. நீங்களும் போய் வாருங்கள். பத்துப்பேர் சொல்லுகிறது நமக்குஞ் சரிதான்."

சரிதான் என்று ஒப்புக்கொண்டு எல்லாரும் போய்விட்டார்கள். சாஸ்திரியாரும் உபய வேதாந்த புரத்தில் வட்டிப் பணம் வாங்கவேண்டு மென்பதையும் வைத்துக்கொண்டு புறப்பட்டுப் போய் சாயங்காலமாகத் திரும்பி வந்தார். ஹரிஹர ஐயர் அதி வேகமாகப் போய் 'என்ன சொன்னர் ஐயங்கார்?' என்று கேட்டார். சாஸ்திரியார், "ஒன்றும் விசேஷமில்லை. வசனம் வாங்கி வந்திருக்கிறேன்' என்று ஒரு ஓலைத் துண்டைக் கையிற் கொடுத்தார். அதை எல்லாரும் வாங்கிப் படித்தார்கள். அதில் அடியிற் கண்ட வசனம் எழுதி யிருந்தது.

ஹாநவாரோ யதி ஸ்வாவ
ஸ்ராத்தஃ ஸஞ்ஜுஷ்ட தத்வயஃ |
விபதே தஹிர் நைவஸ்ரா-
தோஷ உத்ராஹ கௌஶிகஃ ||

நாயது கறுத்த தானல் நாயிற்றுக் கிழமை யானல்
ஆயதோர் சுள்ளி யிட்டே யடுப்பினிற் சிவக்கக் காய்ச்சித்
தூயதாய்ச் சுடுகை யோடு சுப்புவுங் கூடி யுண்டால்
மாயமாய்ப் பறக்குந் தோஷம் கௌசிகன் வார்த்தை யாமே.

இதைக் கண்டதும் எல்லாரும் சாஸ்திரியாரின் பொல்லாத் தனத்துக்கும் அயோக்கியத்தனத்துக்கும் திறமைக்கும் பயந்து பேசாமல் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.